பக்கங்கள்: 18

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 13 சனிக்கிழமை 25.02.2023 கதிர் 108

**இனிது ரகசியம் அல்ல!**

நரம்பில்லாத நாக்கு எந்தப் பக்கம் வேண்டுமானாலும் பேசும் என்பார்களே, அது எப்படித்தான்அரசியல்வாதிகளுக்கு என்று அப்படியான நாக்கு வந்து அமைக்கிறதோ தெரியவில்லை. அரசியல் தீர்வு தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க

2

# உண்மையை கண்டறிவதற்கு சர்வதேச பொறிமுறை ஒன்றுமட்டுமே அவசியம்

### உள்நாட்டு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிராகரித்தார் சுமந்திரன் எம்.பி.



(எஸ்.நிதர்ஷன்)

உண்மை கண்டறியப்பட வேண்டுமானால் சர்வதேச பொறிமுறையே அவசியம் என தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்படுவ தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கியுள்ள பரிந்துரைகள் தொடர்பில் சேய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும்

17

### இந்திய மீனவருக்கு இலங்கைக் கடலில் மீன்பிடிக்க அனுமதிக்கும்

# கொழும்பின் முடிவை எதிர்த்து படகுகளுடன் வீதிக்கு இறங்க வடக்கு மீனவர்கள் முஸ்தீபு

### இன்று யாழ்ப்பாணத்தில் கூடி இறுதி முடிவு

**(ந.லோகதயாளன்)**

**இலங்கை கடற்பரப்பில் வாரத்தில் இரண்டு நாட்கள் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்குவதற்கான கொழும்பு ஆட்சியின் முடிவை எதிர்த்து வடக்கைச் சேர்ந்த 40இற்கும் மேற்பட்ட மீனவ அமைப்புக்கள் படகுகளுடன் வீதிக்கு இறங்கிப் போராடவுள்ளன. இது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்கான கூட்டம் இன்று யாழ். நகரில் உள்ள பிள்ளையார் இன்னில் நடக்கின்றது.**

2

# அரசியல் கைதிகளின் விடயத்தில் கீழ்த்தர அரசியல் செய்யக்கூடாது

### நீதி அமைச்சர் காட்டம்



தமிழ் அரசியல் கைதிகளை வைத்து தமிழ் அரசியல்வாதிகள் எவரும் அரசியல் நடத்தக்கூடாது என்று நாம் மீண்டும்

17

# மகிந்த ராஜபக்ஷ ஓய்வுபெற்று வீட்டிலிருப்பதே பொருத்தம்

### சுதந்திர மக்கள் கூட்டணி தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஓய்வுபெற்று வீட்டில் இருப்பதே மிகவும் பொருத்தமானது. அவர் அவ்வாறு செய்தால் மட்டுமே நாட்டுக்காக அவர் ஆற்றிய சேவைகளூடாகப் பெற்ற நற்பெயரை அவரால் பாதுகாத்துக்கொள்ள

17

# கிளிநொச்சி விபத்தில் ஒருவர் இறப்பு

கிளிநொச்சி, புளியம் பொக்கனையில் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழந்தார்.

விபத்தில் உயிரிழந்தவர் வட்டகச்சி பகுதியைச்சேர்ந்த கதிரவேலு யாதவராசா (வயது 58) என்று பொலிஸார்

18

# தேர்தலை ஒத்திவைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு ஒருபோதும் இல்லை

### அநுரகுமார சுட்டிக்காட்டு



தேர்தலை ஒத்திவைக்க ஜனாதிபதிக்கு ஒருபோதும் அதிகாரம் இல்லை. தேர்தல் குறித்துதேர்தல்கள்ஆணைக்குழுவே முடிவு செய்ய வேண்டும்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

18

# வசதி ஏதுமின்றி தனித்து விடப்பட்ட காஞ்சுரமோட்டை மக்களுக்கு உதவி

### அமெரிக்கா வாழ் தமிழர்களின் நிதியில் வழங்கப்பட்டது

(ந.லோகதயாளன்)

தமிழர் தாயகப் பகுதியின் எல்லையில் எந்தவித அடிப்படை வசதிகளும் இன்றி வாழும் மக்களுக்குஅத்தியாவசியப்பொருட்கள் உதவிகள் வழங்கப்பட்டன.

17

# நாடாளுமன்றில் சர்க்கஸ் கோமாளி போன்று நடந்துகொண்ட ஜனாதிபதி

### சுமந்திரன் எம்.பி. கடும் விமர்சனம்

(எஸ்.நிதர்ஷன்)

தேர்தல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்து கோமாளித்தனமானது எனக் கடுமையாக

17



காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக எல்லோரையும் கேட்டபோது தான் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று தீர்வு காணத் தயார் என்றார் மகிந்த ராஜபக்ச.

அதன் பின்னர் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் 13ஆவது திருத்தத்தைமுழுமையாகநடைமுறைப் படுத்தப்போகின்றேன் என்று ரணில் விக்கிரமசிங்க தடாலடியாகத் தெரிவிக்கப்போய், அதனால்நாடேசில நாள்கள் அல்லோல கல்லோலப்பட்ட நாட்களில் எல்லாம் தமிழ் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த மகிந்த ராஜபக்ஷ 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குத் தான் ஆதரவு என்றே தெரிவித்திருந்தார்.

ஆனால், வெள்ளிக்கிழமை கண்டியில் விகாரைகளில் வழிபாடுகளை முடித்துக்கொண்டுசெய்தியாளர்களிடம் பேசியமகிந்தராஜபக்ச இந்தவிடயத்தில் குரங்காட்டியின்கையிலிருக்கும்குரங்கு அடிக்கும் "பல்டி"யைவிட அற்புதமான பல்டி அடித்தார்.

"அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக ஆட்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டிய தேவை இல்லை என்று நாங்கள் குறிப்பிடுகிறோம். அதனையே நானும் கருதுகிறேன்" என்றார் மகிந்த.

தமிழர்களுக்கு ஒன்று சிங்களவர்களுக்கு ஒன்று. இங்கே தீர்வுக்குத் தயார் என்பது, அங்கு போய் தமிழர்களுக்கு எதுவும் கொடுக்கமாட்டோம் என்பது. இந்த சந்தர்ப்பவாத அரசியலாலேயே 75 வருடங்களாக நாட்டைச் சீரழித்துவிட்டார்கள். ஆனால் இன்னும் திருந்துகிறபாடாயில்லை.

*****

ஒரு காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தியோகபூர்வமற்ற சட்ட ஆலோசகர், ரணிலின் ஆட்சியையே காப்பாற்றி வைத்திருந்த ஆபத்பாந்தவன் என்று ஒரே நேரத்தில் போற்றப்பட்டும் தூற்றப்பட்டும் வந்தவர் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்.

கொழும்பில் 2019 வரைக்கும் ரணிலைச் சுற்றிமையம்கொண்டிருந்த அரசியல் சூறாவளிக்குள் எல்லாம் அவர்தான் கதாநாயகன். வெளியே மிகக் கடும் எதிர்ப்புக் காட்டப்பட்ட போதும்கூடத் துணிந்து ரணிலுக்காக வக்காலத்து வாங்கியவர். நேற்று ரணிலின் உள்நோக்கம் குறித்து சந்தேகம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த சுமந்திரன், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக ரணில் அறிவித்ததே, அதற்கு கடும் எதிர்ப்புக் காட்டப்பட்டதும் அதைச் சாக்குப் போக்காகக் காட்டி 13ஐ முழுமையாக நடைமுறைப் படுத்தாமல் விடும் நோக்கத்தோடுதான் என்ற சந்தேகம் இருக்கின்றது என்றார்.

அதனால்தான் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் அவரைக் குள்ளநரி என்று வர்ணித்தார். அரசியலில் தனிப்பட்ட பட்டறிவு அளவிற்கு அடுத்தவர்களின் அனுபவம் உட்பட வேறு எதுவும் சிறப்பானதாக இருக்காது போலும்.

*****

முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று விவகாரம் பிளையார் பிடிக்கப்போய் குரங்கான கதை மாதிரி இன்னும் சூறாவளியாகச் சுற்றிச் சுழன்றுகொண்டே இருக்கின்றது. முதலில் மாவையர் இந்தக் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவில்லை, அதனால் சுமந்திரன்தான் கட்சியின் எல்லா முடிவுகளையும் எடுக்கின்றார் என்று பதுங்கிய 'டி'யோடு கூடியா ரிஎன்ஏ காரர்கள் போட்டுத் தாக்கினார்கள். ஆனால் மாவையரும் அந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார் என்பது ஆதாரபூர்வமாகத் தெரியவந்ததை அடுத்து படக்கென்று தோசையைத் திருப்பிப் போட்டுவிட்டது அந்த அணி.

முஸ்லிம்களிடம் கொண்டுபோய் முல்லைத்தீவை தமிழ் அரசுக் கட்சி அடைவுவைத்துவிட்டதுஎன்றுமுழுமையாக இனவாதம் பேசிப் புறப்பட்டிருக்கிறது அந்தக் கட்சி. கிழக்கில் நடந்தது போன்ற நிலை முல்லைத்தீவிலும் வரும் என்று அவர்கள் போட்டுத்தாக்க வேறு வழியில்லாம், அது தொடர்பான விவரங்களை நேற்று யாழ்ப்பாணத்தில் வெளியிட்டார் சுமந்திரன்.

முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேச சபையில் ஐக்கிய தேசிய கூட்டமைப்புடன் இணைந்து தமிழரசுக் கட்சி போட்டியிட உள்ளதாகத் தெரிவித்துள்ள அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்

கரைத்துறைப்பற்று தேர்தல் தொடர்பில் தமிழ் அரசுக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்த வரைபு ஒன்று தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் விரைவில் அந்த ஒப்பந்தத்தில் இரு தரப்புக்களும் கைச்சாத்திட உள்ளதாகவும் கூறினார்.

கட்சிக்குக்கூடத் தெரியாமல் கரைத்துறைப்பற்று விடயத்தை சுமந்திரன் மட்டுமே கையாள்கிறார் என்று தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் தவராசா முன்வைத்த குற்றச்சாட்டு தொடர்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"ஐக்கிய தேசியக் கூட்டமைப்போடு இலங்கைத்தமிழரசுக் கட்சி ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கிறது. அது எழுத்து வடிவிலான ஒப்பந்தந்தமாகவும் நாங்கள் கைச்சாத்திடுவோம். அதில் என்ன விடயங்கள் இருக்க வேண்டுமென்பது குறித்து வரைபொன்றும் ஏற்கனவே வரையப்பட்டிருக்கின்றது.

கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்கான ஐக்கிய தேசியக் கூட்டமைப்பின் வேட்புமனுவிலே 24 நபர்களூடைய பெயர்கள் இருந்தது. அதில் இஜிராபுரம் என்ற ஒரு வட்டாரத்தைச் சேர்ந்த ஒருவரை தவிர மற்றைய 23 பேரும் ஏற்கனவே தேர்தலில் இருந்து விலகி தெரிவத்தாட்சிஅலுவலருக்குஅறிவித்துவிட்டார்கள்.

21 நாள்களின் பின்னர் அந்த விவரம் தெரிவத்தாட்சி அலுவலரால் வர்த்தமானியில் அறிவிக்கப்படும். அதன்படி ஐக்கிய தேசிய கூட்டமைப்பின் அந்த வேட்புமனுவிலே ஒரே ஒருவரின் பெயர்தான் மிஞ்சியிருக்கும்.

தேர்தலில் அந்தக் கட்சி வெற்றிபெறும் தொகுதிகளுக்கு அந்தக் கட்சியில் ஒருவர் தவிர வேறு எவரும் இல்லாதபட்சத்தில் அதன் செயலாளர் வேறு யாரை வேண்டுமானாலும் நியமிக்கலாம். அப்படித்தான் தமிழ் அரசுக் கட்சியினர் அந்த இடங்களுக்கு நியமிக்கப்படுவார்கள். இதுதான் எங்களுக்கு இடையிலான இணக்கப்பாடு.

இந்தப் பேச்சுவார்த்தை அல்லது புரிந்துணர்வு தொடர்பில் கட்சியின் மத்திய குழு கூடவில்லை. அரசியல் குழுவும் கூடவில்லை. ஆனால் கட்சியின் மனு நிராகரிக்கப்பட்ட பொழுது மீளவும் கட்சியினர் போட்டியிடுவதற்கு இரு வழிமுறைகள் இருப்பது எமக்கு தெரிய வந்தது.

அதனைப் பற்றி நான் கட்சித் தலைவரோடுதான் பேசினேன். அதற்கமைய இந்தச் செயற்பாட்டை உடனடியாக செய்யுமாறு கட்சித்தலைவர் என்னைப் பணித்திருந்தார். அதற்குப் பிறகுதான் நாங்கள் நீதிமன்றத்தை முதலில் நாடுவோம் என்ற தீர்மானத்தை எடுத்தோம்.

நீதிமன்ற செயற்பாட்டை செய்து பார்ப்பது அது தவறினால் அடுத்தபடியாக இந்த இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது என்று பேசியிருந்தோம். அதற்கமைய நீதிமன்றம் சென்றது பயனளிக்கவில்லை.

இதனையடுத்து இரண்டாவது தெரிவு குறித்து கட்சித் தலைவருக்கும் பொதுச் செயலாளருக்கும் தெரியப்படுத்தினேன். அது மட்டுமல்லாமல் அந்த மாவட்ட உறுப்பினர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டது. இதன் பின்னர் இது சம்பந்தமாக நடந்த கூட்டத்தில்கூட கட்சித் தலைவரும் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார். அரசியல் குழு கூட்டப்படவில்லை என்பது உண்மை. மத்திய செயற்குழுவும் கூட்டப்படவில்லை என்பதும் உண்மை. ஆனால் கட்சியின் தலைவர் பொதுச் செயலாளர் மட்டுமல்லாமல் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு கட்சியின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கும் சிவமோகனும் இதனைச் செய்யுமாறு கேட்டிருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட மட்டத்தினாலேயே இந்தக் கோரிக்கைகள் வந்த போது கட்சியின் வேண்டுகோளின் அடிப்படையிலே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது - என்றார்.

அதாவது இந்த விடயங்கள் எல்லாமே கட்சித் தலைவருக்கு தொடக்கத்தில் இருந்தே தெரியும் அதில் அவருக்கும் பங்கிருக்கிறது என்பதுதான் அவரது வாக்குமூலம்.

கட்சிக்குள் குப்பம் விளைவிப்பவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பேன் என்று வீரமுழக்கமிட்டவர் மாவையர். இப்போது அவருமே சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய ஒரு விடயம் வந்திருக்கிறது. என்ன நடந்தது என்பதும் யார் தவறுவிட்டிருக்கிறார்கள் என்பதும் தலைவருக்கே தெளிவாகத் தெரியும் புரியும். இந்த நிலையில் கட்சிக்குள் குழப்பம் விளைவித்தவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் துணிபு தலைவர் மாவையருக்கு இருக்கிறதா? இல்லையென்றால் "போராட்டம் வெடிக்கும்" என்கிற புஸ்வாணம் போன்றே இந்தப் பிரச்சினையும் முடிந்துவிடுமா?

தலை இருக்க வால் ஆடினால் இப்படித்தான்.

- இடிமின்னல் -

## திருட்டு சந்தேகநபர்கள் இருவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம் கட்டப்பிராயில் வீடுடைத்து 16 பவுண் தங்க நகைகளைத் திருடினார்கள் என்ற சந்தேகத்தில் இருவரை யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர். அவர்களிடமிருந்து திருட்டுப்போன சில நகைகள் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பெப்ரவரி 17ஆம் திகதி கட்டப்பிராயில் உள்ள ஓய்வுபெற்ற ஆசிரியர் வீட்டில் திருட்டு இடம்பெற்றதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது. உரிமையாளர்கள் வீட்டில் இரண்டு நாட்கள் இல்லாத சமயம், கதவை உடைத்து வீட்டில் இருந்த 16 பவுண் நகை களவாடப்பட்டதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் திருட்டுத் தொடர்பான சந்தேகநபர்களே யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் பொலிஸ் உப பரிசோதகர் பிரதீப் தலைமையிலான அணியினரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டுள்ளவர்களிடம் இருந்து திருடப்பட்ட நகைகளில் பல மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் நீண்டநாள்களாக போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என்றும் போதைப்பொருள் பாவனைக்காகவே திருட்டில் ஈடுபட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் நாயன்மார்கட்டை சேர்ந்த 24 வயதானவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## கொழும்பின் முடிவை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறும் இந்திய மீனவர்களால் இங்குள்ள மீனவர்களுக்குப் பெரும் பாதிப்புஏற்படுகின்றது. இந்திய இழுவை மடிப் படகுகள் இலங்கை எல்லைக்குள் வந்து தொழிற்செய்யும்போது எமது மீனவர்களின் வலைகள் உள்ளிட்ட மீன்பிடி உபகரணங்கள் பல லட்சக் கணக்கில் சேதமடைகின்றன. பல சமயங்களில் இந்தியப்படகுகளின் வருகையைக் கண்டு எமது மீனவர்கள் தொழிலுக்கே செல்லாத நிலைமையும் ஏற்படுகின்றது.

இந்தப்பிரச்சினைக்குத்தீர்வு காணப்படவேண்டும் என்று தொடர்ச்சியாக இரு நாட்டு அரசுகளுக்கும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. ஆனாலும் இது வரை இணக்கத்தீர்வு எட்டப்படவில்லை. இந்த நிலையில், அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த இந்திய மீன்வளத்துறை இணை அமைச்சர் எல்.முருகனுக்கும் இலங்கை மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களைத் தொடர்ந்து வாரத்தில் இரண்டு நாட்கள் இந்தியாவின் நாட்டுப் படகுகள் இலங்கைக் கடல் எல்லைக்குள் மீன்பிடிப்பதற்கான அனுதியை வழங்க இரு நாடுகளும் முயற்சிகளை எடுத்துள்ளன.

இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டால் அது வடக்கு மாகாண மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றிலுமாக அழிந்து போய்விடும் என்று தெரிவிக்கும் மீனவர் சங்கங்கள், அதற்கு எதிராகப் போராடத் தீர்மானித்துள்ளன. படகுகளுடன் வீதிக்கு இறங்கி மறியல் போராட்டத்தில் ஈடுபடுவதே அவர்களின் திட்டம்.

தொண்டமனாறு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசப் பிரதிநிதி நா.வர்ணகுலசிங்கம் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

(17ஆம் பக்கம் பார்க்க)



# விமானநிலைய பொலிஸாருக்கு ‘டிமிக்கி’விட்ட குற்ற சந்தேகநபர்

கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரின் பிடியிலிருந்து போலியான பெயரில் வெளிநாட்டுக்கு தப்பிச் செல்ல முயன்ற குற்றச்செயல்களுடன் தொடர்புடைய ஒருவர் தப்பிச் சென்றுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்த நபர் 24 ஆம் திகதி இரவு மற்றுமொரு நபருடன் வெளிநாடு செல்வதற்காக இரண்டு கார்களில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபருக்கு எதிராக இரண்டு வெளிநாட்டு பயணத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.




## காசோலை மோசடியில் ஈடுபட்ட நபர் கைது!

கொழும்பிலுள்ள நிறுவனமொன்றின் காசோலைகளை பயன்படுத்தி 53 லட்சத்துக்கும் அதிக பண மோசடி செய்த சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் அதே நிறுவனத்தில் தொழில் புரிபவர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மேற்படி நிறுவனத்தின் கணக்காளரால் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய குற்றத் தடுப்பு பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 43 வயதுடைய மொரட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். குற்றத்தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.






காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கழிவகற்றல் முகாமைத்துவத்திற்கு முழுமையான திட்டம் அவசியம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகளை அகற்றுவது தொடர்பான விவகாரம் மீண்டும் பேசு பொருளாகியிருக்கின்றது. ஆபத்தான இந்தக் கழிவுகளை எரியூட்டி அழிப்பதற்குப் பொருத்தமான ஓரிடம் இல்லை என்பதே பிரச்சினை. அதிக வெப்பநிலையில், பாதுகாப்பான முறையில் அழிக்கப்படவேண்டிய பொருட்கள் இவை. அதேநேரம் நாளாந்தம் பெருமளவில் சேரக்கூடிய பொருட்களும் கூட.

ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் இல்லாமை காரணமாக வரக்கூடிய இடர்பாடுகளின் விளைவுகளில் ஒன்றே இதுவும். யாழ்ப்பாண நகரம் அபிவிருத்தியடைந்த வேகத்திற்கு அதன் கழிவு முகாமைத்துவம் அபிவிருத்தி செய்யப்படவில்லை. யாழ்ப்பாண நகரக் கழிவுகளை எங்கே கொட்டுவது என்கிற பிரச்சினை நீண்ட காலமாகவே தொடர்கின்றது. காக்கைதீவில் தற்காலிகமாக கழிவு முகாமைத்துவத் தொகுதி ஒன்று உருவாக்கப்பட்டிருந்தாலும் அடுத்து வரும் ஐந்து அல்லது பத்து வருடங்களில் நகரம் துப்பக்கூடிய கழிவுகளை முகாமை செய்வதற்கு ஏற்ற கட்டமைப்பல்ல இது. எனவே மீண்டும் பிரச்சினை உருவாகும்.

அதுபோன்றே யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை கடந்த பத்தாண்டுகளில் மிப் பெரும் அபிவிருத்திகளைக் கண்டுள்ளது. பல கட்டடங்கள் எழுந்துள்ளன. பல்வேறு புதிய மருத்துவப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. வடக்கு, வடமத்தி, வடமேற்கு, கிழக்கு ஆகிய மாகாண மக்களுக்குமான நடுவண் மருத்துவநிலையமாக அது வளர்ந்திருக்கிறது. அனுராதபுரம், புத்தளம் மற்றும் கிழக்கில் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இருந்தெல்லாம் சிகிச்சைக்காக இங்கே வரத் தொடங்கிவிட்டார்கள். அதனால் அதன் பயன்பாடு அதிகரித்திருக்கிறது. அதற்கேற்ப அது வெளித்தள்ளும் கழிவும் அதிகரிக்கும்.

ஆனால், அதற்கேற்ற வகையில் அதன் கழிவ முகாமைத்துவத்தின் மீது அக்கறை செலுத்தப்பட்டிருக்கவில்லை. ஏற்கனவே நிறுவப்பட்ட கழிவு முகாமைத்துவ அமைப்புக்கள், கட்டுமானங்களும்கூடச் செம்மையாகப் பராமரிக்கப்படவில்லை. அவை தொடர்ந்தும் அபிவிருத்தி செய்யப்படவுமில்லை. இந்த முக்கிய குறைபாடே இன்றைய பிரச்சினைக்குரிய முதன்மைக் காரணம். இந்தப் பிரச்சினையில் தீர்வைத் தேடவேண்டிய, அதற்கான வழிவகைகளைக் கண்டுபிடித்து நிதி ஆதாரங்களைத் திரட்டவேண்டிய அரசியல்வாதிகள் சிறுபிள்ளைத் தனமாக எனது மாவட்டத்தில் கொண்டு வந்து கழிவுகளை எரிக்காதே என்று அறிக்கை விடுகின்றார்கள்.

மருத்துவக் கழிவுகளை எரிப்பதால் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது என்றால் அதனை எங்கு எரித்தாலும் அந்தப் பாதிப்பு ஏற்படத்தான் செய்யும். அதில் எனது மாவட்டத் தமிழர்கள் பாதிக்கப்படாதவரை சரிதான் என்ற ரீதியில் அரசியல்வாதிகள் செயற்படுவது கொடுமை. இந்தப் பிரச்சினைக்கான தீர்வைக் காண வேண்டிய பொறுப்புத் தங்களுக்குரியது என்ற அறிவு கூட இல்லாமல் அரசியல்வாதிகள் நடந்துகொள்வது வேதனைக்குரியது.

எனவே உரிய தரப்புக்கள் அனைத்தும் சேர்ந்து உடனடியாக யாழ்ப்பாணத்தின் கழிவு முகாமைத்துவத்துக்கான வினைத்திறனுள்ள, நீண்ட காலத் திட்டம் ஒன்றை உருவாக்கிச் செயற்படுத்துவதற்கு முன்வர வேண்டும். தம்மை அர்ப்பணித்துச் செயற்படவேண்டும். அப்போதுதான் மக்கள் நிம்மதியாக வாழமுடியும்.

# 1,137 உள்ளூராட்சி உறுப்பினர்களை புதிதாக நியமிக்க ஐ.தே.க. முயற்சி

## பாலித ரங்கே பண்டார அதிரடி



ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிட்டு வேறு கட்சிகளுக்கு ஆதரவளித்தமைக்காக கட்சியிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு பதிலாக, புதிய உறுப்பினர்களை நியமிக்கும் செயற்பாடுகள் இவ்வாரம் இடம்பெறவுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் 1137 பேரின் கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்டமையின் காரணமாக அவர்களின் உள்ளூராட்சிமன்ற உறுப்புரிமையும் இரத்தாகும் என்ற அடிப்படையில் , அவர்களுக்கு பதிலாக புதிய உறுப்பினர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிமன்றங்களின் தலைவர்கள் , நகரசபைத் தலைவர்கள் உள்ளிட்டவர்களும் இதில் உள்ளடங்குகின்றனர். கட்சியால் தெரிவு செய்யப்பட்டவர்கள் இவர்களுக்கு பதிலாக நியமிக்கப்படவுள்ளனர். இதற்கான நேர்முகத் தேர்வை நடத்தி தகுதியான நபர்களை தெரிவு செய்து , இடைவெளி ஏற்பட்டுள்ள பதவிகளுக்கு நியமிக்க கட்சி தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாடப் புத்தங்களை அச்சிடல் செலவு 4 மடங்கு அதிகரிப்பு!

## கல்வி அமைச்சர் சுசில் வேதனை



பாடசாலை பாடப்புத்தகங்களை மூன்று மொழிகளில் அச்சிடுவதற்கான செலவு கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் நான்கு மடங்கு அதிகரித்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

மாகாண மற்றும் வலய பாடசாலைகளுக்கான பாடசாலை சீருடை துணி விநியோகத்தை ஆரம்பித்து வைத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் கூறுகையில் –

பாடசாலை பாடப்புத்தகங்களின் விநியோகம் எதிர்வரும் மார்ச் 27 ஆம் திகதி நிறைவடையும்.

கடந்த வருடங்களில் பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கு 450 கோடி ரூபா செலவிடப்பட்டது, ஆனால் இந்த வருடம் அதற்கான செலவு 1600 கோடி ரூபா வரை அதிகரித்துள்ளது.

பாடப்புத்தக விநியோகம் ஏற்கனவே தொடங்கிவிட்டது, அவற்றில் பாதிக்கும் மேற்பட்டவை ஏற்கனவே அச்சிடப்பட்டவைகளாகும். மிகுதி புத்தகங்களை அச்சிட்டு முடித்த பின்னர், நாடு முழுவதும் உள்ள 48 லட்சம் பாடசாலை மாணவர்களுக்கு மார்ச் 27 ஆம் திகதிக்குள் விநியோகித்து முடிக்கப்படும்.

பாடப்புத்தகத் தேவையில் 45 சதவீதம் அரசாங்க அச்சக திணைக்களம் இந்தியக் கடன் உதவியுடன் மூலப் பொருள்களைக் கொள்முதல் செய்து, மீதமுள்ள 55 சதவீதத்தின் அச்சிடலுக்காக 22 தனியார் அச்சகங்கள் பங்களிப்பு செய்துள்ளன.

அரசாங்கத்திடம் பணம் இல்லாவிட்டாலும், மாணவர்களின் கல்விக்கு இடையூறு ஏற்படாமல் பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. – எனத் தெரிவித்துள்ளார்.

# நீர்கொழும்பு களப்பை சீரமைப்பது குறித்து அமைச்சர் டக்ளஸ் ஆய்வு





கொழும்பு, பெப்.26

நீர்கொழும்புக் களப்பை ஆழப்படுத்தும் செயற்பாடுகள் உரிய ஆய்வுகளின் அடிப்படையில், எந்தத் தரப்பினரையும் பாதிக்காத வகையில் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நீர்கொழும்பு களப்பின் 'யக்கா வங்குவ' எனும் பகுதியை பார்வையிட்ட பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

நீர்கொழுப்பு பிரதேசத்தைச் சேர்ந்த ஆழ்கடல் மீன்பிடி கடற்றொழிலாளர்களின் கடல் போக்குவரத்து பாதையாக இருக்கின்ற நீர்கொழும்பு களப்பின் 'யக்கா வங்குவ' பகுதியை புனரமைத்து தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதேவேளை, மேற்படி பகுதியில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுமாயின், அதனை அண்டிய பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கருவாடு உற்பத்தி பாதிக்கப்படும் எனவும், அதனால் பல குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனவும் இன்னொரு தரப்பினரால் கடற்றொழில் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.

இந்நிலையில், சம்பந்தப்பட்ட பகுதிக்கு அதிகாரிகள் சகிதம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நிலைமைகளை நேரடியாக ஆராய்ந்ததுடன், பிரதேச மக்களின் கருத்துக்களையும் கேட்டறிந்து கொண்டார்.

காலைக்கதிர் Kalaikkathir

மறைந்த ஊடகவியலாளர் பயஸின்

# தாயும் சிறிய தாயாருமே கருகிய நிலையில் மீட்பு!

ஊர்காவற்றுறையில் உடல் கருகிய நிலையில் மீட்கப்பட்ட இரு பெண்ககளும் மறைந்த ஊடகவியலாளரும் கருத்தோவியருமான பயஸின் தாய் மற்றும் சிறிய தாயார் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்திற்கு 200 மீட்டர்கள் தொலைவில் உள்ள வீட்டில் இருந்து தீயில் கருகிய நிலையில் இரு வயோதிபப் பெண்களின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டன.

வயது முதிர்ந்த சகோதரிகளான மனுவேற்பிள்ளை அசலின் பௌலினா (வயது 79) அவரது தங்கையான யேசுதாசன் விக்ரோரியா ஆகியோரின் சடலங்களே மீட்கப்பட்டு உடற்கூறாய்வுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் நீண்டகாலமாக தனித்தே வாழ்ந்து வந்தனர். தாளா முதுமையினால் தமது உறவினர் ஒருவருடன் சேர்ந்து வாழப் போவதாக அண்மையில் பிரதேச செய லகத்திற்குச் சென்று உதவி கேட்டுள்ளனர்.

அவர்கள் உதவி கேட்ட உறவினர், உடனடியாக அவர்களைத் தன்னோடு வைத்திருக்கக்கூடிய வீட்டு வசதிகளைக் கொண்டிருக்காத காரணத்தால் அவர்களை கிளிநொச்சியில் உள்ள முதியோர் இல்லம் ஒன்றில் சேர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வந்தார். அதுவரையில் இருவரையும் பார்த்து உணவு கொடுப்பதற்கும் பிற உதவிகளைச் செய்வதற்கும் அங்குள்ள அருட்சகோதரி ஒருவரையும் ஏற்பாடு செய்திருந்தார்.

இந்த நிலையிலேயே அவர்கள் இருவரும் சனிக்கிழமை காலை எரிந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டனர். காலையில் அவர்களைப் பார்ப்பதற்கு அருட்சகோதரி சென்றபோதே அவர்கள் உயிரிழந்த விவரம் தெரியவந்திருக்கிறது.

# உலகத் தரவரிசையில் பேராதனைக்கும் இடம்!

உலக பல்கலைக்கழகங்களின் 'யுஎஸ் நியூஸ் இன்ஸ்டிட்யூட்டின்' தரவரிசையின்படி உலகின் தலைசிறந்த 1,000 பல்கலைக்கழகங்களில் பேராதனைப் பல்கலைக்கழகம் இடம்பிடித்துள்ளது.

உலகளாவிய பல்கலைக்கழகங்களின் தரவரிசையின்படி, பேராதனை பல்கலைக்கழகம் உலகளவில் 901 ஆவது இடத்தையும் ஆசியாவில் 240 ஆவது இடத்தையும் பிடித்துள்ளதாக பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எம்.டி. லமவன்ஸ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இவ்வாறானதொரு புதிய அங்கீகாரத்தை பெற்ற முதலாவது பல்கலைக்கழகம் பேராதனை எனவும் பேராசிரியர் பாராட்டியுள்ளார்.

உலகப் பல்கலைக்கழகங்கள் அவற்றின் செயல்பாட்டின் அடிப்படையில் பதின்மூன்று சிறந்த குறிகாட்டிகள் மூலம் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் இந்த குறிகாட்டிகளில் உலகளாவிய ஆராய்ச்சி நற்பெயர், பிராந்திய ஆராய்ச்சி புகழ், வெளியீடுகள், மாநாடுகள் போன்றவை அடங்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கைப் பேராசிரியருக்கு அமெரிக்காவில் கௌரவம்!

இலங்கையில் பிறந்த பேராசிரியர் எண்டனி எங்கிக்கு அமெரிக்க சர்வதேச சட்ட சங்கம் கௌரவ விருது வழங்கியுள்ளது.

சர்வதேச சட்டத்தில் அவர் ஆற்றிய சிறப்பான பங்களிப்பிற்காக அவருக்கு 'மேன்லி – ஓ. – ஹட்சன்' பதக்கம் வழங்கப்பட்டுள்ளதாக சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.



பேராசிரியர் எண்டனி எங்கி தற்போது சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் பணிபுரிகிறார்.

தமக்கு கிடைத்துள்ள கௌரவப் பதக்கம் தொடர்பில் கருத்து தெரிவித்த பேராசிரியர், இது எதிர்பாராத கௌரவம் எனத் தெரிவித்தார்.







# பட்டதாரிகளுக்கு என்ன தொழில் வழங்கலாம் என்பது தொடர்பில் சரியான திட்டம் இல்லை!

## பட்டிருப்பு வலயக் கல்வி பணிப்பாளர் வேதனை



பட்டதாரிகளுக்கு என்ன தொழில் வழங்கலாம் என்பது தொடர்பில் சரியான திட்டம் இந்த நாட்டிலே இல்லை என பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு – பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலகத்தின் கீழுள்ள பாடசலைகளிலிருந்து இம்முறை க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு பட்டிருப்பு வலயக் கல்வி கலுவலகத்தின் முறைசாராக் கல்விப் பகுதியினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தொழில் வழிகாட்டல் ஆலோசனை மாநாடு களுதாவளை மகாவித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றிருந்தது.

இதன்போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் எந்தக் கல்வி வலயமும் மேற்கொள்ளாத செயற்பாட்டை முதன் முதலில் நாம் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தால் முன்னெடுத்திருக்கின்றோம்.

உயர்தரப் பரீட்சை எழுதிய பின்னர் மாணவர்கள் வீணாகப் பொழுதைக் கழிக்காமல் தொழில் உலகுக்காகத் தயார்படுத்த வேண்டிய பொறுப்பு மாணவர்களிடத்தில் உள்ளது.

மாணவர்கள் இந்த தேசத்தின் சொத்துக்கள், எதிர்காலத்தில் பதவிகளை அலங்கரிக்கப் போகின்ற அணிகலன்கள்.

21 ஆம் நூற்றாண்டில் தொழில் உலகை எதிர்பார்க்கின்ற விடையம் பலரிடம், குறைவாகவும், அது இல்லாமலுமுள்ளன. நாட்டிலே அதிகளவு பட்டதாரிகள் உள்ளார்கள்.

பட்டதாரிகளுக்கு என்ன தொழில் வழங்கலாம் என்பது தொடர்பில் சரியான திட்டம் இந்த நாட்டிலே இல்லை. அவர்களுடைய திறன்களை சரியாக இனங்காண்பதற்கான பொறிமுறைகள் இல்லை.

ஒவ்வொரு பட்டங்களையும் பெறுபவர்கள் வித்தியாசமான திறமைசாலிகள். அவர்களுக்குரிய தொழில் நிலைமைகள் இங்கு வகுக்கப்படவில்லை.

இவை அனைத்துக்கும் நாட்டிலுள்ள பொதுக் கல்வி தொடக்கம் பல்கலைக் கழகக் கல்வி வரையிலான சில மாற்றங்கள் தேவைப்படுகின்றன.

நாட்டிலே என்ன தொழில் பெறலாம் என்பதற்கு அப்பால் இந்த உலகத்திலே என்ன தொழில் பெறலாம் என சிந்தித்து பிள்ளைகளுக்குக் கல்வி கொடுக்க வேண்டிய தார்மீக பெறுப்பு கல்விப் பணியாளர்களுக்கு உள்ளது.

இந்த உலகத்திலே தொழில் இல்லாமலில்லை. ஆனால் தொழில்களைப் பெறுவதற்கு ஏற்ற திறன்கள் ஏற்படுத்தப்படவில்லை என்பதுதான் குற்றச்சாட்டாகவுள்ளது.

ஒருவேளை நமது நாட்டின் கல்வி முறைமையில் குறைபாடாக இருந்தாலும், பாடசாலைக் கல்வி முதல் பல்கலைக் கழகக் கல்வி, தொழில் கல்வி வரைக்கும் பல புதிய நடைமுறைகளை செயற்படுத்தத் தொடங்கியுள்ளார்கள்.

பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலகத்தின் கீழுள்ள 70 பாடசாலைகளில் 40 பாடசாலைகள் இடைநிலைப் பாடசாலைகளாகவுள்ளன. 23 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கின்ற இந்த வலையத்திலே 958 மாணவர்கள் இந்த வருடம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியிருக்கின்றார்கள்.

958 மாணவர்களும், பரீட்சை எழுதிய பின்னர் ஆசிரியர்களின் கைகளிலிருந்து விடுபட்டு விட்டார்கள் என்பது அர்த்தமல்ல.

அவர்கள் அனைவரும், பல்கலைக்கழகம், பல்கலைக்கழக கல்லூரி, கல்வியியற் கல்லூரி, தொழில்நுட்பக்கல்லூரி, உள்ளிட்ட ஏதோ ஒரு துறைக்குச் செல்லும் வரை எமது கவனம் செலுத்தப்பட்டுக் கொண்டே இருக்கும்.

அது எமது ஆசிரியர்களினதும், கல்வி அதிகாரிகளினதும் மிகப்பெரிய பொறுப்பாகும். இதற்காக இந்த வலயத்தில் 5 மத்திய நிலையங்களில் இந்த தொழில் வழிகாட்டல் மாநாடுகள் நடைபெறுகின்றன.

கடந்த காலங்களிலே உயர்தரம் எழுத்திய மாணவர்கள் 3 வருடங்கள் கழிந்த பின்னர்தான் பல்கலைக் கழகங்களுக்குச் சென்றார்கள். தற்போது பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு அந்த நிலைமையை மாற்றியிருக்கின்றது. கடந்த வருடத்திலே பல்கலைக் கழகங்களுக்குச் செல்வதற்கு 30 ஆயிரம் மாணர்வர்கள்தான் தேர்வு செய்யப்பட்டார்கள். 42 ஆயிரத்து 500 மாணவர்கள் இந்த வருடம் பல்கலைக் கழகங்களுக்குத் தேர்வு செய்யப்படவுள்ளார்கள்.

உயர்தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் அனைவரும் பல்கலைக் கழகங்களுககுச் செல்ல முடியாது இங்கு அதற்குரிய வசதிகளும் இல்லை, பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கையும் குறைவு. அங்குள்ள வசதி வாய்ப்புக்களும் மிகவும் குறைவு என்றும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இதன்போது மிகவும் திறமை வாய்ந்த அதிகாரிகளால் பல்கலைக் கழகங்களுக்கு விண்ணப்பிப்பது எவ்வாறு, எந்த எந்த பாடங்களுக்கு எந்த பல்கலைக் கழகங்களுக்கு விண்ணப்பிக்கலாம், பல்கலைக் கழகம் கிடைக்கப் பெறாத மாணவர்கள் எவ்வாறு பல்கலைக் கழகக் கல்லூரிகள், கல்வியியற் கல்லூரிகள், உயர் தொழில் நுட்பக் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு விண்ணப்பிப்பது போன்ற பல விளக்கங்களும், தெளிவூட்டல்கள் வழங்கி வைக்கப்பட்டன.


**Jaffna College Institute of Technology**

**பின்வரும் பாடநெறிகள் Feb. மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட உள்ளன.**

**1. Computer Certificate Courses ( 3 – 4 months Part time)**

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (Page Maker, Photo Shop & CorelDraw)
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

**2. Civil Draftsperson ( one year )**

Minimum Qualification Passed G.C.E.(O/L) with pass in Mathematics & English

Course leads to:

*Follow courses in level 5

**3. FIT - pre degree Programme for University of Colombo IT degree.**

Qualification GCE(O/L)

**4. Certificate in Craft Courses (6 மாதங்கள் முழு நேரம் -தமிழ் மொழி மூலம்)**

- குளிரூட்டுதல் பயிற்சி நெறி -Refrigeration & Air-Conditioning Mechanic
- அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும்- NVQ Level -3 (Accredited) –Aluminum Fabricator
- மின்னியலாளர் (Certificate in Electrician)- NVQ பாடத்திட்டத்தை தழுவியது

Our Civil Draftsperson & Computer courses will be held in our Jaffna centre along 464 Hospital Road, Jaffna too

மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது.

(TVEC ) பதிவு இலக்கம் : P25/0014, Facilities : Library & Sports

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க

**Director**
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai. Tel. no: 0212250975 / 0212223382.**


# ஊடகவியலாளர் கௌரவிப்பு











வடக்கு மாகாணத்தில் பல சவால்களின் மத்தியிலும், அச்சுறுத்தல்களையும் தாண்டி மக்களின் உரிமைக்காக பணியாற்றிவருகின்ற மனித நேய ஊடகவியலாளர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கௌரவிப்பு நிகழ்வில் மக்களின் உரிமைகளப் பாதுகாப்பதற்காக மனித நேயத்தோடும், அர்ப்பணிப்போடும் தமது கடமைகளை வகைப்பொறுப்போடு முன்னெடுத்துவரும் தெரிவுசெய்யப்பட்ட வடக்கு மாகாண ஊடகவியலாளர்களே இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த ஊடகவியலாளர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்டத்தின் ஊடகவியலாளர் பாலநாதன் சதீசன், முல்லைத்தீவு மாவட்டத்தின் ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன், கிளிநொச்சி மாவட்டத்தின் ஊடகவியலாளர் கதிரவேலு இரவீந்திரராசா, மன்னார் மாவட்டத்தின் ஊடகவியலாளர்களான றொசேரியன் லெம்பேட் மற்றும் யூட் பெலிஸ்ரஸ் பச்சேக், யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஊடகவியலாளர்களானசுமித்தி தங்கராசா, தம்பித்துரை பிரதீபன், முருகப்பெருமான் மதிவாணன், தங்கவேல் சுமன், நடராசா குகராஜ், விஜயகுமார் லோஜன், இளயகுட்டி சாரங்கன், கந்தசாமி பரதன், தங்கராசா காணடீபன் உள்ளிட்ட ஊடகவியலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# இந்தியாவை நம்பும் அமெரிக்கா

உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வர ரஷ்யா உடனான நட்பை இந்தியா பயன்படுத்தும் என்று தான் நம்புகிறார் என்று அமெரிக்க வெளியுறவுத் துறை துணை அமைச்சர் டொனால்ட் லு தெரிவித்தார்.

உக்ரைன் போர் தொடங்கி ஓராண்டு முடிந்துள்ள நிலையில், இது தொடர்பாக டொனால்ட் லு செய்தியாளர்களிடம் பேசினார். அவர் தெரிவித்ததாவது:

ரஷ்யாவுடன் இந்தியாவுக்கு மிக நீண்ட கால நட்பு இருக்கிறது. பனிப்போர் காலத்தில் இருந்தே இரு நாடுகளுக்கும் இடையே ஆழமான, மிக நீண்ட நட்பு இருந்து வருகிறது. உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வர ரஷ்யாவிடம் தனக்கு இருக்கும் செல்வாக்கை இந்தியா பயன் படுத்தும் என்று நம்புகிறோம்.

ஒரு நாட்டின் இறையாண்மை, அதன் பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவை தொடர்பாக ஐநா சாசனத்தில் சொல்லப்பட்டிருப் பதை கருத்தில் கொண்டு இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று இந்திய வெளி யுறவு அமைச்சர் ஜெய்சங்கர் ஏற்கனவே கூறி இருக்கிறார்– என டொனால்ட் லு தெரிவித்தார்.

இந்தியாவில் நடைபெறும் ஜி–20 வெளியுறவுத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்க வரும் மார்ச் முதலாம் திகதி அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆன்டனி பிளிங்கன் புதுடெல்லி வர இருக்கிறார்.

இதை சுட்டிக்காட்டி, இந்தியா வரும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆன்டனி பிளிங்கன், போரை முடிவுக்குக் கொண்டு வர முயலுமாறு இந்தியாவிடம் அவர் கோரிக்கை வைப்பாரா என செய்தியாளர்கள் கேள்வி எழுப் பினர். அதற்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.



## பொருளாதார நெருக்கடி தீவிரத்தால் பாக். அமைச்சர்களுக்குக் கட்டுப்பாடு



பொருளாதார நெருக்கடியால் பாகிஸ்தான் அரசு பல்வேறு சிக்கன நடவடிக்கைகளை கையாண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக பாகிஸ்தான் அமை ச்சர்கள் அலுவலக ரீதியாகப் பயணம் செல்லும்போது, விமானத்தில் பிசினஸ் வகுப்புகளில் பயணிக்கவும், 5 நட்சத்திர விடுதிகளில் தங்கவும் தடை விதிக் கப்பட்டுள்ளது.

அமைச்சர்களின் ஊதியத்தையும் குறைக்க பிரதமர் பொஸ் ரெீப் தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. பிரதமர் பொஸ் ரெீப், அமைச்சர்கள், அரசு ஆலோசகர்களின் செலவுகளை 15 சதவீத அளவுக்கு குறைத்து ஆண்டுக்கு ரூ.6 ஆயிரம் கோடி அளவுக்கு மீதப்படுத்த பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது.

இது குறித்து பிரதமர் ரெீப் கூறும்போது, நாட்டைக் காப்பாற்ற பல்வேறு நடவடிக்கை களைஎடுத்து வருகிறோம். மேலும் 76.4 கோடி அமெரிக்க டாலர் அளவுக்கு செலவுகளைக் குறைக்கும் திட்டத்தையும் முன்னெடுத்துள்ளோம். தவிர 6.5 பில்லியன் அமெ ரிக்க டாலர்களை சர்வதேச செலாவணி நிதியத்திடம் கடனாகக் கேட்டுள்ளோம்" என்று தெரிவித்தார்.

## ரஷ்யா – உக்ரைன் பேச்சு நடத்தி போர் விரைவில் முடியவேண்டும்

### சீன அதிபர் வலியுறுத்து



போரைமுடிவுக்குக்கொண்டுவர ரஷ்யாவும், உக்ரைனும் விரைவாக பேச்சுக்களில் ஈடுபடவேண்டும் என்றும், அனைத்து நாடுகளும் இதற்கு ஆதரவு அளிக்கவேண்டும் என்றும் சீனா வலியுறுத்தியுள்ளது.

உக்ரைனுக்குள் ரஷ்யப் படைகள் நுழைந்து தாக்குதல் நடத்தத் தொடங்கி ஓராண்டு நிறைவடைந்திருப்பதை முன் னிட்டு, இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பாக சீனா 12 அம்ச செயல் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது. அதில் குறிப் பிடப்பட்டிருப்பதாவது:

அனைத்து நாடுகளின் இறையாண்மை, சுதந்திரம், பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவை உறுதிப்படுத்தப்படவேண்டும். (ஹிபுவீநு) கூட்டு ராணுவத்தை வலுப்படுத்துவதன் மூலமோ விரிவுபடுத்துவதன் மூலமோ ஒரு பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்திவிட முடியாது.

மோதலோ போரோ ஒரு வருக்கும் நன்மையை அளிக்காது. எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக ரஷ்யாவும் உக்ரைனும் அமைதி பேச்சில் ஈடுபடவேண்டும். அமைதியை ஏற்படுத்துவதற்கான ஒரே தி சையில் இந்தப் பேச்சு நடை பெறவேண்டும். இந்தப் பேச்சுக்கு அனைத்து நாடுகளும் ஆதரவு அளிக்கவேண்டும். இதன் மூலம் படிப்படியாக பதற்றம் குறைந்து போர் நிறுத்தம் ஏற்படுவதற்கான வழிவகைகளைக் காண வேண் டும்.

பேச்சும் விட்டுக்கொடுத்தலுமே உக்ரைன் பிரச்சினைக்கு ஒரே தீர்வாக இருக்க முடியும். இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதற்கு சீனாவின் உறுதியான ஆதரவு தொடரும்– எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, சீனாவின் இந்த செயல்திட்டத்தை அமெரிக்கா விமர் சித்துள்ளது. ''உக்ரைனுக்குள் ரஷ்யா ஊடுருவியதற்கு மேற்கத்தி யநாடுகளும்நேட்டோஅமைப்புமே மறைமுக காரணம்; அவைதான் போரை தூண்டின என மேற்கத்தி ய நாடுகளுக்கும் நேட்டோவுக்கும் எதிராக கருத்துக்களைக் கூறி வந்த நாடு சீனா. இதன் மூலம், சீனா ஒரு சார்பான நிலைப்பாட்டை ஏற் கெனவே எடுத்துவிட்டது'' என அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

## பணமதிப்பிழப்புக்கு மதியில் நைஜீரியாவில் அதிபர் தேர்தல்

பணமதிப்பிழப்பு நட வடிக்கையால் கடும் பொருளாதார பிரச்னையை சந்தித்திருக்கும் நிலையில், நைஜீரியாவில் அதிபர் தேர்தல் நடைபெறுகிறது. எதிர் பார்த்ததைவிடவும் குறைவான வாக்குகள் பதிவாகும் அபாயம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆப்ரிக்காவிலேயே மிக அதிக மக்கள் தொகை கொண்ட நாடான நைஜீரியாவில் பணமதிப்பிழப்பு நடவடிக்கை அறிவிக்கப்பட்ட தால், அங்கு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

இந்தநிலையில்,திட்டமிட்டபடி சனிக்கிழமை காலை நைஜீரியாவில் அதிபருக்கான வாக்குப்பதிவு தொடங்கியது. சில வாக்குப்பதிவு மையங்களுக்கு அதிகாரிகள் உரிய நேரத்தில் வராததாலும், சில இடங்களில் இணையதள சேவை கிடைக்காததாலும் வாக்குப்பதிவு தொடங்குவதில் சிக்கல் நில வியது.

மக்கள் பலரும் கையில் பணமில் லாததால் வாக்குச்சாவடிக்கு வருவதே சிக்கலாகியிருப்பதாக வாக்காளர்கள் தெரிவித்துள்ளனர். ஆப்ரிக்காவின் மிகப்பெரிய பொரு ளாதார பலம் வாய்ந்த நாடான நைஜீரியாவில் நடைபெறும் வாக்குப்பதிவு பல தரப்பினராலும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. நைஜீரியா மிக முன்னணி எண் ணெய் உற்பத்தி நாடாகவும் உள்ளது.

## ஸ்பெயினில்பெண்களுக்கு இனிமேல் சிறப்புச் சலுகை

ஸ்பெயின் நாட்டில் பெண்கள் மாத விடாய் நாட்களில் சம்பளத்துடன் கூடிய விடுப்பு எடுத்துக்கொள்ள வழிவகை செய்யும் சட்டத்திற்கு அந் நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கி யுள்ளது.

இதன் மூலம், பெண்களுக்கு பணிக்காலங்களில் மாதவிடாய்க்கு விடுமுறை அளித்துள்ள முதல் ஐரோப்பிய நாடு என்ற பெருமை ஸ்பெயினுக்கு கிடைத்துள்ளது.

மாதவிடாய் காலத்தில் பணிக்கு செல்லும் பெண்களின் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவ தற்காக அவர்களுக்கு விடுப்பு வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாகவே உலக அளவில் இருந்து வருகிறது அந்த வகையில் இதற்கான அரசியல் ரீதி யான முன்னெடுப்பை ஐரோப்பா அளவில் ஸ்பெயின் எடுத்துள்ளது.

பெண்கள் மாதவிடாய் நாட்களில் சம்பளத்துடன் கூடிய விடுப்பு எடுத்துக்கொள்ள வழிவகை செய்யும் சட்டவரைவு ஸ்பெயின் நாடாளும ன்றத்தில் கொண்டுவரப்பட்டு ஒரும னதாக நிறைவேற்றப்பட்டது. மசோதாவுக்கு ஆதரவாக 185 பேரும், எதிராக 154 பேரும் வாக்களித் தனர்.

# விழித்திரு உறக்கமே
# “நீ என்ன தேவையில்லாம கதைக்கிறாய்”




- சங்கீர்த்தனா அருளாநந்தம் -

பொறுப்புடமை என்பது என்னவென்று எல்லோரிடமும் கேட்கத் தேவையில்லை. ஏனென்றால் நாங்கள் எல்லோரும் சமூக பொறுப்போடு தான் இருக்கிறோம் என்று கூறுபவர்கள் தான் இங்கு அதிகம். வெறுமனே தெருவில் கிடக்கும் ஒரு குப்பையை எடுத்து குப்பைகள் அதிகமாக கொட்டப்பட்ட இடத்தில் போட்டு விட்டு போனால் அது சமூகப் பொறுப்புணர்வு என்று ஆகிவிடாது. இன்று அதிக குப்பைகள் ஒன்று சேர்ந்து தான் நாட்டை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது. அதை சேரவிடாமல் பிரித்துப் பதப்படுத்தினால் சுற்றுச்சூழலும் நன்றாக இருக்கும் சமூகம் சேர்ந்த நாடும் நன்றாக இருக்கும். ஆனால் அந்த குப்பையை வேறொரு இடத்தில் போட்டால் எனது வீடு சுத்தமாக இருக்கும் என்று எண்ணி அதைத் தெருவில் போடுபவர்கள் எமது நாடு சுத்தமாக இருக்க தேவையில்லை என்று எண்ணியா போடுகிறார்கள்? அல்லது தெருவில் கிடப்பதை அகற்றுவது என்னுடைய பொறுப்பல்ல என்று நினைக்கிறார்களா? இங்கே பொறுப்புடமை என்பது எது? சுயநலம், பொதுநலம் என்பது எது? அனைத்து கேள்விகளுக்கும் ஒரு குப்பையை வைத்து எம்மால் பதில் சொல்ல முடியும். ஆனால் பதில் சொல்ல தெரிந்த எம் எல்லோரும் அந்த செயற்பாட்டைச் செய்துகொண்டுதான் இருக்கிறோம்.

ஒரு நாள் ஒரு நபர் என்னிடம் வந்து பொது மக்கள்



என்பவர்கள் யார் என்று கேட்டார். அரசியல்வாதிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான வித்தியாசம் என்ன என்று கேட்டார். பொது மக்கள் என்பவர்கள் தமது பொறுப்பறிந்து நடந்து கொள்பவர்கள். அரசியல் பேசாத வரையில் அவர்கள் பொது மக்களாக இருப்பார்கள் என்று கூறினேன். ஆனால் காலம் கடந்து அந்த பதிலை தவறென புரிந்து கொண்டேன். எமக்கான தலைவர் யார் என்பதை கண்டறிய வேண்டியது எம்முடைய பொறுப்பாக இருக்கிறது. இதுவும் ஒருவகை பொறுப்புடமை தான்.



ஆனால் இவ்வாறான எமது கட்டாய பொறுப்புகளை எம்மை அறியாமலேயே நாம் தவற விட்டுக் கொண்டிருக்கிறோம் என்பது தான் நிதர்சனமான உண்மையாக



இருக்கிறது.

ஒரு குடும்பத்தில் ஒரு குடும்பத்தலைவன் சரியான முறையில் தனது பொறுப்புகளை செய்து வந்தால் குடும்பத்தில் இருப்பவர்களும் பொறுப்புணர்வோடு தனது கடமையை அறிந்து செயல்படுவார்கள் என்பது



ஒரு பொதுவான நியதி ஆகும். அதே சமயம் குடும்பத்தலைவன் சரியில்லை என்றால் அவரது பிள்ளைகளும் வழி தவறிப் போவார்கள் என்பது ஒரு பொதுவான கருத்தாக இருக்கிறது. ஆனால் எனது அனுபவப்படி கூறினால் குடும்பத் தலைவன் தனது பிள்ளைகளுக்கு சரியான வழியை காட்டவில்லை. தனது பொறுப்பு அறிந்து செயற்படவில்லை. ஆனால் அதற்கு எதிர்மாறாக பிள்ளைகள் பொறுப்போடு செயற்படுகிறார்கள் என்றால் இது சாத்தியமில்லை என்றுதான் வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு தெரியும் இதே விடயத்தை நம் செயற்பாடு ஒவ்வொன்றிலும் இணைத்துப் பார்த்தால் இங்கே ஒரு விடயம் புலப்படுகிறது. அதாவது வெளித்தோற்றம் என்பது இங்கே பொதுவாக இருக்கிறது.

ஆம், எம் செயற்பாடு ஒவ்வொன்றிலும் உள்ள ஒரு வெளித்தோற்றம் தான் இங்கே பொதுவில் இருக்கிறது. நீங்கள் கேட்கலாம் வெளித்தோற்றத்திற்கும் சமூகப் பொறுப்புணர்விற்கும் என்ன தொடர்பென்று, நான் ஆரம்பத்தில் கூறிய அதே உதாரணத்தை இப்போதும் கூறுகிறேன். அதாவது தெருவில் கிடக்கும் குப்பையை எடுத்து ஏற்கனவே குப்பைகள் கொட்டப்பட்ட இடத்தில் போட்டு விட்டு போனால் அதைப் பார்ப்பவர்கள் அவர் சமூகப் பொறுப்புணர்வுடன் செயற்படுகிறார் என்றுதான் காட்சி அமைக்கப்படும்.

ஆனால் அந்த குப்பையை அங்கே போட்டால் எமது சமூகம் தான் பாதிக்கப்படும் என்று அறியாமலேயே அங்கு அந்த குப்பையை போட்டு செல்கிறார் என்பது அவருக்கும் தெரியாது பார்ப்பவர்களுக்கும் தெரியாது. இங்கே வெளித் தோற்றம் ஒன்று தான் முதலிடத்தில் இருக்கிறது.

தற்காலத்தில் போலிகள் என்பது நிரம்பி வழிகிறது. எது போலி எது உண்மை என்று கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு ஒவ்வொன்றும் மாறுபட்டுக் கொண்டு வருகிறது. அதை கண்டறிந்து கொள்ளவும் மக்களால் முடிவதில்லை. “போலிகளுக்கு ஏமாறாதீர்கள்” என்பதை நாம் எல்லோரும் பல இடத்தில் கேட்டிருப்போம். வெளித் தோற்றத்திற்கு உண்மை போலத் தெரிந்தாலும் அதன் உள்ளே ஒரு போலி ஒளிந்திருக்கிறது என்பதை நாம் மறக்கிறோமா? அல்லது மறைக்கிறோமா?

ஒருவர் ஒரு விடயத்தை எமக்கு செய்து தந்தால் அவர் எமது நன்மைக்கு செய்கிறாரா அல்லது எம்மால் அவருக்கு ஏதேனும் ஆக வேண்டியுள்ளதா என்று ஆராயாமல் அதை நம்புகிறோம். ஒரு பொருள் நமக்கு தீமைதான் இழைக்கப் போகிறது என்று அறிந்தும் அதை நாம் வாங்குகிறோம் என்றால் அதன் வெளித் தோற்றத்தை



நாம் நம்புகிறோமோ? பல போலிகள் இன்று எமது நாட்டில் உள்ளது. அந்த போலிகளை மூட்டை கட்டாமல் வெறுமனே பொய்யை நம்பி அவற்றிற்கு இடம் கொடுப்பதென்பது எம் எல்லோரையும் முட்டாளாக்கும் செயற்பாடாகும். இந்த வெளிப்பூச்சை நாம் துடைத்தெறிய வேண்டுமானால் பொறுப்புணர்வு எனும் ஒரு கருவி தேவைப்படுகிறது. இதன் மூலம் நீ என்னதான் சொல்ல வருகிறாய் என்று எவரும் குழம்ப தேவையில்லை. மிகவும் எளிதாகவே கூறுகிறேன்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் எவ்வாறு ஒரு சிறந்த தலைவன் தேவைப்படுகிறானோ, அவ்வாறே நாட்டிற்கும். நாம் எல்லோரும் கண்களைத் திறந்தபடியே உறங்கிக் கொண்டு இருக்கிறோம். நடமாடிய படியே நடைப்பிணமாய் இருக்கிறோம். ஒரு மயக்க நிலையில் இருக்கின்ற எம்மை தண்ணீர் தெளித்து தெளிய வைக்க எவரும் வரப்போவதில்லை. நாமாக எழுந்தால் தான் உண்டு. நீண்ட உறக்கத்திற்கு செல்லும் முன் ஏதேனும் ஒன்றை பொறுப்போடு செய்துவிட்டு செல்லவேண்டும். அந்த ஏதேனும் ஒன்று சுயநலம் கருதி அல்லாமல் பொது நலம் கருதி செய்வதாக இருக்க வேண்டும்.

பொறுப்புணர்வோடு போலிகளை அகற்றவேண்டும். சிந்தனைகளையும் விரிவுபடுத்தி செயற்பாடுகளை



பெரிதுபடுத்த வேண்டும். கண்ணெதிரில் கிடக்கும் குப்பைகளை மொத்தமாக அகற்றினால்தான் சுற்றுச் சூழல் நிறைந்த நாடு சுத்தமாக இருக்கும்.

# இனி காற்றுக்கும் காசு தான்!!!



- தர்மபாலன் சஞ்சீப் -

நாளுக்கு நாள் எம் நாட்டில் என்னென்ன மாற்றம் நடக்கப் போகின்றதோ என்ற கேள்வியுடன் தான் நாட்கள் நகருக்கின்றது. ஒவ்வொரு நாளினதும் காலையில் கண் விழிக்கும் போது " நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றம்" என்ற செய்தியுடனேயே அன்றைய நாள் ஆரம்பிக்கின்றது. அதில் முக்கியமான ஒன்று தான் விலையேற்றம். இந்த செய்தி எல்லா பிரஜைகளிலும் ஒரே மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்துமா?? மாதச் சம்பளம் பெறும் அரச ஊழியனுக்கு ஒரு மாதிரியாகவும் தினக்கூலி வேலைக்குச் செல்பவனுக்கு ஒரு மாதிரியாகவும் கணவனை இழந்த பெண் தலைமைக்கு ஒருமாதிரியாகவும் அமையும்.

உடலை வருத்தி தன் வியர்வையை மண்ணுக்கு உரமாக்கி தினக்கூலி செய்பவனுக்கு ஒரு நாளிற்கு கிடைக்க போவது ஆயிரத்து ஐந்தூறு ரூபாய் தான் அதுகும் சில சமயங்களில் ஆயிரம் ரூபாயோடு நின்றுவிடும். இது ஆணிற்கானது அதுவே பெண் என்றால் அவளின் தினக்கூலி சம்பளம் எண்ணூறு தொடக்கம் தொள்ளாயிரம் ரூபாயோடு நின்றுவிடும். இதற்கும் இன்றைய காலக்கட்ட விலைவாசிக்கும் என்ன சம்மந்தம் இருக்க போகின்றது எனப் பலருக்கு அலட்சியம். தினக்கூலிக்கு செல்லும் ஆணாக இருக்கட்டும் பெண்ணாக இருக்கட்டும் மாதத்தின் 30 நாட்களும் வேலைக்குச் செல்ல முடிவதில்லை. அதற்கு அவர்களின் தேகம் இடம் கொடுக்க வேண்டும். வலியை உணராமல் இருக்க அது ஒன்றும் இரும்பல்ல. இரும்பு கூட அடி அதிகமானால் நெளியத் தான் செய்யும்.

"பிச்சை எடுத்தானாம் பெருமாளு அதை புடுங்கி தின்றானாம் அனுமானு'' என்ற மாரி ஆகிவிட்டது இன்றைய நிலை ஒருவன் உழைக்கும் அத்தனை உழைப்பையும் தின்கின்றன அத்தியாவசிய பொருட்கள். இதில் பிச்சை எடுப்பவனுக்கு மிஞ்ச போவது வயிற்றுப் பசி மட்டும் தான். "விருந்தும் மருந்தும் மூன்று நாள்" என்று கூறுவது இன்றைய விலைவாசிக்கு நன்றாகவே பொருந்துகிறது. நாடு இருக்கும் நிலையில் மூன்று நாள் இல்லை விருந்தும் மருந்தும் வருடத்திற்கு மூன்று நாள் தான் என்ற மாதிரி ஆகிவிட்டது. அதுவும் சாத்தியமாகுமா என்பது சந்தேகம் தான்.

எகிறும் விலைவாசியால் தினக்கூலிக்குச் செல்பவன் மட்டும் தான் பாதிக்கப்படுகின்றன் என்று சொல்லவில்லை. ஆனால் மாதச் சம்பளகாரருடன் ஒப்பிடுகையில் அவனின் நிலை பரிதாபமானது. வேலை நிரந்தரம் என்பதற்கு எதுவித உத்தரவாதமும் இல்லை. மழை காலங்களில் வேலை சில சமயம் இருக்கவே இருக்காது. அவ்வாறான நிலையில் இவர்களின் வயிற்றுப்பாட்டை நினைக்க யார் உள்ளனர்?

கோதுமை மாவு, அரிசி, பருப்பு, சீனி, சீமெந்து என ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பொருளின் விலை எகிறிக்கொண்டே செல்கிறது. கோதுமை மாவையும் பருப்பையும் நம்பியே இன்னமும் எத்தனையோ



குடும்பங்கள் வாழ்கின்றன. அதிலும் நெருப்பு போல விலையை வைத்தால் ஒரு நாளில் உழைக்கும் காசிற்கு ஒரு வேளை மட்டும் தான் உணவுண்ண முடியும். ஒவ்வொரு மனிதனும் உடலை வருத்தி அவ்வளவு தூரம் உழைக்க காரணம் என்ன? வயிற்றுப் பிழைப்புக்குத் தானே!!! ஆனால் அப்படி உழைத்தும் என்ன நிலை, அடிப்படை பொருளை கூட அவனால் வாங்க முடியாத




நிலை இன்று. இந்நிலை நீடிக்குமாயின் பஞ்சத்திற்கும் வறுமைக்கும் உதாரணமான முதல் நாடாக இலங்கை இருக்க போவது திண்ணம்.

"ஐந்து பிள்ளை பெற்றால் அரசனும் ஆண்டியாவான்" என்பார்கள். ஐந்து பெண் பிள்ளைகளை பெற்ற அரசனுக்கு இந்த நிலை என்றால் நம் நாட்டில் ஐந்து பெண் பிள்ளைகளை கொண்ட குடும்பங்களின் நிலை???? போகிற போக்கில் பெண் பிள்ளை என்ன பிள்ளையே வேண்டாம், முதலில் நாம் உயிர் வாழ வேண்டும் என்ற எண்ணம் தானாகவே வரும். அபிவிருத்தி என்ற பெயரில் தேவையற்ற பல விடயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இங்கு வாழும் ஒவ்வொரு தனி மனிதனதும் அபிவிருத்தி என்பது கவனத்திற் கொள்ளப்படவேயில்லை.

" விலையேற்றம் என்பது ஒவ்வொரு தனி மனிதனையும் எங்கே கொண்டு செல்லப் போகிறது என்று புரியவில்லை. தினக்கூலிக்கு செல்பவனுக்கு அடிப்படை பொருளை வாங்குவதற்கு முடியாத நிலை போலவே நகர்புறங்களில் வசிப்பவர்களிற்கு உணவை சமைப்பதற்கான எரிவாயுவின் விலையேற்றம் எவ்வளவு தூரம் பாதிப்பை ஏற்படுத்தும்? யானையை கட்டித் தீனி போட முடியாது"என்பதைப் போல தான் சிலிண்டரை வைத்து சமைக்க முடியாத நிலை. சாதாரண மனிதனால் இவ்வாறான சடுதியான விலையேற்றத்தை எளிதாக



கையாளுவது என்பது முள்ளின் மேல் நடப்பதை போல தான் இருக்கும்.

ரூபாய் கணக்கில் எண்ணிக் கொடுத்த பொருட்களிற்கு இப்போது ஆயிரக் கணக்கில் கொடுக்க வேண்டியுள்ளது. கொரோணா பெருந்தொற்று காலத்தில் மக்களிற்கு எதுவித வருமானமும் இல்லை. அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கவில்லை. தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கவில்லை. ஆனால் விலை மட்டும் தாராளமாக அதிகரிக்கிறது. அதனை வாங்கும் மக்களின் நலன் கண்டுகொள்ளப்படாத, கணக்கில் எடுக்கப்படாத ஒன்றாகத்தான் தெரிகிறது.

உணவுப் பொருட்கள் மட்டுமல்ல மருத்துவ பொருட்கள் பெண்களிற்கான அத்தியாவசிய தேவை பொருட்கள்



(உதாரணமாக சுகாதார துவாய்) போன்ற அனைத்து வகையுமான பொருட்களின் விலையும் எகிறிக் கொண்டே தான் செல்கிறது. விலையேற்றம் தொடர்பில் மக்கள் அதிருப்தியை வெளிப்படுத்தலாம். பல அரசியல் சூத்திரதாரிகள் மக்களிற்கு ஆதரவாக பேசுவது போல இந்த சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக் கொள்ளலாம். விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள் மக்களிற்கான உண்மையான ஆதங்கத்தை வெளிப்ளடுத்தலாம். இருந்தும் என்ன பயன்??? இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு சடுதியாக பொருட்களின் விலை குறைக்



கப்படப் போகிறதா?

ஒரே சமயத்தில் ஒருவன் எத்தனை பிரச்னைகளிற்கு முகம் கொடுக்க முடியும்? ஒரு புறம் கொரோணா அலையலையாக வருவதும் தொற்றின் என்ணிக்கை அதிகரிப்பதும் மறுபுறம் விலையேற்றம்.... இந்தியாவில் விவசாயத்திற்கு நீர் இல்லாமலும் விவசாயம் செய்ய முடியாமலும் தற்கொலை செய்து கொண்டது போல எம் நாட்டின் விலையேற்றமும் பொருட்களின் தட்டுப்பாட்டு தன்மையும் அந்நிலையினை இங்கு கொண்டு வந்துவிடுமோ!!??எனும் அச்சத்தை உண்டுபண்ணுகிறது.

ஒரு சாதாரண மனிதனாக இருந்து உண்மையை சொன்னால், "இந்த நாட்டில் பிறந்தத்திற்கு இன்னும் என்னென்ன அனுபவிக்க வேண்டுமோ???" என்று ஸ் சலிப்புத் தட்டிக் கொள்ளும் நிலைக்குச் சென்று விட்டோம் என்பது தான் நிதர்சனம். சலிப்புத்தன்மை காலப்போக்கில் வெறுப்பாக மாறும் என்பதில் ஐயமில்லை. ஆனால் நாட்டின் பிரஜைகளிற்கு வெறுப்பு மிகும் பட்சத்தில் அது நாட்டின் நலனில் எவ்வளவு பாரதூரமான விளைவை கொண்டுவரும் என்பது நினைத்துப் பார்க்க முடியாத விடயம்.

ஒரு புறம் நகரப்புறம் அபிவிருத்தி எனும் பெயரில் அழகாக்கப்பட்டுக்கொண்டிருக்கும் அதே வேளை இன்னொரு புறம் ஒரு நேர உணவில்லாமல் யாரோ ஒருவன் ஏதோ ஒரு மூலையில் தலையில் கை வைத்துக் கொண்டிருக்கிறான். இவை தான் ஆசியாவின் அதிசயம் கொண்டுள்ள பெருமை. நாட்டின் சாலைகளையும் கட்டடங்களையும் அழகாக்கும் நிதி பொருட்களின் விலையேற்றத்தால் தான் பெறப்படுகிறதா? என்பது ஒரு அடிப்படை மனிதனின் கேள்வி. தன் அறிவிற்கு எட்டியதை அவன் யோசிப்பதில் தவறில்லையே. எது எப்படியோ ஒரு பொருளின் விலையேற்றம் என்பது ஒரு சாதாரண மனிதனையும் கவனத்திற்கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்று. அதன்படிதான் நம் நாடு போய்க்கொண்டு இருக்கிறதா என்றால் என்னை பொறுத்தவரை நிச்சயாமாக இல்லை.!! இனிவரும் காலம் என்ன சொல்ல போகிறது என்ன மாதிரி ஒவ்வொரு மனிதனையும் சிந்திக்க வைக்க போகிறது என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

## நூல் நோக்கு

# போற்றுதற்குரிய ஆற்றலாளர்கள் இவர்கள்

நூலாசிரியர் – திரு.வேலாயுதம் தங்கராசா






தம்பலகாமத்தின் கலை இலக்கியப் பாரம்பரியம்.

17ஆம் நூற்றாண்டு தொடக்கம் 21ஆம் நூற்றாண்டு வரை வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கும் பல்துறை சார்ந்த பெருந்தகைகளை உலகிற்கு எடுத்துக்காட்டுவதற்கு இந்நூல் பெரிதும் உதவுகின்றது.

தம்பலகாமத்தின் கலை இலக்கியப் பாரம்பரியத்தை ஆவணப்படுத்தும் முயற்சி.

தேடல் என்பது வாழ்க்கையில் பல சிரமங்களை தந்தாலும் நூலாசிரியரின் முயற்சியினால் மறந்தும், மறக்கடிக்கப்பட்ட வரலாறுகளை நாம் அறியக்கூடிய தாய் உள்ளது.

ஆலயங்களும் அதைச் சுற்றிய சூழலில் வாழ்ந்த பெருந்தகைகளை இனங்கண்டு அவர்களின் வரலாறுகளைத் தேடித் தொகுத்து இந்நூலை சமூகத்திற்கு தந்துள்ளார்கள்.

கலைஞர்களின் வாழ்க்கை, அவர்களின் வாழ்விடங்களின் வரலாறுகள் என பதிவுகள் தொடர்கின்றது.தம்பலகாமப்பற்றின் கலை, இலக்கியப் பாரம்பரியம் தொடர்பிலான ஆவணப்படுத்தலின் ஆரம்ப முயற்சி இதுவாகும். பல்வேறு காரணங்களால் விடுபட்டுப்போயிருக்கும் கலைஞர்களது விபரங்களும் இணைக்கப்பட்டு மீளப் பதிக்கப்படும்போது தம்பலகாமத்தின்கலைஇலக்கியப்பாரம்பரியத்தை புரிந்து கொள்வதற்கான ஆவணமாக முழுமை பெறும் என்பதில் ஐயமில்லை.

தம்பலகாமத்தின் கலை இலக்கியப் பாரம்பரியம் பாட்டு ,கூத்து, நாடகம்,நடனம்,குறும்படம் போன்ற கலைகள் ஓய்வு நேரங்களில் தானும் மகிழ்வாக இருந்து பிறரையும் மகிழ்வாக்க உருவாக்கப்பட்டது.

இவ்வாறான கலைகளை தம்பலகாமம் மக்கள் மட்டுமன்றி திருகோணமலை மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் பார்வையாளர்களாக வந்து மக்கள் கண்டுகளிப்பதைச் சான்றுகளுடன் விவரிக்கின்றார் நூலாசிரியர். 'வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல்' பழந்தமிழ் நூல் காவியமான இந்நூல் படைத்த ஆசிரியர், அவர்கள் வாழ்ந்த காலம், அரங்கேற்றம் குறித்த குறிப்புகள் போன்ற விடயங்கள்விரிவாககாணப்படுகின்றது.

முதுபெருங்கவிஞன் ஸ்ரீ வீரக்கோன் முதலியார் அவர்கள் வாழ்ந்த சமகாலத்தில் கோவில்களில் நடைமுறையிலிருந்த தேச வழமைகள் இன்றும் பின்பற்றப்படுகின்றன.

பல துறைகளிலும் சாதனை படைத்த கந்தப்பர் கணபதிப்பிள்ளை அண்ணாவியார் 1900ஆம் ஆண்டு பிறந்தவர்.நாடகங்களை மேடையேற்றுவதில் மட்டுமன்றி சிறந்த கைதேர்ந்த வைத்தியராகவும் விளங்கியதால் மக்கள் பல அன்பளிப்புகளும் செய்ததாக இந்நூலில் அறியக் கூடியதாய் உள்ளது.

சிரஞ்சீவதமான சிந்தனையாளன் தம்பலகாமம் க. வேலாயுதம் நூலாசிரியர் தங்கராச அவர்களின் தந்தை பாடசாலை கல்வி சூழ்நிலை காரணங்களால் இடைநிறுத்தினாலும் 'கண்டது கற்கப் பண்டிதனா வான்' என்னும் பழமொழிக்கொப்ப தனது முயற்சி யினால் வாசிப்பினூடாக கல்வியை வளப்படுத்தி தன்னை பூரணப்படுத்திக் கொண்டார்.அவரது மகன், பேரப்பிள்ளைகள் என குடும்பத்திலுள்ள அனைவரும் அவர் வழியே இன்று இலக்கிய உலகிற்கு ஆற்றும் பெரும்பணி மகத்தானது இவ்வாறாக ஒவ்வொரு சிறந்த ஆளுமைகள் தங்களை எவ்வாறு புடமிட்டு சமூகத்திற்கு தேவையானதை கவிதை,கட்டுரை,நாடகம்,குறும்படம், கூத்து என வெளிப்படுத்தினார்கள் என்பதை நூலில் காணக்கூடிய சிறப்பம்சமாகும்.

தம்பலகாமத்தில் பழமையில் சங்கீதக் கலையும் ஆயுள் வேத வைத்தியமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து வளர்தோங்கி வந்துள்ளது. பிரபல சுதேச ஆயுள் வேத வைத்தியர்களில் பெரும்பாலானோர் நாடக நடிகர்களாகவும், நாட்டுக்கூத்து அண்ணாவிமார்களாகவும் விளங்கினார்கள். நாயன்மார் கோவில் அமைந்த இடம் நாயன்மார்திடல் என அழைப்பார்கள்.

அருவ வழிப்பாட்டுத் தலமாக ஆதிகோணநாயகர் கோவில் முக்கியத்துவம் வாய்ந்ததாக நூலாசிரியர் பதிவிடுகின்றார். 'போற்றுதற்குரிய ஆற்றலாளர்கள் இவர்கள்' 31 கலைஞர்களின் வாழ்வியல் விபரங்களை தொகுத்து வழங்கியுள்ளார். 'எங்கே வர லாறு வாய்மூடி மௌனம் சாதிக்கிறதோ அங்கே ஊர்பெயர்களும், இடப்பெயர்களும்வாய் திறந்து பேசத்தொடங்கும் என்பதை இந்நூலில் ஆசிரியர் திரு.வேலாயுதம் தங்கராசா ஆவணப்படுத்தியுள்ளார்கள்.




இலங்கைத் தம்பலகாமம் பரந்த பிரதேசமாக இருந்தது. இன்று அது கூறுபோடப்பட்டுப் பல புதுப்பெயர்கள் வந்தாலும் பழைய பெயர்கள் மாறாது உள்ளதை இந்நூல் சாட்சியாய் பேசும். நூலாசிரியர் வேலாயுதம் தங்கராசா எழுதிய சிறுவர்களது மனங்களில் நற்பண்புகளை வளர்க்கும் நோக்கில் அமைந்த சிறுவர் கவிதைநூல் 'ஆண்டவனை கண்டதுண்டா' 2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

வரலாற்றை அறிவதற்கு முன்னோர்களின் பண்பாட்டு விழுமியங்களை எதிர்காலச் சந்ததியினருக்கு எடுத்து செல்ல நமது சமூகத்தின் வளர்ச்சிக்கு மேலும் உதவும் என்ற நம்பிக்கையிலும் தொடர்ந்து இன்னும் பல ஆவணப்படுத்தல் நூல்களை ஆசிரியர் திரு.வேலாயுதம் தங்கராசா அவர்கள் வெளியிட வேண்டும். அவருடைய மகன் வைத்திய கலாநிதி த.ஜீவராஜ் அவர்கள் கூறியது போல்'எண்ணங்களை எழுத்தாக்கும் செயல்முறை ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாக்குவதோடல்லாமல் மனதையும் பண்படுத்துகின்றது' என்கிறார். உங்கள் ஆய்வுகள்,ஆவணப்படுத்தல் நூல்களாக தொடர வாழ்த்துக்கள்.

**திருகோணமலை றொசில்டா அன்றோ.**

# குழந்தைகளிடம் ஏற்படும் சமூக எதிர்மறையான விளைவுகளுக்கான காரணங்கள்

சமூகத்தால் பாதிப்படைந்து ஊனமுற்ற குழந்தைகள், சமூகத்தில் தங்களுக்கென ஒரு இடத்தை பெறுவதற்கு மிகவும் கஷ்டப்படுவார்கள். இக்குழந்தைகள், அவர்களை ஒத்த வயதுள்ள சாதாரண குழந்தைகளைப் போன்று நடந்து கொள்வதில்லை. இக்குழந்தைகள் சமூகவிரோத செயல்களான திருடுதல், பிக்பாக்கெட் அடிப்பது, சீட்டு விளையாடுதல், மது மற்றும் போதைப் பழக்கத்திற்கும் அடிமையாகி இருப்பார்கள். இன்னும் சிலர் குற்றங்கள் பல புரிந்து அசாதாரண பாலியல் மற்றும் பல் வேறுபட்ட நடவடிக்கைகளிலும் பல வேறுபட்ட காரணங்களுக்கு சமூக பாதிப்புக்கும் உள்ளாகின்றனர்.

**முறிவுப்பட்ட குடும்பங்கள்**

பெற்றோர்களுக்கிடையே தொடர்ந்து சண்டை சச்சரவுகள் இருக்கும் நிலையில், குழந்தைகள் குடும்பத்தில் இருந்து வெளிவந்து விடுவர். குழந்தைகளுக்குத் தேவையான அன்பும், பாசமும், வழிகாட்டுதல்களும் கிடைக்



காமல் போகின்றது. குழந்தைகளுக்கு சில நேரங்களில் போதுமான அன்பு கிடைக்காமல் போய் விடுவதுடன், உயிர் வாழ்வதற்கு தெருக்களில் அலையும் நிர்ப்பந்தமும் ஏற்பட்டு விடுகிறது. தேவையற்ற குழந்தைகளும், அனாதைகளும், சமூகத்தில் பொருந்திக் கொள்ள முடியாத நிலைக்கு ஆளாகின்றனர்.

**வறுமை மற்றும் அறியாமை**

மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகள் மற்றும் அறியாமை நிலையில் உள்ள பெற்றோரின் குழந்தைகளுக்கு உணவு, உடை, உறைவிடம் போன்றவை இல்லாத நிலை ஏற்படுகிறது. பெற்றோரிடம் இருந்து ஒழுங்கு முறையான வழிகாட்டுதல் இல்லாமையால் இக்குழந்தைகள், சிறிய திருட்டுக்களில் ஈடுபட ஆரம்பித்து தங்கள் வாழ்க்கைக்கு வழி தேடிக் கொள்கின்றனர். இப்பழக்கம் வளர்ந்து நாளடைவில் பெரிய அளவு சமூக விரோத செயல்பாடுகளில் ஈடுபட வைத்து விடுகிறது.



சக்கர நாற்காலிகள் பயன்படுத்துவதால் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு நகர்ந்து செல்வதில் முன்னேற்றம் ஏற்படுவதுடன் தன்னம்பிக்கையும் வளரும். நீங்கள் எப்போதாவது கை இழந்த குழந்தையை பார்த்துள்ளீர்களா? அக்குழந்தைகள் கால் / வாயின் துணை கொண்டு அழகிய வர்ணங்கள் தீட்டுவதில் சிறந்து விளங்குவது அறியப்படுகிறது. இக்குழந்தைகளின் சுற்றுச் சூழ்நிலையை சிறப்பானதாக அமைக்க வேண்டும்.

**பள்ளிக்குச் செல்லாமை, போதுமான கல்வியின்மை**

வாழ்க்கையின் மதிப்பைப் பற்றி குழந்தைகள் அறிந்து கொள்வதில் பள்ளி இரண்டாம் இடத்தை வகிக்கிறது. எது முதல் இடத்தை வகிக்கின்றது என்பது பற்றி உங்களுக்குத் தெரியுமா? ஆம், வீடு. ஏழ்மையில் உள்ள பெற்றோர் குழந்தைகளை பொருளாதார பற்றாக் குறையின் காரணமாக பள்ளிக்கு அனுப்புவதில்லை. இக்குழந்தைகள் சரியான வழிகாட்டுதல் இன்றி தெருக்களில் நீண்ட நேரங்கள் இருக்கின்றனர். மேலும், குழந்தைகள் கூட்டுச் சண்டைகளிலும், விரும்பத்தகாத செயல்பாடுகளிலும் அடிக்கடி ஈடுபடுகின்றனர். பள்ளியில் கற்றுத் தரப்படும் கட்டுப்பாடு, ஒழுக்கம் ஆகியவற்றின் குறைவால் விபரீதமான விளைவுகள் ஏற்படுகின்றன. உறுதி வாய்ந்த சாதாரண மற்றும் சமூக மதிப்புகளை அவர்களை சார்ந்த சூழ்நிலையிலுள்ள பெற்றோர், ஆசிரியர் மற்றும் பிற நடுவயதைச் சார்ந்தவர்களிடம் இருந்து பெற முடியாமல் போகும் போது, உடன் இருக்கும் சக வயதினரின் அழுத்தத்தின் காரணமாக எதிர்மறை பண்பினைப் பெற்று ஆற்றல் இழந்து விடுவர்.

**நல்ல பங்கினை வகிக்கும் மாதிரிகள் இல்லாமை**

குழந்தைகளுக்கு மிகவும் நுண்ணிய விஷயங்களை பதிவு செய்து காட்டக் கூடிய உணர்வு மிகுந்து இருப்பதால், உடனடியாக தங்கள் சூழ்நிலையில் உள்ள பெரியவர்களிடம் இருந்து கற்றுக் கொள்கின்றனர். கை கூலி வாங்கும் இயல்புடைய மற்றும் நேர்மையற்ற நபர்கள் எதிர்மறை மதிப்புகளை குழந்தைகளிடம் உருவாக்குவார்கள்.

அக்குழந்தைகள் சில செயல்பாடுகளில் சரியானவை மற்றும் தவறானவைகளுக்கு வித்தியாசம் கண்டுணர முடியாமல் தோல்வி அடைவர். நீதிநெறி முறைகள் அதன் மதிப்புகள் குறித்து முற்காலத்தில் கற்றுக் கொடுத்தது போல் தற்போது கற்றுத் தரப்படுவதில்லை. குழந்தைகள் வீட்டில் உள்ள பெரியவர்கள் மற்றும் உடன்பிறந்தவர்களிடம் இருந்து நீதிநெறி முறை மதிப்புகளை மனதில் வாங்கிக் கொள்வார்கள். தவறான நபர்களை பங்கு மாதிரிகளாக, குழந்தைகள் நினைக்கும் போது பிரச்சனைகள் உருவாகின்றன.

**வளரும் காலங்களில் மேற்பார்வை இல்லாமை**

இது ஏழ்மை மற்றும் பண வசதி நிறைந்த குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளிடத்தில் ஏற்படலாம். ஏழ்மை நிலையில் உள்ள பெற்றோர் தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு நீண்ட நேரத்திற்கு உழைக்க நேரிடுகிறது. ஆனால் பண வசதி படைத்தோர், குழந்தை வளருகையில் தவறைக் காணத் தவறுதல் / கவனியாது புறக்கணித்து, தாங்கள் பணக்காரர் ஆகும் ஆசையை மட்டுமே கொண்டிருப்பர். இது போன்ற பெற்றோர் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை வீட்டு வேலையாட்களிடம் விட்டு விடுவர். குழந்தைகளை வளர்ப்பதற்கு பெற்றோர் ஈடுபாட்டுடன் செயல்பட வேண்டும். முக்கியமாக வளரும் காலங்களில் நல்ல ஆரோக்கியமான குழந்தையை உருவாக்குவதற்கு பெற்றோர் தங்களது மதிப்புமிக்க நேரத்தை செலவிட வேண்டும்.

**பாதிக்கப்பட்ட குழந்தை கற்பதற்கும் தன்னையே சார்ந்து இருப்பதற்கும் உதவும் வழிமுறைகள்**

ஊனமுடைய, குறைபாடுள்ள குழந்தைகள் கட்டுப்பாடுகள் இருப்பினும் கற்கின்றனர். ஒரு சாதாரணக் குழந்தையால் எளிதாக கற்க முடிவதை, ஊனமுற்ற குழந்தையானது, கடின உழைப்பு, பயிற்சி மற்றும் மிகுந்த மன உறுதியுடன் கற்கிறது. அனைத்து நிலையிலும் பாதிக்கப்பட்ட ஊனமுற்ற குழந்தையானது, சாதாரண குழந்தையைப் போன்று வளர்ந்து உருவாகும் உரிமையைப் பெற்றுள்ளன. இருந்தாலும், இச்சிறப்பு வாய்ந்த குழந்தைகள் 'மாறுபட்ட திறனுடைய நபர்கள்' என்று குறிப்பிடப்படுகின்றனர்.

காலம் மாறிவிட்டது; அன்பு செலுத்தப்பட வேண்டிய தன் அவசியம், போதுமான சுதந்திரம் அளிக்கும் உணர்வு, மற்றும் சாதாரண குழந்தையைப் போன்று இருப்பதற்கான பயிற்சியை பாதிக்கப்பட்ட ஊனமுற்ற குழந்தைகளுக்கு அளிக்க வேண்டும் என்பது போன்ற அதிகப்படியான விழிப்புணர்வு ஊனமுற்ற / பாதிக்கப்பட்ட குழந்தைக்கு ஏதாவது ஒரு குறிப்பிட்ட வகையில் தனி கவனம் செலுத்தப்பட வேண்டிய பிரச்சினையும் உள்ளது.



பல்வேறுபட்ட வகைகளில் பாதிப்படைந்த குழந்தைகளுக்கு உதவும் முறைகளின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பாதிப்பை கையாள வேண்டிய முறையினை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.


அதிகமான அன்பும், பாசமும் மற்றும் பெற்றோரின் ஆதரவும் இன்றியமையாதது. பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் சிறப்பு கல்வியாளர்கள் / பெற்றோர் / உடன்பிறந்தோர் மற்றும் நண்பர்களின் முறையான வழிகாட்டுதல். சிறப்பான கவனம் தேவைப்படும் குழந்தையுடன் தொடர்பு கொள்ளும் நபர்கள் சிறந்த பங்கு மாதிரிகளாக திகழ வேண்டும்.

இதனால் பாதிப்படைந்த குழந்தை, மாதிரியைப் பார்த்து நன்கு கற்றுக் கொள்ளலாம். இக்குழந்தைகளுக்கு அதிகமான அளவு தூண்டுதல் தேவைப்படும். இக்குழந்தைகளுக்கு அதிகமான வாய்ப்புகள் மற்றும் ஊக்குவிப்பு தேவைப்படும், அப்போது தான் இக்குழந்தைகள் நன்கு கற்று செயல்படலாம்.

கற்பதன் பரப்பளவு என்பது திரும்பத் திரும்ப செய்வதனாலும், திறன்/பாடம்/மேற்கொண்ட வேலையை, தலைமை வகித்து, முயற்சித்து நிறைவாக செய்து முடிப்பதையும் பொறுத்து உள்ளது.

'மாறுபட்ட திறமையுடன் கூடிய குழந்தைக்கு அதிக அளவில் பொறுமை மற்றும் குடும்ப நபர்கள், ஆசிரியர்கள், நண்பர்களின் ஊக்கப்படுத்துதலும் தேவைப்படுகிறது.

சிறப்பான பயிற்சி / சிகிச்சைகளுடன், கற்பதற்கு உதவும் சிறப்பான கருவிகள் மற்றும் நுட்பங்கள், கற்பதை மேம்படுத்தி உயர்த்துபவை. உங்களால் ஒரு சில கருவிகளின் நுட்பங்களின் பெயர்களைக் கூற முடியுமா? பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்பான உபகரணங்கள் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்கப்பட்ட உபகரணங்கள், பாதிக்கப்பட்ட குழந்தைகளை கட்டுப்படுத்துகின்றவற்றை முறியடித்து இயங்கச் செய்யும். உபகரணங்கள் ஆவன: மூக்குக் கண்ணாடிகள், பிரெயில் புத்தகங்கள், செயற்கை உறுப்புகள் மற்றும் கேட்கும் சாதனம் முதலானவை.






ஒத்த வயதை சேர்ந்தவர்களோடு செயல் எதிர்செயல் மிகவும் முக்கியமானது. குழந்தையின் ஊனம் ஒத்த வயதினரால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது மிகுதியான முக்கியத்துவம் வாய்ந்தது. மாறுபட்ட திறனுடைய குழந்தை முதன்மை நிலையில் உள்ள குழந்தைகளின் ஒரு பகுதியாக ஏற்றுக் கொள்ளப்படுதலும் சிறப்பான குழந்தைக்கு வியக்கத்தகும் வகையில் ஊக்கம் அளிக்கப்படுகிறது. ஒத்த வயதைச் சார்ந்த குழுவினரின் ஒரு பகுதியாக செயல்பட்டாலும் ஊனமுற்ற குழந்தைக்கு தனித்துவம் அளிக்கப்படுகிறது.

சமூகத்தால் பாதிப்படைந்த குழந்தைகளுக்கு மற்ற சிறப்புத் தன்மை வாய்ந்த குழந்தைகளைப் போல உதவிகள் தேவைப்படுகின்றன. அரசு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் அருட்பண்பு (Philanthropist) குழந்தைகளுக்கு வாழ்வதற்கான அடிப்படை தேவைகளை அளித்து உதவிட வேண்டும்.

அக்குழந்தைக்கு அவசரமான, அதிக தேவையான கலந்தாய்வு மற்றும் உள் இயல்பு சார்ந்த வழிகாட்டுதல் சிறப்பான வகையில் பயிற்சி பெற்றவர்கள் மூலமாக கொடுக்கப்படுகின்றன. அக்குழந்தைகளுக்கு தொடர்ந்து கண்காணிப்பு அவர்களது நடவடிக்கைகளின் முன்னேற்றத்திற்காக தேவைப்படுகிறது.

குழந்தையை சரியான பாதையில் நடத்திச் செல்வதற்கு அதிக நேரமும், முயற்சியும் தேவைப்படும்.

சமூகத்தால் பாதிப்படைந்த குழந்தைகளுக்கு கல்வி, தொழில் திறன்கள் மற்றும் நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி சமூகத்தில் மறுசீரமைப்புடன் சிறப்பான கவனமும் தேவைப்படுகிறது.

இறுதியாக, குழந்தைகள் தங்களையே சார்ந்து இருப்பதற்கும் மகிழ்ச்சியாக உடல் சார்ந்த மற்றும் மனவெழுச்சிகளில் உறுதியுடன் இருக்கவும், குடும்பம் மற்றும் சமூகம் பெருமை கொள்ள எடுக்கப்பட்ட எந்த முயற்சியையும் கைவிடக்கூடாது.





# கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது?



நம் வாழ்வில் நாம் ஒருமுறையாவது கடற்கரைக்கு சென்றிருப்போம் – பார்திருப்போம். ஆனால் நாம் ஒன்றை யோசித்திருக்கமாட்டோம் அது என்ன வென்றால் கடல் நீர் ஏன் உப்பாக உள்ளது என்பது தான்.

**மூலங்கள்**

கடலில் உப்பு இரண்டு மூலங்கள் வழியாக வருகிறது எனலாம். நிலத்திலிருந்து ஓடுதல் மற்றும் கடலின் மேற்பரப்பில் காணப்படுதல் .

மழை

கடலின் உப்புத்தன்மைக்கு முக்கிய காரணமாக அமைவது மழை அதுவும் அதில் இருக்ககூடிய கனிம அயனிகள் என்றே கூறலாம் .

காற்றில் உள்ள காபனீரொட்சைட் மழை நீரில் கரைந்து மழைநீரை சற்று அமிலமாக மாற்றுகிறது. அப்படி அமிலமாக மாறிய மழை பெய்யும்போது அது பாறைகளை அரிக்கிறது, பொதுவாகவே பாறைகளில் சோடியம் அதிகமாக காணப் படும் இப்படி அரிக்கபட்ட துகள்கள் கனிம



உப்புகளை வெளியிடுகிறது. இந்த அயனிகள்ஆறுகளின் வழாயாக கொண்டு செல்லப்பட்டு இறுதியாக கடலை அடைகிறது.

இப்படி கடலை அடைந்த சோடியம் நிறைந்து காணப்படும் நீர் . சூரியனின் வெப்பத்தால் ஆவியாக்கபடுகிறது இதன் காரணமாக நீரனாது ஆவியாகி மேலே சென்றுவிடும் ஆனால் உப்பானது கடலிலேயே தங்கிவிடும் இதன் காரணமாக கூடுதல் உப்பு கடலில் சேர்கிறது அதாவது உப்புநீர் ஆவியாகி நீர் மேலே சென்றுவடும் மீதமுள்ள உப்பு கடலிலேயே தங்கிவிடும் இவ்வாறு பல கோடி வருடங்கள் இந்த செயல் திரும்ப திரும்ப நடந்ததன் காரணமாக தற்போது கடல் அதிக உப்பு தன்மை கொண்டதாக காணப்படுகிறது.

கடலில் உள்ள உப்பு காணப்பட மற்றொரு ஆதாரம் நீர் வெப்ப திரவங்கள் (HYDRO THERMAL FLUIDS) ஆகும், அவை கடற்பரப்பில் உள்ள துவாரங்களிலிருந்து வருகின்றன. எரிமலைகள் வெடிக்கும் பொழுது கடற்பரப்பில் விரிசல் ஏற்பட்டு பூமியின் மையத்திலிருந்து மாக்மா (LAVA) வெளிப்படுகிறது. இந்த வெப்பம் தொடர்ச்சியான இரசாயன எதிர்வினைகளை கடற்பரப்பில் ஏற்படுத்துகிறது பிறகு நீரானது ஒட்சிசன், மக்னீசியம் மற்றும் சல்பேட்டுகளை இழந்து, சுற்றியுள்ள பாறைகளிலிருந்து இரும்பு, துத்தநாகம் மற்றும் தாமிரம் போன்ற உலோகங்களை உருவாக்குகிறது. இந்த நிகழ்வின் காரணமாகவும் கடல் உப்பாக காணப்படுகிறது.



## குறல்தரும் அறிவுரை

ஆய்ந்துஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும்.

குறள்: 792

அதிகாரம்: நட்பு ஆராய்தல், பால்: பொருட்பால்

திரும்பத் திரும்ப ஆராய்ந்து பார்க்காமல் ஏற்படுத்திக் கொள்கிற நட்பு, கடைசியாக ஒருவர் சாவுக்குக் காரணமாகிற அளவுக்குத் துயரத்தை உண்டாக்கி விடும்.

ஒருவனுடைய குணங்களையும் செயல்களையும் நல்லனவாவென்று பலமுறையும் பலவகையாலும் ஆராய்ந்து பாராது அவரொடு செய்துகொள்ளும் நட்பு இறுதியில் தான் சாதற்கேதுவான துன்பத்தை யுண்டாக்கும்.

## உங்களுக்கு தெரியுமா?

நிலவில் இருந்து கொண்டு வானத்தைப் பார்த்தால் வானம் நீல நிறமாகக் காட்சி அளிக்காது. பதிலாக, வானத்தை இருள் சூழ்ந்தது போல் கருமையாகத் இருக்கும். இதற்குக் காரணம், நிலவில் வளிமண்டலம் இல்லை. ஆனால், பூமியில் வளிமண்டலம் இருப்பதால், நம் கண்களுக்கு வானம் நீல நிறமாகத் தோன்றுகிறது.

தவளை நிலத்தில் இருக்கும் போது நுரையீரல் மூலம் சுவாசிக்கிறது. ஆனால் நீரில் இருக்கும்போது அதன் ஈரமான தோலின் மூலம் ஒட்சிசனை உள்வாங்குகிறது.

அப்பிள் மரம் உலகில் மொத்தம் 7,500 அப்பிள் வகைகள் காணப்படுகின்றன.

அப்பிளில் 25% காற்று நிரம்பி உள்ளது. அதனால் அது நீரில் மிதக்கிறது.

ஒரு அப்பிள் மரத்தின் ஆயுட்காலம் 100 ஆண்டுகள்.

மனிதனின் பற்கள், சுறா மீனின் பற்களுக்கு நிகரான வலிமை கொண்டவை.

மனிதனின் உமிழ்நீர் வாய் ஒரு நாளுக்கு நம் வாயில் சுரக்கும் உமிழ் நீரின் அளவு ஒரு லீற்றர்.

மனிதனின் எலும்புக்கூடு பிறந்த குழந்தையின் உடலில் உள்ள எலும்புகளின் எண்ணிக்கை முதிர்ச்சியடைந்த மனிதனின் உடலில் உள்ள எலும்புகளின் எண்ணிக்கையைவிட அதிகமாக இருக்கும். அதாவது, குழந்தை பிறந்தவுடன் அதன் உடலில் 300 எலும்புகள் இருக்கும். குழந்தை வளரும்போது சில எலும்புகள் ஒருங்கிணைகின்றன. பிறகு, முதிர்ச்சி அடைந்த மனிதனாகும் போது, மொத்த எலும்புகளின் எண்ணிக்கை 206 ஆக குறைகிறது.

மனிதனின் சிவப்பு இரத்த அணுக்கள் - மனித இரத்தத்தை எட்டு வகையான குழுக்களாகப் பிரிக்கலாம். அவை A+, A-, B+, B-, O+, O-, AB+, AB- ஒரு முதிர்ச்சியடைந்த மனிதனின் உடலின் எலும்பு மஜ்ஜையில் இருந்து சராசரியாக ஒரு நாளைக்கு 500 கோடி ரத்த சிவப்பணுக்கள் உற்பத்தி ஆகின்றன.

மனிதனின் மூளை - முதிர்ச்சியடைந்த மனிதனின் எடை சராசரியாக 1.3 கிலோகிராம் முதல் 1.4 கிலோகிராம் வரை இருக்கும். மூளையின் எடை உடலின் எடையில் 2% எடையைக் கொண்டது.

# கல்விக்கதிர்



- அகரன் -

## இலக்கணம் அறிவோம்!




பெயர்ச்சொல் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும். இது ஒரு பொருளின் பெயர், இடத்தின் பெயர், காலத்தின் பெயர், உறுப்பின் பெயர், பண்பின் பெயர், தொழிலின் பெயர் ஆகியவற்றில் ஒன்றைக் குறிக்கும் சொல்லாக அமையும்.

எடுத்துக்காட்டு

மரம் (பொருள்), வீடு (இடம்), தை (காலம்), தலை (உறுப்பு / சினை), வெண்மை (பண்பு), படித்தல் (தொழில்)

**பெயர்ச்சொல்லின் வகைகள்**

எனவே, பெயர்சொல்லை ஆறு வகைகளாகப் பிரிக்கலாம்:

பொருட்பெயர் – ஒரு பொருளைக் குறிக்கும் பெயர்

எ.கா. – குருவி, அணில், மரம், மண், கல், நெல், சோறு

சொற்றொடர்: அணில் மரத்திலிருந்து தாவியது.

இடப்பெயர் – ஓர் இடத்தைக் குறிக்கும் பெயர்

எ.கா. – வீடு, காடு, பள்ளிக்கூடம், ஊர், நகரம்

சொற்றொடர்: மாணவர்கள் பள்ளிக்கூடம் சென்றனர்.

காலப்பெயர் - காலத்தின் பெயரைக் குறிக்கும் சொல்

எ.கா. - ஆண்டு, திங்கள், வாரம், கிழமை, காலை, மாலை, இரவு, தை

சொற்றொடர் – தைத் திங்கள் பிறந்தது.

சினைப்பெயர்–ஓர் உறுப்பின் பெயரைக் குறிக்கும் பெயர்

எ.கா. - தலை, கை, கால், கிளை, வேர்

சொற்றொடர்: மரக்கிளையில் பறவை கூடு கட்டியது.

பண்புப்பெயர் - பண்பின் பெயரைக் குறிக்கும் பெயர்

எ.கா. – பச்சை (நிறப்பண்பு), வளமை, ஒழுக்கம், அடக்கம்

சொற்றொடர்: இலையின் நிறம் பச்சை.

தொழிற்பெயர் – தொழிலைக் குறிக்கும் பெயர்

எ.கா. - நடத்தல், படித்தல், ஆடுதல், ஓடுதல், உறங்குதல்

சொற்றொடர்: காலையில் படித்தல் வேண்டும்.

மேலும், பெயர்ச்சொற்களை அவற்றை வழங்கும் அடிப்படையில், இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்:

இடுகுறிப்பெயர் - காரணமின்றி வழங்கப்பட்ட பெயர்

இடுகுறிப் பொதுபெயர் – எ.கா. – கல், மண், காற்று, காடு, கடல் – இவை யாவும் காரணமின்றி வழங்கப்பட்ட பொதுவான பொருள் அல்லது இடத்தைக் குறிக்கும் பெயர்கள்

இடுகுறிச் சிறப்புப்பெயர் - எ.கா.- களிமண் - இது ஒரு குறிப்பிட்ட வகை மண்ணைக் குறிக்கிறது.

காரணப்பெயர்

காரணப் பொதுபெயர் - எ.கா. - வானவில் (வானில் வில் வடிவில் அமைந்ததால் அது வானவில்), பறவை (பறப்பதால் அது பறவை ஆயிற்று)

காரணச் சிறப்புப்பெயர் - எ.கா. - மீன்கொத்திப் பறவை - இது மீனைக் கொத்தும் ஒரு குறிப்பிட்ட பறவை இனத்தைக் குறிக்கிறது.

# கலைக் கதிர்



## அலைமோதும் காதல்

ஆழியின் அத்தியாயங்களைப்
புரட்டுகின்ற நொடிகளில்
காதலுக்கான காத்திருப்புகளை
சுருட்டிக் கொண்ட
பேரலைகளுக்குள்
உறங்கிக் கொள்ளலாம்
வா ..
ஒரு விண்ணுந்தின் புகை
சில நிமிடங்களில் மறைவதற்கு
முன்பு
அங்கே வானவில்லின்
வண்ணங்களில்
சுரஸ்த்தானம் எழுதிவிடலாம்
வா..
வலசை சென்ற
கோடைகாலப் பறவைகளின்
காதல் மொழிகளை
குளிர்காலப் பறவைகளால்
மட்டுமே உணரமுடியும்
கூடலில் கட்டுண்டு கிடக்கும்
அவைகளின்
வெப்ப இறகுகளின் ரேகைகளில்
எழுதப்பட்டிருக்கும்
காமசூத்திரத்தை
சேர்ந்தே படித்திடலாம்
வா ..
பச்சைத்திராட்சைகளின் சாறு
பல வருடங்களாக
குடுவையுள் நிரம்பிக்கிடக்கிறது
மதுவங்கள் குளித்து நொதித்த
ரசத்தை ரசித்தே உறிஞ்சிடலாம்
வா ..
இதுவரை நான் எழுதியவை
கவிதை என நீ நினைத்தால்
அதற்கான தலைப்பை
நீயே வைத்துவிடேன்
வா ..

- நிம்மி சிவா -

## கணிப்பின் கற்பிதங்கள்...! (உருவகக் கதை)

### இலக்கிய நயம்



மதியத்தை நோக்கி விரையும் இளங்காலைப் பொழுது. நிர்மலமான நீலவானத்தில் மேலைக்காற்றின் தழுவலை உள்வாங்கிய வெண்மேகக் கூட்டங்கள் மெல்ல மெல்ல நகர்ந்து ஊர்க்கோலம் போய்க்கொண்டிருந்தன. பேரொளியைச் சிந்தும் சூரிய கிரணங்கள் பட்டதால் அந்த வெண்மேகக் கூட்டங்கள் அழகும் ஒளியும் பெற்றனவாய் வெவ்வேறு உருவங் களில் மாறி மாறி சித்துவிளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தன.

திடீரென ஒரு கருமுகில் எங்கிருந்தோ தம்மை நோக்கி நீந்தி வருவதைக் கண்ட வெண்முகிலொன்று அதனை மேலும் நகரவிடாமல் வழிமறித்தது. அதனை அவதானித்த கருமுகில் ‘ ஏய் வெண்முகிலே என்னை ஏன் மறிக்கின்றாய். விலகி வழியைவிடு’ என்றது. ‘ என்ன வழியை விடவா...நீல வானம் எங்களது இராச்சியம். உனக்கு என்ன வேலை இங்கு?

நீயும் உனது முகறக்கட்டையும். இந்தப் பட்டப்பகலில் கூட ஒரு கரும் பிசாசு மாதிரி. சீ....எங்களுக்கு முன்னாலை வந்து நிற்க உனக்கு வெட்கமில்லை...?’ என கருமுகிலைப் பார்த்து வெண்முகில் ஏளனம் செய்தது.

‘ மழையைச் சுமந்து செல்லும் என்னைப்பத்து இந்த வெற்றுமுகிலுக்கு எத்தனை ஏளனம்’ என மனம் நொந்து கொண்ட கருமுகில் தன்னடக்கத்துடன் ‘ சரி...சரி..நீதான் வெண்மை... நீதான் அழகு...பரவாயில்லை

என்னை மறிக்காமல் முதலில் வழிவிடு‘ என வெண்முகிலைப் பார்த்து பல தடவை கெஞ்சிக் கேட்டது. ஆனாலும் வெண்முகில் தனது திமிர்த்தனத்தை விடுவதாக இல்லை.

இதையெல்லாம் எட்ட இருந்து அவதானித்துக் கொண்டிருந்த கருமுகிலின் தோழர்கள் ஆத்திரமடைந்தனவாய் அவ்விடத்திற்கு ஒன்று திரண்டு விரைந்து வந்து, தனது உரிமைக்காக தனியே நின்று வாதாடிக் கொண்டிருக்கும் அந்த கருமுகிலுடன் இணைந்து கொண்டன. அடுத்த கணமே நீலவானத்தை முற்றாக கௌவியபடி எங்கும் கருமுகிற் கூட்டங்களின் ஆளுகை அரங்கேறியது. அதனை ஆதரிப்பதுபோல ஊதற் காற்றும் பலமாக வீசி வந்தது. வானத்தில் ஓர் பிரளயம் ஏற்பட்டு விட்டதுபோல சடா..சடாரென மின்னல் வீச்சுக்கள். அதைத் தொடர்ந்து பேரிகைமுழக்கம்போல டும்...டும் என பலத்த இடியோசை எழுந்து வானத்தைக் கலக்கியது.

இதை அவதானித்த வெற்று வெண்முகில், கருமுகிலின் பின்னணியை அதன் ஆளுமையை அறியாது தான் அதனுடன் மோத நினைத்ததை எண்ணி வெட்கப்பட்டதுடன் கலக்கமடைந்து உடனடியாக அவ்விடத்தைவிட்டு ஓடோடி மறைந்தது. அதைக் கண்ட கருமுகிற்கூட்டங்கள் வெற்றிக் களிப்புடன் மனங்குளிர்ந்து மழையாக பரிணமித்து சோவென்ற சத்தத்துடன் நிலத்தில் விழுந்து புரண்டோடிக் கொண்டிருந்தன.

செம்மாதுளன்

## சுட்ட கவிதை பிரமாதம்

இணையம் முழுக்க
மழையாய் பொழியும்
சொல்லின் துளிகளில்
வல்லவை சுட்டு
கட்டுமானம்
குழம்பா வடிவ
அத்திவாரம்
அழகாய் இட்டு
எழுதி எழுதி இடித்த
சுவற்றில்
எஞ்சிக் கிடப்பதை
பூரணப்படுத்த
சுட்டதில் இடைக்கிடை
கல்லாய்ப் பொருத்தி
கட்டிய வீட்டுக்
கவிதைக்குள் மகிழ்ந்து
அட்டைப் படத்தில்
ஆகாசம் விரிய
பார்த்தோர் பலரும்
தலைப்பில் அசர
சனங்கள் புகழ
சங்கடம் அற்று
விற்றார் கவிதை
வியந்தார் மற்றோர்.
எட்டி நின்றது
இயல்பாய் பிறந்தது.

பாலையூற்று அஷ்ரபா நூர்தீன்

## எது கவிதை

கவிதை எதுவென்று கண்டறிய கவியாளர்
சிலரிடத்தில் தனிதனியே கேட்டுவந்தேன்
மனதில் தோன்றும் இனிய எண்ணங்களை
வரிவடிவாய் சொல்வதுதான் கனவிதை என்றார்
ஒருவர்
வாரிவடிவாய் கொடுத்தாலும் வாத்தைகளை
மெருகூட்டி ஒழுங்கான அடுக்காக்கி
வழுங்குவதே கவிதை என்றார் இன்னொருவர்
வார்த்தைகளை மெருகூட்டி அடுக்காக்கி
கொடுத்தாலும்
அதில் யாப்பிலக்கண விதிமுறையை உள்வாங்கி
அழகாக்கி சொல்லுவதே கவிதை என்றார்
மற்றொருவர்
யாப்பிலக்கண விதிமுறையை
உள்ளெடுத்துக் கொடுத்தாலும்
அதில் சந்தத்தை சரியாயாக அமைத்தாலே
அது கவிதை என்றார் வேரொருவர்
இவை எதுவும் தேவையில்லை
விதிமுறைகள் ஏதுமில்லை கவி
என்று பெயரெடுத்தால் அவர் எழுதும்
எல்லாமே கவியாகும் என்றார் மேலும் ஒருவர்
எது கவிதை என்றா கேட்கிறாய் படித்துப் பார்
நாவில் தேனூறும் கண்களில் நீர்கோக்கும்
உதடுகள் பூ பூக்கும்...
புரியவில்லை என்றேன்...
அதுதான் கவிதை என்றார் என் நண்பர்
எங்கே... இப்பொழுது
நீங்களே சொல்லுங்கள்
எது கவிதை என்று.

மோகன் சபாபதி.

## வள்ளிக்கொடி



மோதக வள்ளியொன்று முற்றத்தில் வளர்ந்தின்று
பாயிலே படுப்பதுபோல் பந்தலிலே கிடக்கிதங்கு
ஆயவும் ஆளில்லை ஆக்கிடவும் ருசிவேறு
காயெலாம் தூங்கவிட்டு காட்டுதொரு
படம்வேறு.
நேயமாய் நிலத்தோடு நீரெடுத்து வாழ்ந்ததின்று
சாயவும் பந்தலங்கு சரிவாக
ஏறுதுபார்
வாயெலாம் ஊறுமெந்தன் வதக்கியதை
குழம்புவைக்க
நோயெலாம் சிலபலது நொடியினிலே
பறந்துவிடும்.
மல்லிகை மரத்தினிலே மெல்லியஅக்
கொடியினைநான்
சுள்ளியில் ஏற்றிவிடச் சுதந்திமாய்
படர்ந்ததன்று
சொல்லிய காலத்தில் சோவென்று
வளர்ந்தெனக்கு
நல்லதொரு கொடியாகி நாளெல்லாம்
காய்தருதே.

நீலையூர் சுதா



# சிறுவர் கதிர்



## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்

## வருமுன் காப்போம்



அந்த அழகிய வனத்தில் இருந்த குளத்தில் தவளைகள் அதிகம் வாழ்ந்து வந்தன. எந்தப்பிரச்சினையும்இல்லாமல் மகிழ்வுடன் இருந்தன. ஒருநாள் குளக் கரையில் சத்தம் கேட்டு, தவளைகள் பார்த்தன. குளக்கரையில் இரண்டு காளை மாடுகள் ஒன்றை ஒன்று முட்டி சண்டை போட்டுக் கொண்டு இருந்தன. நேரம் செல்லச் செல்ல அவற்றின் சண்டையும் சூடு பிடித்தது. தவளைகள் ஒன்றுக்கொன்று பந்தயம்கட்ட ஆரம்பித்து விட்டன. “வெள்ளை மாடுதான் சண்டையில் வெற்றி பெறும்!” என்றது ஒரு குழு தவளைகள். “இல்லை, இல்லை செவலை மாடுதான் வெற்றி பெறும்!” என ஒரு குழுவும் தவளைகளுக்குள் பந்தயம் கட்டிக் கொண்டு, ஆர்வத்துடன் மெய் மறந்து மாட்டுச் சண்டையைக் கவனித் தன. அப்போது அங்கு வந்த கிழத் தவளை, “இந்த மாட்டுச் சண்டையில் எது வெற்றி பெற்றால் என்ன, தோற்றால் என்ன? சண்டையை வேடிக்கை பார்த்து உங்கள் வாழ்க்கையை இழந்துவிடாதீர்கள்!” என்றது. “என்ன தாத்தா! நம்ம கூட்டமே கூடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக் காங்க, நீங்க என்னடான்னா இப்படிப் பேசுறீங்களே!” “ஆமாப்பா... இந்த சண் டையால் நம் இனம்தான் பாதிக்கப்படும் வாருங்கள் குளத்தை விட்டு வெளியேறு வோம்!” என்றது. “இந்த கிழத்துக்கு வேறு வேலையே இல்லை. தானும் குதூகலமாக இருக்க விடாது, இளசுகளையும் குதூகல மாக இருக்க விடாது!” “இந்த மாடுகளில் ஏதாவது ஒன்று வெற்றி பெற்றாலும், தோற்ற மாடு இந்தக் குளத்துக்குள் வெறித் தனமா அங்குமிங்கும் ஓடுமே! மாடு குளத்துக்குள் ஓடும் போது நம் தவளைச் சகோதரர்கள் எத்தனை பேர் அதன் காலில் மிதிபட்டு இறந்து விடுவர் என யோசித்தாயா?” என்று கூறி கவலைப் பட்டது. “ஆமாம் தாத்தா! நீங்கள் கூறுவதும் உண்மைதான்!” என உணர்ந்த சில தவளைகள் அடுத்த கட்ட நடவடிக்கை களில் இறங்கியது. அவைகளின் பேச்சில் உண்மை இருப்பதை உணர்ந்த சில தவளைகள் அவற்றின் பின்னால் சென் றன.

சிறிது நேரத்தில் அவை குளத்தை விட்டு வெளியேறி தப்பிவிட்டன. அவை களின் பேச்சைக் கேட்காமல் இளம் தவ ளைகள் மட்டும் குளத்திலேயே இருந்தன. சிறிது நேரத்தில் வெற்றி பெற்ற மாடு, தோல்வியுற்ற மாட்டினை முட்டித் தள்ளி யது. இதனால், அந்த மாடு குளத்துக்குள் இறங்கி அங்கும் மிங்கும் ஓடியது. இப்போது அதன் கால்களில் மிதிபட்டு எத்தனையோ தவளைகள் இறந்து விட்டன. ‘அப்போதே குளத்திலிருந்து தப்பிச் சென்றிருக்கலாமே. கிழத் தவளை பேச்சை கேட்காமல் இப்படி அநியாயமா சாகிறோமே...’ என புலம்பிலயவாறே உயிரைவிட்டன.

**நீதி: முதியோர் சொல்லை தட்டக் கூடாது. அவர்கள் அனுபவசாலிகள்.**

## நெருப்புக்கோழி



பறவை இனங்களிலேயே, மிகப்பெரிய, மிக உயரமான, மற்றும் மிக அதிக எடை கொண்டது நெருப்புக்கோழி (Ostrich). இது ஒரு பறக்க முடியாத பறவை. இந்தப்பறவை ஆப்ரிக்காவின் சில பகுதிகளில் காணப்படுகிறது.

இது மிக நீண்ட கழுத்து மற்றும் கால்களைக்கொண்டது.

இது உலகிலேயே அதிவேகமாக ஓடக்கூடிய பறவை. நீண்ட நேரத்திற்கு தொடர்ந்து மணிக்கு 53 கிமீ வேகம் வரை ஓடக்கூடியது. உச்சகட்டமாக மணிக்கு 70 கிமீ வேகத்தில் கூட ஓடக்கூடியது இந்த நெருப்புக்கோழி.

நெருப்புக்கோழிகளின் எடை பொதுவாக 63 கிலோகிராம் முதல் 143 கிலோகிராம் வரை இருக்கும்.

ஆண் நெருப்புக்கோழிகள் கறுப்பு நிறத்தில் காணப்படும்.

ஆண் நெருப்புக்கோழிகள் பொதுவாக 2.1 மீற்றர் முதல் 2.8 மீற்றர் (அதாவது, 6 அடி 11 அங்குலம் முதல், 9 அடி 2 அங்குலம்) உயரம் வரை வளரக்கூடியவை.

பெண் நெருப்புக்கோழிகள் பழுப்பு நிறத்தில் இருக்கும்.

பெண் நெருப்புக்கோழிகள் பொதுவாக 1.7 மீற்றர் முதல் 2 மீற்றர் (அதாவது, 5 அடி 7 அங்குலம் முதல், 6 அடி 7 அங்குலம்) உயரம் வரை வளரக்கூடியவை.



ஆண் நெருப்புக்கோழி



பெண் நெருப்புக்கோழி

## குப்பை



மக்கும் குப்பை மக்காத குப்பை
சாலை முழுதும் குப்பைகளே
அசுத்தம் செய்வோர் வருந்தலையே
சுத்தம் செய்வோர் வருத்தத்திலே!

குப்பையில் இரண்டு வகையுண்டு
பிரித்துக் கொடுத்தால் நலமுண்டு
அறிந்து செய்தால் வளமுண்டு!

## வானவில்



ஏழு வண்ண வானவில்
அழகான வானவில்!
மழையும் சூரியனும் சேர்ந்து வந்த
வானவில்லே
எனக்குப் பிடித்த வானவில்லே
அழகான வானவில்லே
சிவப்பும் நீலமும் கலந்து வந்த
வானவில்லே
அழகான வானவில்லே
குட்டி பாப்பா தன்னுடன்
விளையாட வந்த வானவில்லே!

# இராணுவ மருத்துவத் துறையில் புது சகாப்தம் தொடங்கப்படும்

## ஜனாதிபதி ரணில் திடசங்கற்பம்





உலகில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும்போது இராணுவத்தினரை வெளிநாடுகளுக்கு அனுப்பும் பிரிவுக்கு மேலதிகமாக சுகாதார அனர்த்தங்கள் ஏற்படும்போது, இராணுவக் குழுக்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்குத் தனியான பிரிவொன்று உருவாக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, மருந்துப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய, இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் அதிகளவான மருந்துகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன எனத் தெரிவித்த ஜனாதிபதி, சுகாதாரத் துறைக்கு அதிக அந்நியச் செலாவணியை அரசாங்கம் ஒதுக்கி வருவதாகவும் கூறினார்.

இலங்கை இராணுவ மருத்துவக் கல்லூரியின் 6 ஆவது வருடாந்த கல்வி அமர்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு கட்டுநாயக்க ஈகள்ஸ் லகூன் ஹோட்டலில் நடைபெற்றது. 'நெருக்கடியான காலங்களில் இராணுவ மருத்துவத்தின் பங்களிப்பு' என்ற கருப்பொருளில் இந்த ஆய்வமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இராணுவம், கடற்படை, வான்படை ஆகியவற்றின் மருத்துவப் படையணிகள், யுத்த காலத்தில், இராணுவ மருத்துவ சேவையை வடக்கு கிழக்கில் அதிகமாக பயன்படுத்திக் கொண்டதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தை பிராந்தியத்தின் சிறந்த மருத்துவ ஆராய்ச்சி நிறுவனமாக மாற்றுவதற்கும் சுகாதாரக் காப்புறுதியை வழங்குவதற்கும் சுகாதார அமைச்சுடன் தற்போது பேச்சு நடத்தி வருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மேலும், அரசு வைத்தியசாலைகளில் கட்டணம் செலுத்தும் வார்டுகளை அறிமுகப்படுத்துவது தொடர்பாகவும், தனியார் மருத்துவமனைகளுக்கு கட்டணம் செலுத்தாத வார்டுகளை அறிமுகப்படுத்துவது பற்றியும் தற்போது ஆராயப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

யுத்தத்தை எதிர்கொண்டதைப் போலவே, 2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தின்போதும், வெள்ளத்தின்போதும் கொவிட் – 19 காலப்பகுதியிலும் இராணுவ மருத்துவப் பிரிவினர் ஆற்றிய சேவையின் மூலம் அவர்கள் இராணுவத்திலும் சிவில் துறையிலும் அனுபவத்தைப் பெற்றுள்ளனர் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கையில் இராணுவ மருத்துவத் துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளைப் பாராட்டிய ஜனாதிபதி, 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை இராணுவ மருத்துவக் கல்லூரி தற்போது முழுமையான மருத்துவக் கட்டமைப்பாக வளர்ந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்வில் கௌரவ அதிதியாக பேராசிரியர் செல்வநாயகம் நித்தனன் கலந்துகொண்டமையுடன், இலங்கை இராணுவ மருத்துவக் கல்லூரியின் தலைவர் எயார் கொமடோர் நிலுகா அபேசேகர மற்றும் கல்லூரியின் செயலாளர் விங் கமாண்டர் ஹிமாலி மெண்டிஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஜனாதிபதியின் தலைமை அதிகாரி சாகல ரத்நாயக்க, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, விமானப் படைத் தளபதியின் பிரதிநிதியாக எயார் வைஸ் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். அத்துடன் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் அதிபர் மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# பொன் அணிகளின் போரில் பற்றிக்ஸுக்கு பெரு வெற்றி

## இன்னிங்ஸ் மற்றும் 23 ஓட்டங்களால் வாகை சூடியது













106ஆவது பொன் அணிகளின் துடுப்பாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் புனித பத்தாசிரியர் கல்லூரி (சென். பற்றிக்ஸ்) இனிங்ஸ் மற்றும் 23 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணத்தை தனதாக்கியது.

பொன் அணிகளின் போர் என வர்ணிகப்படும் யாழ்ப்பாணம் புனித பத்தாசிரியர் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிகளுக்கு மிடையிலான துடுப்பாட்ட போட்டி வெள்ளிக்கிழமை காலை தொடங்கியது.

தொடர்சியாக இரண்டு நாட்கள் நடந்த இந்த ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய புனித பத்தாசிரியர் கல்லூரி 74 பந்துப் பரிமாற்றங்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 272 ஓட்டங்களை பெற்றது. அத்துடன் தனது முதல் இனிங்ஸை இடைநிறுத்தியது. அபிலாஸ் 54 ஓட்டங்களையும் சமிதன் 50 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் பிருந்தன், நர்தனன், ரோய் ஜெனிசன் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதலாம் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 42 பந்துப் பரிமாற்றங்களில் 70 ஓட்டங்களை மாத்திரம் பெற்று அனைத்து இலக்குகளையும் இழந்தது. மதுசன் அதிகபட்சமாக 24 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் யாழ். புனித பத்தாசிரியர் கல்லூரி சார்பில் சாருசன், சதுர்ஜன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

202 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்த யாழ். புனித பத்தாசிரியர் கல்லூரி துடுப்பெடுத்தாடும் சந்தர்ப்பத்தை பலோஓன் முறையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வழங்கியது.

இரண்டாம் இனிங்ஸைத் தொடர்ந்து ஆடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 64.4 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 179 ஓட்டங்களை மட்டுமே பெற்றுத் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக மதுசன் 54 ஓட்டங்களையும், நர்தனன் 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் சாருசன், அபிலாஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இதனடிப்படையில் 106 ஆவது பொன் அணிகளின் துடுப்பாட்டப் போட்டியை யாழ்ப்பாணம் புனித பத்தாசிரியர் கல்லூரி இனிங்ஸ் மற்றும் 23 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ்ப்பாண கல்லூரி வீரர் மதுசனும் சிறந்த பந்துவீச்சாளராக புனித பத்திரிசியார் கல்லூரி வீரர் சாருசனும் போட்டியின் ஆட்டநாயனாக புனித பத்தாசிரியர் கல்லூரி வீரர் அபிலாஸ் தெரிவுசெய்யப்பட்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

## கொழும்பின் முடிவை ....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய மீனவர்களை இலங்கைக் கடலில் மீன்பிடிக்க அனுமதிப்பது தொடர்பாகக் கச்சதீவில் வைத்து இந்திய மீனவர்களுடன் பேச்சு நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தப் பேச்சுக்களில், கடற்றொழிலுக்கே செல்லாமல் அட்டைப் பண்ணை அமைத்து வைத்திருப்பவர்களைக் பங்கேற்க வைக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. அத்தகைய பேச்சுக்களை நாங்கள் ஏற்கமாட்டோம்.

நடைமுறைகளை அமைச்சு என்னும் பெயரில் கடல்தொழில் செய்யாத அட்டைப் பண்ணையாளர்களே விரைவில் கச்சதீவில் இவைதொடர்பில் இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தைக்கு செல்ல ஏற்பாடு இடம்பெறுகின்றது. இவர்களுடன் அரசியல் கட்சியினரே செல்லவுள்ளனர். அதனால் இந்த பேச்சுவார்த்தையை ஏற்க முடியாது.

குருநகரில் 39 ட்ரோலர்களும் வல்வெட்டித்துறையில் 29 ட்ரோலர்களும் இழுவைமடித் தொழில் புரிந்த சமயமே ஆழிப்பேரலை ஏற்பட்டது இதன்போது வல்வெட்டித்துறையில் நின்ற படகுகளிற்கு சுனாமி உதவி மூலம் மாற்றுத் தொழிலிற்கான அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டன. குருநகரைச்சேர்ந்த 39படகுகளின் உரிமையாளர்களிற்கும் யாழ் மாவட்ட சம்மேளணம் மூலம் 3 லட்சம் ரூபா பணமும் அமைச்சு மூலம் தொழில் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இதன் மூலம் இத் தொழிலை முற்றாக நிறுத்துவதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. அப்போது – இந்த விடயத்தில் தலையிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தவே 3 மாதங்களிற்கு இந்த ட்ரோலர்களுக்குத் தற்காலிகம் என்னும் பெயரில் அனுமதி வாங்கிக் கொடுத்தார். அதன் விளைவாக இன்று யாழ்ப்பாணத்தில் மட்டும் 600 ட்ரோலர்கள் தொழிலில் ஈடுபடுகின்றன. இவற்றையே சட்டவிரோத தொழிலில் ஈடுபடாது தடுக்க முடியாத அமைச்சர் இந்திய நாட்டுப் படகுகளிற்கு அனுமதி வழங்குவதன் மூலம் ட்ரோலர்கள் ஊடுருவாது என்று சொல்லமுனைவது வேடிக்கையானது.

இதேநேரம் ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் சமாச செயலாளர் ஏ.அன்னராசா தெரிவித்ததாவது:

இந்திய இழுவைமடிப் படகுகள் இலங்கைக்குள் ஊடுருவுவதை நிறுத்திய பின்பே எது தொடர்பாகவும் பேச முடியும். இழுவை மடியை நிறுத்தாமல் வேறு மாற்று நடவடிக்கை எதுவானாலும் ஏற்கமாட்டோம். இதனை முறையாகக் கண்காணிக்கவே முடியாது. அனுமதிவழங்கும்பொறிமுறைஎன்பது அரசினுடையது என்பதுபோல் கண்காணிக்கும் அதிகாரமும் அதற்கான பொறுப்பும் அவர்களுடையதுதான். இப்போதும் அவையெல்லாம் அவர்களிடம்தான் இருக்கின்றன. ஆனால் அதனை அவர்கள் முறைப்படி செய்வதில்லை.

இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்குவதன் மூலம் கிடைக்கும் வருமானம் வடக்கு மீனவர்களின் நல்னகளுக்கே செலவிடப்படும் என்கிறார்கள். ஆனால் அதில் உண்மையில்லை ஆட்சியாளர்களும் அமைச்சர்களும் இந்தப் பணம் மூலம் தம்மை வளர்க்கவே முயற்சிக்கின்றனர். கடந்த காலங்களிலும் இதுதான் நடந்தது. பறிமுதல் செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் படகுகள் ஏலத்தில் விற்கப்பட்டன. அந்தப் பணத்தில் ஒரு ரூபாவேனும் வடக்கு மீனவர்களிற்கு வழங்கப்பட்டதா? பாதிக்கப்பட்டது வடக்கு மீனவன், பகைமை ஏற்பட்டது வடக்கு மீனவருக்கு. ஆனால் படகுகளை ஏலம் விட்டதன் மூலம் லாபம் அடைந்தவர்கள் வேறு யாரோ.

இவை தொடர்பில் ஞாயிற்றுக் கிழமை (இன்று) 40ற்கும் மேற்பட்ட மீனவப் பிரதிநிதிகள் கூடி ஆராய்ந்து ஓர் முடிவை எட்டவுள்ளோம் என்றார்.

"அனுமதி இல்லாத காலத்திலேயே இவ்வளவு படகுகள் ஊடுருவும் நிலையில், ஏதோ ஒரு வகையில் அனுமதியைவழங்கினால்அனுமதிஉடையோர் முன்னாள் படையாகவும் அனுமதி அற்றோர் பின் படையாகவும் ஊடுருவுவார்கள்.எவ்வாறுதடுக்கப்போகின்றனர்?

இதனால் எமது படகுகள் அனைத்தும் தரைக்கு ஏற்றப்பட்டு வீதிகளில் கொண்டு வந்து இறக்கப்பட்டு பெரும் ஆர்ப்பாட்டங்களிற்கே வழி ஏற்படுத்துகின்றனர். அதற்கு நாம் தயாராகி விட்டோம் இதனை விரைவில் இந்த நாடு சந்திக்கும் என்றார் மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் யஸ்ரின் சொய்சா.

## உண்மையை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லிணக்கத்திற்காண ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவந்தபோது உண்மை கண்டறியப்பட வேண்டுமென்று சொல்லி இருந்தோம்.

உண்மை கண்டறியப்பட வேண்டும் என்பது தான் எப்போதும் எங்களுடைய நிலைப்பாடு. அதுவும் சுயாதீனமான ஒரு பொறிமுறைமையின் ஊடாக உண்மை கண்டறியப்படுவது அத்தியாவசியமானது.

எல்லாப் போர்களும் மக்களுடைய உரிமைகளை மீறுகிற போர்கள்தான். சுத்தமான போர் என்று உலகத்தில் எங்கேயும் நடந்ததில்லை. நியாயமான போர் என்ற ஒன்று இருப்பதாக நான் தனிப்பட்ட ரீதியில் கருதவும் இல்லை.

அதில் பலதரப்பட்ட பாதிப்புக்கள் ஏராளமான மக்கள் உயிர்களையும் இழப்பார்கள். உடமைகளையும் இழப்பார்கள். அங்கங்களையும் இழப்பார்கள் மிக மோசமாக பாதிக்கப்படுவார்கள்.

ஆகையினாலே போர் சூழலில் நடக்கிற விடயங்கள் அதாவது உண்மையாகவே என்ன நடந்தது என்பது அறிவது அத்தியாவசியம். ஆகவே உண்மைகள் கண்டறிவது சம்பந்தமாக எந்தக் காலத்திலும் எந்த மாற்றமும் எங்களிடத்தே இருந்ததில்லை.

ஆனால் அதற்கான பொறிமுறை போர் முடிந்த உடனேயே செயற்படுத்தப்பட்டிருக்கவேண்டும். குறைந்தது சர்வதேச மேற்பார்வையுடனாவது செய்யப்பட்டிருக்க வேண்டும். இன்றுவரை அது செய்யப்படவில்லை.

இப்பொழுதும் உண்மைகண்டறியப்படுவதற்கு நாங்கள் எங்களுடைய ஆதரவைத் தெரிவிப்போம். ஆனால் சரியான விதத்தில் உண்மை கண்டறியப்படவேண்டும். ஏதோ ஒரு நோக்கத்திற்காக அல்லாமல் முழுமையான உண்மையாக இருக்கவேண்டும்.

போர் நடந்தது இரண்டு தரப்பினர்களுக்கு இடையிலே. அதிலே ஒரு தரப்பினர் இந்த உண்மையை கண்டறிவதற்காகப் பொறிமுறையை ஏற்படுத்தினால் அதிலிருந்து வெளிவருவது உண்மையாக இருக்காது.

போரில் சம்பந்தப்பட்ட எந்தத் தரப்பினரும் உண்மையைக் கண்டறியும் செயற்பாட்டில் ஈடுபடக்கூடாது. ஆக அந்த விசாரணைப் பொறிமுறை சர்வதேசப் பொறிமுறையாகத்தான் கட்டாயம் இருக்க வேண்டும்.

இதை நான் கதைகள் வடிவில் கூட நாடாளுமன்றில் சொல்லியிருக்கிறேன். அதாவது ஒரு கணவன் மனைவியை அடித்து துன்புறுத்தி வெட்டி வீட்டுக்குள் புதைத்து வைத்துவிட்டார்.

நாங்கள் இப்படி சம்பவம் குறித்து கேள்விப்பட்டிருக்கிறோம்ஆகையினால் விசாரணை செய்யப் போகிறோம் என பொலிஸார் கூறுகின்றபோது

அப்படி இல்லை. இது என்ர வீடு இங்கு உங்களை உள்ளே விட முடியாது என்றும் தேவையென்றால் நிலத்தை கிண்டி கிளறி பார்த்து நானே உங்களுக்கு சொல்லுறேன் எனச் சொல்வதைப் போல தான் இலங்கை அரசாங்கமும் மேற்கொள்கிற விசாரணைகள் இருக்குமென்று நாடாளுமன்றில் கூறியிருக்கிறேன்.

இப்படி ஒரு உதாரணத்தை சொன்னதாலே இரண்டு மூன்று சிங்கள உறுப்பினர்கள்கூட நீங்கள் சொன்னது சரி என என்னிடம் சொல்லியிருக்கின்றார்கள்.

அதாவது நீங்கள் சொன்ன உதாரணத்தினால் இலங்கை அரசாங்கம் இந்த விசாரணைகளைச் செய்யக் கூடாது என்று என்னிடம் கூறியிருக்கின்றார்கள். இதுவே நீண்ட காலமாக நாங்கள் சொல்லி வருகிற ஒரு நிலைப்பாடு ஆகும் என்றார்.

## அரசியல் கைதிகளின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் வலியுறுத்தி வருகின்றோம். தமிழ் அரசியல்வாதிகளின் கீழ்த்தரமான அரசியல் செயற்பாடுகள் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை விவகாரத்தில் தாக்கத்தைச் செலுத்தும்.

இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறைச்சாலைகளில் இன்னும் 29 தமிழ் அரசியல் கைதிகளே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் தண்டனை விதிக்கப்பட்டவர்களை ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் ஊடாகவும், ஏனையவர்களைச் சட்டமா அதிபரின் பரிந்துரைக்கமைய நீதிமன்றத்தின் ஊடாகவும் விடுவிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்களின் கவலைகளை நாங்கள் புரிந்துகொள்கின்றோம். ஆனால், அந்தக் குடும்பங்களின் கண்ணீரில் தமிழ் அரசியல்வாதிகள் அரசியல் நடத்துகின்றனர். இது மிகவும் வேதனை தரும் விடயம் – என்றார்.

## மகிந்த ராஜபக்ஷ .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியும். அவர் மீண்டும் பிரதமராக முயற்சித்தால் அதற்கு சுதந்திர மக்கள் கூட்டணி ஒருபோதும் ஆதரவு வழங்காது.

இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமண. கட்சியின் சார்பில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். சனிக்கிழமை அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதமர் தினேஷ் குணவர்தனவை பதவி நீக்கி, மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக்குவதற்கு ஆளுந்தரப்பு நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஆளுந்தரப்புநாடாளுமன்றஉறுப்பினர்கள் பிரதமரை மாற்றப்போவதாகத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் எம்மிடமும் பேசியுள்ளனர். பிரதமர் பதவியிலிருந்து தினேஷ் குணவர்தனவைநீக்கி, மஹிந்தராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக நியமிப்பதற்கான வேலைத்திட்டங்கள் இடம்பெறுவதாக அவர்கள் எம்மிடம் தெரிவித்தனர்.

உண்மையில்தலைவலிக்குதலையணையைமாற்றுவதால்தீர்வுகிடைக்கும் என்று நாம் எண்ணவில்லை. தற்போது முழு ஆட்சியும் பதவி விலக வேண்டுமே தவிர, பிரதமர் பதவியில் மாத்திரம் மாற்றம் செய்வது பொருத்தமானதாக இருக்காது.

அத்தோடு சுதந்திர மக்கள் கூட்டணியைச் சேர்ந்த எவரும் பிரதமர் பதவியில் மாற்றங்களை ஏற்படுத்தி , அரசாங்கத்திற்கு தேவையான வகையில் முன்னெடுக்கப்படும் இந்த முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை என்பதை தெளிவாகத் தெரிவித்துக் கொள்கின்றோம் – என்றார்.

## வசதி ஏதுமின்றி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்க்கதியான நிலையில் இருக்கும் அந்த மக்களுக்கு அமெரிக்காவைச் சேர்ந்த சிலர் வழங்கிய நிதி உதவியின் மூலம் இந்தப் பொருட்கள் யாழ்ப்பாணத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு வழங்கப்பட்டன.

அமெரிக்காவில் வாழும் மருத்துவர் ஜெயக்குமாரன், சிவசுப்பிரமணியம், சிறிமகிழ்காந்தன், ஆசீர்வாதம் மற்றும் சிவபாலன் ஆகியோர் இந்தப் பொருட்களை அந்த மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கான நிதி உதவியை வழங்கியிருந்தனர்.

குடும்பம் ஒன்றுக்கு தலா 8 ஆயிரம் ரூபா பெறுமதியிலான சமையல் பொருட்கள், உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. 40 குடும்பங்களுக்கு வெள்ளிக்கிழமை இந்த உதவி வழங்கப்பட்டது.

இந்தியாவில் இருந்து நாடு திரும்பியவை உட்பட பல குடும்பங்கள் நெடுங்கேணி, ஒலுமடு, காஞ்சுரமோட்டைப் பகுதிகளில் மீளக்குடியேற்றப்பட்டபோதும் அவற்றுக்கு அடிப்படை வசதிகள் போதியளவில் செய்து கொடுக்கப்படவில்லை. அடிப்படைக் கட்டுமானங்களும் ஏற்படுத்திக்கொடுக்கப்படவில்லை.

வவுனியாவில் வடக்கு மாகாணத்தின் எல்லையையொட்டியுள்ள காஞ்சுரமோட்டை என்ற தமிழ்க் கிராமத்தில் இப்படி நிர்க்கதியான நிலையில் 47 குடும்பங்கள் வாழ்கின்றன. அடர்ந்த காட்டையொட்டியுள்ள இந்தப் பகுதியில் வைத்தியசாலையோ, பாடசாலையோ, ஒழுங்கான உணவுக் கடைகளோ ஏதுமில்லை.

இவர்களின் பரிதாபத்துக்குரிய நிலை தொடர்பில் காலைக் கதிர் பத்திரிகை ஓரிரு மாதங்களுக்கு முன்னர் ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தது. செய்தியாளர் லோகதயாளன் நேரடியாக அங்கு சென்று பார்த்துவந்த விவரங்களை செய்திக்கட்டுரையாக வெளியிட்டிருந்தது.

அந்தக் கட்டுரையப் படித்த அமெரிக்கா வாழ் நல்லுல்லங்கள் சில வழங்கிய நிதி உதவியினால் காஞ்சுரமோட்டைப் பகுதியில் வாழும் மக்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன. சிறுவர்கள், முதியவர்களிற்கு தனியாக போர்வைகளும் வழங்கப்பட்டன.

## நாடாளுமன்றில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமர்சித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன். "நாடாளுமன்றில் சர்க்கஸ் கோமாளியை போல ஜனாதிபதி நடந்து கொண்டார்" என்றும் கடிந்துகொண்டார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனது அலுவலகத்தில் சனிக்கிழமை அவர் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது, தெரிவித்ததாவது:

விலைவாசி அதிகரிப்பினாலும் வரி அதிகரிப்பினாலும் மக்கள் கடும் பாதிப்பை எதிர்நோக்கியிருக்கிறார்கள். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒரு பேசு பொருளாக்கி, அதைக் குறித்து சர்ச்சையை உருவாக்கி, மக்களின் கவனத்தை விலைவாசி உயர்விலிருந்து அதன்பால் திருப்ப முயற்சி நடக்கிறது.

தேர்தல் அத்தியாவசியமானது. ஒரு நாடு ஜனநாயக நாடா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்கு தேர்தல்கள் உரிய காலத்தில் நடாத்தப்படுவது முக்கியம்.

மக்கள் ஆணையை இழந்த அல்லது இல்லாத ஜனாதிபதியும் இந்த ஆட்சியும் தேர்தலை நடத்தாது அதிகாரத்தில் தொடர நடவடிக்கை எடுக்கின்றனர். இதை நாங்கள் எதிர்க்கிறோம். இது ஜனநாயகத்திற்கு முற்று முழுதான விரோதமான செயல். தேர்தலைப் பிற்போடுவதென்பது நாட்டின் சுபாவத்தையே மாற்றியமைக்கிற ஒரு செயற்பாடு.

இந்த உள்ளூராட்சி தேர்தல் சட்டபூர்வமாகவே அறிவிக்கப்பட்டது. சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு சட்ட ரீதியாக அதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறது. அதற்கேற்றவாறு நிதி அமைச்சும் தேர்தலுக்கென்று தொடக்கத்தில் சிறு தொகை நிதியை வழங்கி

(18ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

## நாடாளுமன்றில் ......

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறது. ஆனால் அதற்கு மேலதிகமான நிதியை வழங் முடியாது என செயலாளர் கூறியிருக்கிறார்.

நிதி அமைச்சராக இருப்பவர் ஜனாதிபதி. அவர் ஒரு கட்சியின் தலைவராகவும் இருக்கிறார். அவருடைய ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனு செலுத்தியுள்ளது. முழு வீச்சாக தேர்தல் பரப்புரையையும் தொடங்கியுள்ளது.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் சகல அரச பணியாளர்களும் அமைச்சுக்களும் திணைக்களங்களும் தேர்தல் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்படவேண்டும். அவர்களின் உத்தரவுகளுக்கு அடிபணிய வேண்டும். என்றுதான் அரசமைப்பில் சொல்லப்பட்டுள்ளது. அதை மீறி அதற்கு மாறாக செயற்பட்டால் அது தண்டனைக்குரிய குற்றம் என்று சொல்லப்பட்டுள்ளது.

ஏற்கனவே நாங்கள் தாக்கல் செய்த வழக்கில் பிரகாரம் தேர்தலை சட்டப்படி நடத்துவோம் என்று தேர்தல்கள் ஆணைக்குழு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அந்த வாக்குறுதியை நீதிமன்றமும் ஏற்று வழக்கை முடிவுறுத்தியிருக்கிறது. ஆகவே நீதிமன்ற வாக்குறுதியை நிறைவற்றாத வகையில் எவரேனும் தடுத்துச் செய்யப்பட்டால் அது நீதிமன்றத்தை அவமதித்த குற்றமாகவே கருதப்படும்.

சட்டப்படி தண்டிக்க் கூடிய குற்றங்களை நிதி அமைச்சரும் நிதி அமைச்சின் செயலாளரும் அரச அச்சு கூட்டுத்தலைவரும் வேறு சில அரச பணியாளர்களும் செய்வார்களானால் அவர்கள் மீது தேவைப்பட்டால் நடவடிக்கை எடுக்க நாங்கள் தயார்.

தேர்தல் நடத்தப்படவேண்டும். அதனை 9ஆம் திகதி நடத்துவது சாத்தியம் இல்லை என தேர்தல் ஆணைக்குழு சொல்லியுள்ளது. ஆனாலும் சட்டத்தின் பிரகாரம் மார்ச் 19ஆம் திகதிக்கு முன்னர் இந்த தேர்தல் நடத்தப்பட்டே ஆகவேண்டும்.

நிலைமை இப்படியாக இருக்கையில் நிதி அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும் இருக்கக்கூடிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் அதிகாரபூர்வமாக உள்ளூராட்சி மன்ற தேர்தல் என்ற ஒன்று கிடையாது என்றும் உத்தியோகபூர்வமாக அப்படியான தேர்தல் எதுவும் இல்லை என்றும் கோமாளித்தனமான ஒரு கூற்றைச் சொல்லியிருக்கிறார்.

ஒரு சர்க்கஸ் கோமாளியைப் போல அன்றைக்கு நாடாளுமன்றில் அவருடைய பேச்சு அமைந்திருக்கிறது. அது மிக மிக மோசமானது. ஜனாதிபதி என்கின்ற ஓர் இடத்திலிருந்து தான் பேசுவதையும் மறந்து மிகவும் மோசமான விடயங்களை சொல்லியுள்ளார். அது கண்டனத்திற்குரியது

ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் கூறிய விடயங்கள் பொறுப்பற்றவை. நீதிக்கு முரணானவையாக அவருடைய செயற்பாடுகள் இருக்கின்றன.

இவர் பிரதமராக வந்தபோதுகூட நான் வெளிப்படையாகவே அந்த நியமனத்தை எதிர்த்தேன். அதன் பின்னர் ஜனாதிபதியாக வந்த போதும்கூட அதற்கும் எதிராகவே நாங்கள் செயற்பட்டோம். ஏனெனில் மக்களாலே நிராகரிக்கப்பட்ட மக்கள் ஆணையை இழந்தவர்களின் அனுசரணையோடு அவர் ஜனாதிபதி பதவியிலே அமர்வது முறையற்றது என்று கருதினேன். மக்கள் கேட்ட மாற்றம் இதுவல்ல என கூறி வெளிப்படையாக இதனை நான் எதிர்த்தது பலருக்கும் ஞாபகம் இருக்கும்.

அவ்வாறு நான் எதிர்த்த போது பலர் என்னை எதிர்த்திருந்தனர். எனக்கு தனிப்பட்ட கோபதாபங்கள் இருப்பதாலேயே ரணிலை எதிர்க்கின்றேன் என்றும் அவர்தான் எமக்கு எதாவது செய்வார், அவரை ஏன் எதிர்க்கிறீர்கள் என்றும் என்னிடம் கேட்டார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் அவர் தனிப்பட்ட ரீதியில் எப்படிப்பட்டவராக இருந்தாலும் இப்படிப்பட்ட அரசியல் பின்புலத்துடன் வந்திருப்பதால் அவரால் எந்த மாற்றமும் நடக்காது என்பது தற்பொழுது நிரூபணமாகியிருக்கிறது. அதைவிட மோசமாக பதவிக்காக அவர்களின் (ராஜபக்ஷக்களின்) கைப்பிள்ளையாக அவர் என்னென்ன வெல்லலாம் செய்ய தயாராகிவிட்டார் என்பதும் வெளிப்படையாகிவிட்டது – என்றார்.

## தேர்தலை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிரகடனப்படுத்துவது தொடர்பில் கருத்துத் தெரிவிக்க ஜனாதிபதிக்கு உரிமை இல்லை.

தேர்தல் பிரகடனம் தொடர்பில் ஏதேனும் பிரச்சினை இருப்பின் அதனை நீதிமன்றத்தில் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

தேர்தல்கள் ஆணைக்குழு சட்டரீதியாகச் செயற்படாவிட்டால் ஜனாதிபதி நீதிமன்றத்தை நாடலாம். ஜனாதிபதியின் கருத்து நாட்டின் சட்டம் அல்ல.

தேர்தல்கள் ஆணைக்குழு, ஜனவரி 5ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தலை அறிவித்தது. இதன்படி தேர்தல்கள் ஆணைக்குழு, கட்டுப்பணம் மற்றும் வேட்புமனுக்களை ஏற்றுக் கொண்டது.

இதையடுத்து தேர்தலுக்கான திகதி ஜனவரி 21ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

அத்துடன், அஞ்சல் மூல வாக்களிப்புத் திகதிகளும் அறிவிக்கப்பட்டன.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் அரசமைப்பு மற்றும் சட்பூர்வமானவை என்று தேர்தல் ஆணைக்குழு கூறுகின்றது.

இந்தநிலையில், ஜனாதிபதி தனது உள்நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே நாடாளுமன்றத்தில் பொய் கூறினார்.

சில எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலை ஒத்திவைக்குமாறு தம்மிடம் கோரிக்கை விடுத்ததாக ஜனாதிபதி கூறினார்.

அவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டாலும் தேர்தலை ஒத்திவைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை.

அத்துடன் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தேர்தலை ஒத்திவைக்குமாறு கடிதம் கொடுத்தாலும் தேர்தலை ஒத்திவைக்க ஜனாதிபதிக்கு ஒருபோதும் அதிகாரம் இல்லை. தேர்தல் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவே முடிவு செய்ய வேண்டும்.

எனவே, ஜனநாயகம் மற்றும் மக்களின் வாக்குரிமைக்கு எதிரான ஜனாதிபதியின் நகர்வுகளைத் தோற்கடிக்க அனைத்து அரசியல் கட்சிகள், அமைப்புகள் மற்றும் மக்கள் முன்வரவேண்டும் – என்றார்.

## கிளிநொச்சி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர். இவர் 6 பிள்ளைகளின் தநந்தையாவார்.

யாதவராசா புளியம்பொக்கணை பகுதியில் இருந்து கண்டாவளை நோக்கி பயணித்துக்கொண்டிருந்தபோது விபத்தில் சிக்கினார். நெல் கொள்வனவுக்காக புதுக்குடியிருப்பு நோக்கி பயணித்த பாரவூர்தியுடன் மோதி இந்த விபத்து நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வீதியின் ஒரு பக்கத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல்லை விவசாயிகள் உலரவிட்டுவரும் நிலையில் பாதி வீதி வழியாக மட்டுமே போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் விபத்துக்குள்ளாகின்றன என்று சுட்டிக்காட்டப்படுகின்றன.

அண்மையில் பரந்தன் பூநகரி வீதியிலும் இதேபோன் நெல் உலரவிடப்பட்டிருந்த சமயத்தில் வாகனத்துடன் மோதி துவிச்சக்கரவண்டியில் சென்ற முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.




நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 13 சனிக்கிழமை 25.02.2023 கதிர் 360

## சிப்பாய் உயிர்மாய்ப்பு

இராணுவச் சிப்பாய் ஒருவர், தனது கைத்துப்பாக்கியால், தன்னைத்தானே சுட்டுத்தற்கொலைசெய்துகொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பனாகொடை இராணுவ முகாமில் இடம்பெற்றுள்ளது என்று இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மாத்தளை – நாவுல பகுதியைச் சேர்ந்த 31 வயதான சிப்பாயே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். சம்பவத்துக்கான காரணம் இதுவரையில் வெளியாகாத நிலையில், மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன.

# நிலாவவரையில் திடீரென்று இன்று வந்து குந்திய புத்தர்

## கடும் எதிர்ப்பை அடுத்து இராணுவத்தினர் அகற்றினர்





நிலாவரை ஆழ் கிணற்றோரமாக இன்று அதிகாலையில் திடீரென வந்து குதித்த புத்தரால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அருகில் உள்ள முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவரே அதனை அங்கு வைத்துவிட்டார் என்று முகாம் பொறுப்பதிகாரி தெரிவித்தார். அதற்கு முன்னதாகவே கடும் எதிர்ப்புக் காரணமாக புத்தர் சிலை அங்கிருந்து படையினரால் அகற்றப்பட்டதுடன், அதனை வைப்பதற்கு கொங்கிறீட் இட்டு நிறுத்தப்பட்டிருந்த பலகையினாலான அடித்தளமும் அகற்றப்பட்டது. 2

## யாழ். பல்கலை மாணவர்கள் நால்வருக்கு தடை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் நால்வருக்கு வகுப்புத் தடை உட்பட பல்கலைக்கழகத்தினுள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி 22ஆம், 23 ஆம் திகதிகளில் இடம்பெற்ற கலைவார நிகழ்வுகளின் போது, மூன்றாம் வருட மாணவர்களால், இரண்டாம் வருட மாணவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் தலையீடுகளற்ற – முறை சார்ந்த விசாரணையை மேற்கொள்வதற்கு ஏதுவாக நான்கு பேருக்கும் உள்நுழைவுத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 2

## தேர்தலை நடத்த வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் போராட்டம்

### ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாட்டில் இன்று நடந்தது



–எஸ்.நிதர்ன்–

தேர்தலை நடத்த வேண்டுமென வலியுறுத்தியும் அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பைக் கண்டித்தும் யாழ். நகரத்தில் இன்று மதியம் கவனவீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் யாழ் மத்திய பேருந்து நிலையம் முன்பாக பகல் 11 மணிமுதல் 12 மணிவரை கூடிய பல டசின் கணக்கானவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தேர்தலை நிறுத்தி ஜனநாயகத்தை குழி தோண்டி புதைக்கும் ஆட்சியாளர்களின் கோழைத்தனமான முயற்சியை 2



## தேர்தலை உடன் நடத்தக் கோரி மஸ்கெலியாவில் ஆர்ப்பாட்டம்

உள்ளூராட்சி சபைத் தேர்தலை உடன் நடத்துமாறு வலியுறுத்தி மஸ்கெலியா நகரில் இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தலைமையிலான நவ லங்கா சுதந்திரக் கட்சியின் நுவரெலியா மாவட்ட பிரதான அமைப்பாளர் பெரியசாமி பிரதீபன் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். அந்தக் கட்சியின் சார்பில் மஸ்கெலியா பிரதேச சபைக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

அத்துடன், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட் சம்பளமாக 3 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்பட வேண்டும் எனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

## நிதிகுழு தலைமையிலிருந்து பதவி விலகுகின்றார் மயந்த

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க, நாடாளுமன்ற நிதிக் குழுவின் தலைவர் பதவியில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளார்.

தனது தீர்மானம் தொடர்பில் மயந்த திஸாநாயக்க, கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கும் அறிவித்துள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர் தனவுக்கு எழுத்து மூலம் அறிவித்ததன் பின்னர், நிதிக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து மயந்த திசாநாயக்க உத்தியோகபூர்வமாகவிலகவுள்ளார்.

அவரது நியமனத்திற்கு எதிர்க்கட்சியினர் கடும் எதிர்ப்பு வெளியிட்டதைத் தொடர்ந்தே அவர் பதவி விலகவுள்ளார்.

அசரமைப்பின்படி நாடாளுமன்ற நிதிக் குழுவின் தலைவராக எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவரே நியமிக்கப்படவேண்டும். அதற்கமைய எதிரணியினர் தமது சார்பிஒருவரின் பெயரைப் பரிந்துரைத்துள்ளனர். ஆனால், அவரைத் தவிர்த்துவிட்டு மஜயந் தவை தொலைபேசி ஊடாக நேரில் தொடர்புகொண்ட சபாநாயகர் நிதிக் குழுவின் தலைமைப் பதவியை ஏற்கச் சம்மதமா என்று கேட்டுவிட்டு அவரது பெயரை அறிவித்துவிட்டார்.

எதிரணியினர் ஒருவரைப் பரிந்துரைத்திருக்க அரசு எதிரணிக்குள்ளேயே வேறு ஒருவரை அந்தப் பதவிக்கு நியமித்தமை, மயந்த ஆளும் தரப்பு ஆதரவாளர் என்கிற தோற்றத்தை ஏற்படுத்துகின்றது என்று எதிர்க் கட்சிகள், அரச தரப்பிலிருந்து பிரிந்து செயற்படும் அணியினர் என்று பலரும் கடுமையாகக் கண்டனம் தெரிவித்தனர். இதையடுத்தே மயந்த அந்தப் பதவியிலிருந்து விலகவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## பன்னாட்டுச் செய்திகளில் இடம்பிடித்தது இலங்கை

இலங்கையில் நிதி இல்லாததால் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது என்கிற செய்தி உலகின் பல ஊடகங்களிலும் இடம்பிடித்துள்ளது.

பல பன்னாட்டு ஊடகங்களில் இந்தச் செய்தி இடம்பெற்றது. அந்த ஊடகங்களில் அனேகமானவை இலங்கையை வங்குரோத்து அடைந்த நாடு என்றே குறிப்பிட்டிருந்தன. போதிய நிதி இல்லாத நிலையில் உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன என்றும் தெரிவித்துள்ளன.

இலங்கை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்ததைத் தொடர்ந்து, பன்னாட்டு ஊடகங்கள் இந்த விடயத்தைப் பெரிய செய்தியாக்கி இருக்கின்றன.

தேர்தல்கள் ஆணைக் குழு புதிய தேர்தல் திகதி மார்ச் 3ஆம் நாள் முடிவு செய்யப்படும் என்று தெரிவித்திருக்கிறது. அத்தோடு இந்தப் பிரச்சினைக்குள் தலையிட்டு அதனை ஒரு முடிவுக்குக் கொண்டு வரும்படி சபாநாயகரிடம் கோருவதற்கும் முடிவு செய்–துள்ளது.

## தலவாக்கலையிலும் இன்று போராட்டம்



உள்ளூராட்சி சபைத் தேர்தலை உடன் நடத்துமாறு அரசை வலியுறுத்தி தலவாக்கலை நகரில் இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் அசோக சேபாலவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் போராட்டத்தில் கட்சி செயற்பாட்டாளர்களும், மக்களும் கலந்துகொண்டனர்.

தேர்தலை ஒத்திவைத்து மக்கள் சாபத்துக்கு உள்ளாகாதே, தேர்தலை உடன் நடத்து, மனித உரிமைகளை மீறி சர்வாதிகார ஆட்சி செய்யாதே, பொருட்களின் விலையைக் குறை, ரணில் – ராஜபக்ச குடும்பம் கொள்ளையடித்த மக்களுடைய சொத்தை திருப்பிக் கொடு உள்ளிட்ட பல கோங்கள் எழுப்பப்பட்டன.

போராட்டக்காரர்கள் தமது கோரிக்கைகளைப் பதாகைகளில் எழுதி அவற்றைத் தாங்கிப் பிடித்திருந்தனர்.

## துப்பாக்கிகளுடன் 2 பேர் நேற்று கைது

மூதூர், சின்னக்குளம் மற்றும் தமன்வெளி ஆகிய இடங்களில் இருவர் துப்பாக்கிகளுடன் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முதூர் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட சின்னக்குளம் பிரதேசத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் 37 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சிறிபுர பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட தமன்வெள பிரதேசத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் 52 வயதுடைய நுவரகல பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இருவருமே வேட்டைக்குப் பயன்படுத்து–வதற்காகவே இந்த நாட்டுத் துப்பாக்கிகளை வைத்திருந்தனர் என்று ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர்

## மசாஜ் நிலையத்தில் ஐந்து பெண்கள் கைது

கொழும்பு, கொள்பிட்டியில் இன்று மசாஜ் நிலையத்தில்நடந்தசோதனை நடவடிக்கைகளை அடுத்து 5 பெண்கள் கைது செய்யப்பட்டனர்.

நிலையத்தின் முகாமையாளர் உட்பட 5 பேரும் பாலியல் தொழில் செய்து வந்தனர் என்கிற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காலி வீதியில் அமைந்துள்ள இந்த மசாஜ் நிலையத்தில் விபச்சாரம் நடக்கிறது என்கிற தகவலின் அடிப்படையில் பொலிஸாரால் சோதனை நடத்தப்பட்டது.

காலியைச் சேர்ந்த 56 வயதுப் பெண்ணால் நடத்தப்பட்டு வந்த இந்த பாலியல் தொழில் நிலையத்தில் இருந்த பிட்டிப்பனவைச் சேர்ந்த 27 வயதுப்பெண், தும்மோதரையைச் 2

## நிலாவரையில்.....



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை அந்த இடத்தில் கடைகளைத் திறந்தவர்களுக்கும் அதனூடாகப் பயணித்தவர்களுக்கும் ஆச்சரியம் காத்திருந்தது. நிலாவரைக் கிணற்றின் அருகில் நின்ற அரச மரத்தின் கீழ் திடீரென புத்தர் சிலை ஒன்று, பௌத்தர்களின் வழிபாட்டு மரபுக்கு ஏற்ப வைக்கப்பட்டிருந்தது.

இதனால் பதற்றமடைந்த மக்கள் அரசியல்வாதிகளுக்குத் தகவல் கொடுத்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். அதற்கு முன்பாக வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் நிரோஷ் அந்த இடத்திற்குச் சென்று நிலமையைப் பார்வையிட்டார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது:

நிலாவரை கிணற்றடியில் இரவோடு இரவாக புத்தர் சிலையும் பலகையிலான அமைக்கப்பட்ட சிறு அறை வடிவிலான கட்டுமானமும் கொங்கிறீட் இடப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது என்று மக்கள் எனக்குத் தகவல் தந்தனர். இதனையடுத்து உப தவிசாளர் உள்ளிட்டவர்களுடன் சென்று பார்த்தேன்.

நாங்கள் சென்றபோது அந்த வழிபாட்டிடத்தில் வைக்கப்பட்டிருந்த புத்தர் சிலையை இராணுவச் சிப்பாய் ஒருவர் அங்கிருந்து எடுத்துச் சென்றுவிட்டார் என்று மக்கள் தெரிவித்தனர். ஆனால், சிலையை வைப்பதற்கு அரச மரத்தின் கீழ் நடப்பட்டிருந்த வழிபாட்டிடம் அப்படியே இருந்தது.

உடனடியாக அவ் வழிபாட்டு இடத்தினை அகற்றுமாறு உத்தரவிட்டேன். நீதிமன்றத்தில் ஏற்கனவே இது தொடர்பான வழக்கு உள்ளன நிலையில் யார் இவ்வாறு செயற்பட்டது என்று கேட்க, அவ்விடத்தில் சீருடையில் நின்றிருந்த இராணுவ சிப்பாய்கள் யாருடனோ தொலைபேசியில் உரையாடினர். பின்னர் பலகையிலான அந்தக் கட்டுமானத்தினை அடியோடு அகற்றி எடுத்து அருகில் இருந்த இராணுவ முகாமிற்குக் கொண்டு சென்றனர்.

அச்சுவேலி பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு வருகை தந்து பிரச்சினை தொடர்பாக கேட்டறிந்தனர். பொலிஸார் அங்கு வந்ததும் அருகில் இருக்கும் முகாமின் பொறுப்பதிகாரியும் வந்தார்.

அவரிடம், தமிழ் மக்களின் வாழ்விடங்களை இராணுவ அனுசரனையில் பௌத்த மயமாக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைக் கண்டித்தேன். இனி இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறக்கூடாது எனவும் தெரிவித்தேன்.

முகாம் பொறுப்பதிகாரியோ, அந்த இடத்தில் காவல் கடமையில் இருந்த இராணுவச் சிப்பாய் ஒருவரே இவ்வாறு நடந்து கொண்டுவிட்டார் என்று தெரிவித்தார் –என்றார்.

இந்த இடத்தை பௌத்தமயமாக்க முற்படுகிறார்கள் என்கிற சந்தேகம் தமிழ் மக்களுக்குப் பலமாக இருக்கின்றது. ஏற்கனவே இராணுவத்தினரின் உதவியுடன் இந்த இடத்தில் தொல்பொருள் திணைக்களத்தினர் தோண்டுவதற்கு எடுக்கப்பட்ட நட வடிக்கைகளும் அரசியல்வாதிகள், மக்களின் தலையீட்டினைத் தொடர்ந்து நிறுத்தப்பட்டது.

அதனை அரச அதிகாரிகளின் பணிக்கு இடைஞ்சல் ஏற்படுத்தியதாக பொலிஸாரிடம் முறையிட்டு மல்லாம நீதிமன்றில் வலி. கிழக்கு தவிசாளர் உள்ளிட்டவர்கள் மீது வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே இன்று அந்த இடத்தில் தீடீரெனப் புத்தர் வந்து குதித்தார்.

## தேர்தலை நடத்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டிக்கின்றனர் என்று போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். அந்த முயற்சியை முறியடிப்போம் என்றும் அவர்கள் முழக்கமிட்டனர்.

மின்சாரம், குடிதண்ணீர், சமையல்வாயு, உணவுப் பொருள்களின் விலைகளை அதிகரித்து மக்களை வதைக்கும் ஆட்சியாளர்களை விரட்டியடிப்போம் என்பது உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைப் போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

இப் போராட்டத்தில் ஜேவிபியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான இராமலிங்கம் சந்திரசேகரன் உள்ளிட்ட அக் கட்சியின் பிரமுகர்கள் ஆதரவாளர்கள் பொது மக்கள் எப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## மசாஜ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த 38 வயதுப் பெண், தெகியத் தகண்டியவைச் சேர்ந்த 44 வயதுப் பெண், வில்லிம்புலவைச் சேர்ந்த 46 வயதுப் பெண் ஆகியோரும் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## யாழ்.பல்கலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக மாணவர் வதிவிடம், ஒழுக்கம் தொடர்பான விதிமுறைக ளுக்கு அமையக் கடந்த 23 ஆம் திகதி முதல் மறு அறிவித்தல் வரை விடுதி உட்பட பல்கலைக்கழக வளாகத்தினுள் பிரவேசிப்பதற்கும், கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும், பல்கலைக்கழகம் தொடர்புபட்ட எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடுவதற்கும் அவர்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாகத் தடைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கலைவார நிகழ்வுகள் நடை பெற்றுக் கொண்டிருந்த போது, மூன்றாம் வருட மாணவர்களுக்கும், இரண்டாம் வருட மாணவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற வாக்குவாதம் முற்றி, வியாழக்கிழமை பிற்பகல் கலகலப்பாக மாறியுள்ளது. இந்தச் சம்பவத்தின்போது தலை மற்றும் தோள் பட்டைப் பகுதியில் உபாதைக்குள்ளான இரண்டாம் வருட மாணவன் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில், பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்று உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட தொடக்க விசாரணைகளில் நான்கு மாணவர்களுக்கும் சம்பந்த மிருப்பதாகக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில், பல்கலைக்கழக மாணவர் வதிவிடம், ஒழுக்கம் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதிமுறைகளுக்கு அமைவாக இந்தத் தடை விதிக்கப்பட்டது.

# ஊர்காவற்றுறையில் இன்று குளத்தில் மிதந்த சடலம்

## சைக்கிளும் தண்ணீரிலிருந்து மீட்பு



ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிவன்கோவிலுக்கு அருகாமையில் உள்ள குளத்தில் இருந்து ஆணொருவரின் சட லம் இன்று மீட்கப்பட்டுள்ளது. அவருடையது என்று கருதப்படும் துவிச்சக்கர வண்டு ஒன்றும் குளத்திலிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டது. ஊர்காவற்துறை – மெலிஞ்சிமுனை பகுதியைச் சேர்ந்த 51 வயதான ஒருவரே உயிரிழந்தவர் என்று பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

பயணித்துக்கொண்டிருந்த பொழுது தவறி வீழ்ந்து அல்லது மாரடைப்புப் போன்ற நோய்கள் ஏதும் ஏற்பட்டு அவர் குளத்தில் வீழ்ந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகப்படுகின்றனர்.

சடலம் உடல்கூறாய்வுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசா லைக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த அறிக்கை கிடைத்த பின்னரே இறப்புக் கான சரியான காரணம் தெரியவரும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஊர்காவற்துறை பொலிஸார் இது தொடர்பில் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.



# தமிழர்களின் இதய பூமி தராசுக்கு தாரைவார்ப்பு

## சபா குகதாஸ் தெரிவிப்பு

தமிழரின் இதய பூமி யான முல்லைத்தீவு மாவட்டம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் விலை மதிப்பிட முடியாத தியாகத்தை கொடுத்த வரலாற்று பூமி. தற்போது பதவி வெறி பிடித்த சுயலாபக் கட்சியான தமிழ் அரசுக் கட்சியினால் முஸ்லீம் காங்கிரசின் தரா சுச் சின்னத்திற்கு தாரை வார்க்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் கிழக்கு மாகாணத்தில் முதலமைச்சு பதவி எப்படி சரியான பேரப் பலம் இல் லாமல் சம்பந்தனால் கொடுக்கப்பட்டதோ அதை விட மேலாக எந்தவித உரித் தும் இல்லாத தராசு சின்னத்தில் 21அடிமைகளை போட்டியிட வைப்பதற்கு கிழக்கு மாகாணத்தின் பல அதிகார உரிமைகளை தாரை வார்த்துள்ளது தமிழ் அரசுக்கட்சி .

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறையில் தமிழர் பிரதிநிதித்து வம் இல்லாமல் போவதற்கும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு அரச பிரதிநிதிகளும் வெல்வதற்கும் கார ணம் கடந்த கிழக்கு மாகாண சபையில் தமிழ் அரசுக் கட்சி ஆட்சிக் காலம் முழுவதும் முஸ்லிம் ஒருவரை முத லமைச்சராக நியமித்தமையும் அதனால் தமிழர்கள் எதிர்நோக்கிய நெருக்கடிகளுமே.

கிழக்கில் ஏற்பட்ட நிலைபோன்று எதிர்காலத்தில் முல்லைத்தீவு மாவட்டமும் அரச சக்திகளுக்கு இரையா கும் அவலநிலை உருவாக உள்ளது இதனால்தமிழ் மக்கள் மிக நிதானமாக சிந்தித்து தமிழ்த் தேசிய நீக்கத்தை முன்னெடுக்கும் தரப்புக்களையும் முகவர் களையும் விரட்டத் தயாராகவேண்டும்.

# இந்தியாவில் பெரும் நில நடுக்கம் ஏற்பட்டால் கொழும்புக்கும் பாதிப்பு

இந்தியாவில் பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டால் அது கொழும்பு நகரைப் பாதிக்கும் வாய்ப்புகள் அதிகம் என புவியியல் துறையின் மூத்த பேராசிரியர் அதுல சேனாரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஹிம்ச்சல் – உத்தரகாண்ட் பகுதிகளில் 8 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதாக இந்திய நிலநடுக்கவியல் ஆய்வு நிறுவனம் எச்சரித்துள்ளது.

இந்தியாவில் 8 ரிச்டர் அளவில்நிலநடுக்கம்ஏற்பட்டால் அது கொழும்பை நிச்சயம் பாதிக்கும் என புவியியல் துறையின் மூத்த பேராசிரியர் அதுல சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இவ்வளவு பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டால் இந்தியாவில் நூற்றில் இருந்து நூற்றி ஐம்பது ஆண்டுகள் பழைமையான கட்டடங்கள் பாதிக்கப்படும் அபாயம் அதிகம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




# யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு அலுவலக நீலச் சாயம் அகல்கிறது

## அது கட்சி அலுவலகம் இல்லை என்கிறார் மாவட்டச் செயலர்

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு அலுவலகம் ஒரு கட்சிக்கான அலுவலகம் அல்ல, கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி, நீல வர்ணம் பூசப்பட்டு இருக்குமாயின் அது உடனடியாக அகற்றப்படும் என யாழ். மாவட்ட செயலாளர் அ,சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் உள்ள மாவட்ட ஒருங்கிணைப்பு குழு அலுவலகத்துக்கு நீல நிற வர்ணம் பூசப்பட்டுள்ளமை தொடர்பில் கேட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“யாழ் மாவட்ட செயலகத்தில் உள்ள ஒருங்கிணைப்பு குழு அலுவலகம் ஒருங்கிணைப்பு குழு அலுவலகமே தவிர அது கட்சி அலுவலகம் அல்ல.

ஒருங்கிணைப்புக் குழு அலுவலகத்தில் ஏதாவது கட்சி சார்பான வர்ணம் தீட்டப்பட்டிருந்தால் அது உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன்” – என உறுதி அளித்தார்.



# அரச வாகனத்தை மோதிவிட்டு தப்பிய கள்ள மண் வாகனம்

## பருத்தித்துறையில் நேற்று சம்பவம்

கள்ளமணல்கடத்தல் வாகனம்ஒன்று,வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ வாகனத்தை மோதிவிட்டுத் தப்பியோடியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 7.15 மணியளவில் இடம் பெற்றுள்ளது என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை கடமைக்காகப் பிரதேச செயலாளரை அழைத்து வருவதற்காகப் பருத்தித்துறை பிரதேச செயலகத்திலிருந்து புறப்பட்ட வாகனத் தைப் பருத்தித்துறை பிரதான வீதியில் தட்டாதெரு பக்கமாக இருந்து பிரதான வீதிக்கு வந்த கள்ள மணல் கடத்தல் வாகனம் மோதிவிட்டுத் தப்பியோடியுள்ளது.



இதனால் பிரதேச செயலாளரின் வாகனம் சேதத்துக்குள்ளாகி யுள்ளதுடன் சாரதி தெய்வாதீனமாகக் காயம் எதுவுமின்றி தப்பியுள்ளார். சம்பவ இடத்துக்கு வருகை தந்த பருத்தித்துறை பொலி–ஸார் விசாரணைகளை மேற் கொண்டதுடன் சேதத் துக் குள்ளான பிரதேச செயலாளரின் உத்தியோக பூர்வ வாகனத்தைப் பொலிஸ் நிலையம் எடுத் துச் சென்றனர். மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வரும் பருத்தித் துறை பொலிஸார், விபத்தை ஏற்படுத்திய வாகனத்தையும் சாரதியையும் தேடி வருகின்றனர்.

# மருத்துவகழிவுகளை எரியூட்டி அமைவிடம் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் மருத்துவ கழிவுகளை எரிப்பதற்கான எரியூட்டி அமைத்தல் தொடர்பில் ஆராயப்பட்டது. கடந்த சில நாள்களாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மருத்துவ கழிவுகள் அகற்றப்படாதுலொறிகளில் ஏற்றி வைத்தியசாலை வளாகத்தில்நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

இதுதொடர்பில்வடக்குமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் கவனத்துக்குக்கொண்டுவரப்பட்டது. யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவ கழிவுகளை எரிப்பதற்கு யாழ். மாநகர சபைக்குட்பட்ட கோம்பையன் மணல் மயானப்பகுதியில் எரியூட்டி ஒன்றை அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் உதவியுடன் அமைத்து செயற்படுத்துவது தொடர்பில் ஏற்கனவே யாழ். மாநகர சபையுடன் ஆராயப்பட்டிருந்த நிலையில் கோம்பையன் மணல் மயானம் இந்து மயானம் என்பதால் இந்து மயான வளாகத்துக்குள் மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதா என்பதை ஆராயுமாறு வடக்கு மாகாண ஆளுநர் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்த விடயம் தொடர்பில் வட மாகாண ஆளுநர் செயலகத்தில் ஆளுநரின் செயலாளர் தலைமையில் கலந்துரையாடப்பட்டது. மேற்படி கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாநகர சபையின் பிரதம பொறியி–யலாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வடமாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபை அலுவலகம் திறந்து வைப்பு!

வட மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு வெள்ளிக் கிழமை வட மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் இ.இரவீந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

திதாக நிர்மானிக்கப்பட்ட கட்டடத்துக்கான பூஜை இடம் பெற்றதுடன், சம்பிரதாய நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் வட மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துல, கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் றூபவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலாளர் பா.ஜெயகரன், வட மாகாண வீதி பயணிகள் போக்கு-வரத்து அதிகார சபையின் பொது முகாமையாளரும் வடமாகாண திறைசேரியின் பிரதம கணக்காளருமான ஜெயராஜா, உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பற்றிக் நிரஞ்சன், உத்தியோகத்தர்கள், தனியார் பஸ் சங்கங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அடுத்த மாதம் முதல் வட மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் மாகாண ரீதியான சேவைகள் தொடர்பாக விடயங்கள் அலுவலகத்திலிருந்து இடம்பெறவுள்ளது.

குறித்த அலுவலகத்தின் சேவைகளை பொதுமக்களும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், முறைப்பாடுகளையும் தெரிவிக்க முடியும் என அதன் தலைவர் தெரிவித்தார்.






காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இப்போது மட்டும் முதலீட்டுக்கு அபாயம் ஏற்பட்டுவிடவில்லையா?

இலங்கை பன்னாட்டு ஊடகங்களில் மீண்டும் தலைப்புச் செய்தியாகி இருக்கின்றது. முன்னர் போர் இடம்பெற்றபோது அடிக்கடி செய்தியாகி வந்த இலங்கை இப்போதெல்லாம் அபூர்வமாகத்தான் பன்னாட்டு ஊடங்களில் இடம்பிடிக்கிறது.

போருக்குப் பின்னரான இத்தனை ஆண்டுகளில் சில பல தடவைகள் சுற்றுலாச் செல்வதற்கான சிறந்த இடங்களின் பட்டியலில் இடம்பிடிப்பதன் மூலம் இலங்கை பன்னாட்டு ஊடகங்களில் அடிபட்டு வந்தது. கொரோனா பெருந்தொற்றைத் தொடர்ந்து அதுவும் மிகக் குறைவாகி விட்டது.

இப்போது இலங்கை மீண்டும் இடம்பிடித்திருப்பது நிதி இல்லாமல் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை அது பிற்போட்டுச்செய்த சாதனைக்காக. "வங்குரோத்து அடைந்த இலங்கை நிதி இல்லாததால் உள்ளூர் தேர்தல்களைப் பிற்போட்டுள்ளது" என்று பன்னாட்டு ஊடகங்கள் பலவும் செய்தி வெளியிட்டுள்ளன. மேற்கில் அமெரிக்காவில் இருந்து ஆபிரிக்காவில் நைஜீரியா ஊடாக ஆஸ்திரேலியா வரை பல பன்னாட்டு ஊடகங்களும் இந்தச் செய்திக்கு இடம் கொடுத்துள்ளன.

மாசி மாதம் 4ஆம் நாள், இலங்கையைவிட்டு பிரிட்டிஷார் வெளியேறியதன் நினைவு நாள் கொண்டாட்டங்கள் பெரும் செலவில் மேற்கொள்ளப்பட்டபோது அதற்கொரு விளக்கம் சொன்னார் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க. இவ்வளவு பொருட்செலவில் இந்தக் கொண்டாட்டங்கள் தேவையில்லை என்றுகூறி எதிர்க்கட்சிகள் கண்டித்தது டன் அதனைப் புறக்கணித்தன.

அப்போது, இலங்கையின் மதிப்பை பன்னாட்டரங்கில் உயர்த்துவதற்காகவே அந்தக் கொண்டாட்டங்களை மேற்கொள்வதாக ரணில் தெரிவித்தார். "இலங்கையின் சுதந்திரதினத்தைக்கூட கொண்டாட முடியாதவர்கள் என்று பன்னாட்டுச் சமூகம் கருதினால், எப்படி முதலீடுகள் இங்கு வரும்" என்று தனது செயலை நியாயப்படுத்தி னார் அரச தலைவர்.

அவர் அவ்வளவு செலவு செய்து நடத்திய அந்தக் கொண்டாட்டங்களை எந்தவொரு பன்னாட்டு ஊடகமும் கண்டுகொண்டதாக இல்லை. ஆனால், இப்போது நிதி இல்லை என்று தேர்தலைப் பிற்போடவைத்த ரணி லின் செயலை பன்னாட்டு ஊடகங்கள் அனைத்தும் வெளியிட்டிருக்கின்றன.

தேர்தல் பிற்போடப்பட்டிருக்கின்றது என்ற அறிவித்தலை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்ட அடுத்த நிமிடமே, நிதி இல்லாததால் இந்த நிலமை என்று அவை எழுதித் தோரணமாகத் தொங்கவிட்டுவிட்டன. இப்போது, அவரது செயலால் பன்னாட்டரங்கில் இலங்கையின் மதிப்பு உயர்ந்துவிட்டதா என்ன? தேர்தலே நடத்தப் பணமில்லாத ஒரு நாட்டில் முதலிடலாமா என்று முதலீட்டாளர்கள் நினைக்கமாட்டார்களா?

ரணிலின் கருத்துப்படி சுதந்திரதினம் கொண்டாடப் பணம் இல்லையென்றாலே முதலிட யாரும் வரமாட்டார்கள் என்றால், நாட்டின் மக்களாட்சி அடிப்படையான தேர்தலை நடத்தக்கூடப் பணம் இல்லை என்பது முதலீட்டாளர்களைப் பின்னங்கால் பிடரியில் அடிபட ஓட்டமொடுக்க வைக்காதா?

தமிழில் ஒரு சொலவடை உண்டு. விழுந்தபாட்டுக்குக் குறி சுடுதல் என்பது. முன்னர் மாடுகளுக்குக் குறி சுடும் பழக்கம் இருந்தது. அப்படிக் குறி சுடும்போது ஒரே பக்கத்தில் ஒரே மாதிரியாகக் குறிசுடப்படவேண்டும். அதுதான் ஒருவரின் மாடுகள் அவை என்று இலகுவாக அடையாளப்படுத்தும். ஆனால், குறிசுடுவதற்காக மாடு களைக் கீழே விழுத்திப் படுக்கவைப்பது இலகுவான காரியமல்ல. அதனால் குறிசுடும் சிலர் மாடுகளை எந்தப் பக்கம் விழுத்த முடிகிறதோ அந்தப் பக்கத்திலேயே குறியைச் சுட்டுவிடுவார்கள்.

அரச தலைவரின் கருத்துக்களும் அதுபோன்றே, நிதானமற்றதாக இருக்கின்றது. தனது கருத்துக்கள் உண்மையில் தனதும் அரசினதும் கொள்கைகளைப் பிரதி பலிக்கின்ற வகையில் அவர் பார்த்துக்கொள்ளவேண்டும். அவ்வப்போது தருணத்திற்கு ஏற்படி ஒரு கருத்தைச் சொல்லிவிட்டுப் போகக்கூடாது.

# மிகப்பெரும் அழிவை செய்தது ஜே.வி.பி.

## வண.திஹாகொட பத்திய தேரர் காட்டம்

நாட்டுக்கு மிகப்பெரிய அழிவை மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) செய்துள்ளதாக மேல் மாகாண அதிகார சங்கநாயக்க வண.திஹாகொட பத்திய தேரர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் ஜே.வி.பி நாட்டுக்கு செய்த அழிவுகளை மக் கள் மறக்கவில்லை என்றும், மக்கள் விடுதலை முன்னணி என்ற பெயரில் தோன்றினாலும், இன்னமும் அதே கொடிய கட்சி தான் உள்ளது என்றும் தேரர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள்விடுதலைமுன்னணியின் பௌத்த விவகாரங்களின் தலை வராக நியமிக்கப்பட்ட தனவர்தன குருகேவுடன் அஸ்கிரிய மற் றும் மல்வத்தை பீடங்களின் மகா நாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெற்றதன் பின்னர் ஊடகவி- யலாளர்கள் முன்னிலையில் கருத்து தெரிவிக்கும் போதே தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார். கடந்த காலத்தை அறியாத இளைஞர்கள் மக்கள் விடுதலை முன்னணியை சுற்றித் திரண்டு வருகின்றனர்.

தலதா மாளிகை மீதான தாக்குதல், பிக்குகள் படுகொலை, அரச சொத்துக்கள் அழிக்கப்பட்டமை போன்ற பல அழிவுச் செயல்களுக்கு ஜே.வி.பி பொறுப்பேற்றது என்பது அனைவரும் அறிந்த உண்மை.

மேலும், அவர்கள் செய்த குற்றங்களை ஏற்றுக்கொள்ளாத ஒரு குழுவிடம் நாட்டின் ஆட்சி சென்றால், ஏற்படும் சூழ்நிலையை எவரும் கற்பனை செய்து பார்க்க முடியும் என்றும் தேரர் தெரிவித்துள்ளார்.



# தீயில் கருகிய நிலையில் பெண்களின் சடலங்கள் மீட்பு

## ஊர்காவற்றுறையில் இன்று சம்பவம்

ஊர்காவற்றுறையில் தீயில் கருகிய நிலையில் இரு வயோதிபப் பெண்களின் சடலங்கள் இன்று மீட்கப்பட்டன.

ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தி ற்கு 200 மீட்டர்கள் தொலைவில் உள்ள வீட்டில் இருந்தே இந்தச் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

உயிரிழந்த பெண்கள் இருவரும் 65 வயதிற்கு மேற்பட்டவர்கள் என்று அயலவர்கள் தெரிவிக்கின்றனர். இருவரும் தனியாகவே வசித்து வந்தனர் என்றும் கூறுகின்றனர்.

இன்று காலை இருவரும் கருகிய நிலையில் சடலமாகக் கிடப்பதைக் கண்ட அயலவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர்.

சடலங்களிற்கு அருகில் இருந்து ஒரு தீப்பெட்டி கண்டடுக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுகொலையா? தற்கொலையா? என முடிவுசெய்யப்படவில்லை, விசாரணைகள் தொடர்ந்து நடக்கின்றன என்றும் அவர் கள் தெரிவித்தனர்.

## மலையக மக்களின் 200 ஆண்டுகள் யாழ்ப்பாணத்தில் நாளை நிகழ்வு

சிறகுகள் அமையத்தின் ஏற்பாட்டில் மலையகம் 200 எனும் தொனிப்பொருளில் நல்லூர் பிரதேச சபை பண்பாட்டு மண்டபத்தில் நாளை காலை 9.30 மணிக்கு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வானது இலங்கைக்கு இந்திய வம்சாவளித் தமிழர்கள் கூலித் தொழிலாளர்களாக அழைத்து வரப்பட்டு 200 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. கருத்துருவாக்கம், ஆவணப்படுத்தல் மற்றும் செயலாற்றுகை தொடர்பான எண்ணக்கருவில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.




# தேர்தலை நடத்துவது கடமை மகிந்த கண்டியில் தெரிவிப்பு

தேர்தலை நடத்துவது ஆட்சியின் கடமையாகும். ஆளும் தரப்பும் ஏனைய கட்சிகளும் தமது நிலைப்பாட்டை தெரிந்துகொள்ள வேண்டுமாயின் தேர்தல் நிச்சயம் நடத்தப்படவேண்டும்.

கண்டி நகரில் வெள்ளிக்கிழமை மத வழிபாட்டில் ஈடுப்பட்டதன் பின்னர் செய்தி யாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிதி நெருக்கடி என்று குறிப்பிட்டுக் கொண்டு தேர்தலை நடத்தாமல் இருக்க முடியாது. தேர்தலை நடத்த வேண்டியது ஆட்சியாளர்களின் பொறுப்பு. நிதி இருந்தாலும் தேர்தலை நடத்த முடியாது என ஜனாதிபதி குறிப்பிட்டமை தவறு.

எமது ஆட்சியில் தேர்தல் உரிய காலத்திற்கு முன்னதாகவே இடம்பெற்றது, அதற்கு காரணம் வெற்றி வெறுவோம் என்ற நம்பிக்கை எமக்கு இருந்ததுதான்.

தேர்தல் ஒன்று இடம்பெற்றால் இந்த அரசு வெற்றிபெறும் என்பது நிச்சய மற்றது. மக்கள் தமக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்ய இடமளிக்கவேண்டும் ஆகவே தேர்தலுக்கு நாங்கள் தயாராகவே உள்ளோம் – என்றார்.

# ஹெரோயினுடன் ஒரே நாளில் 12 பேர் கைது

ஹெரோயின் போதைப்பொருளுடன் வெள்ளிக்கிழமை 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. வெள்ளிக்கிழமை காலை 6 மணி முதல் சனிக்கிழமை காலை 6 மணி வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதல்களில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் ஊடகப் பிரிவு தெரி வித்தது.

12.72 கிராம் ஹெரோயினுடன் கிராண்ட்பாஸ் பகுதியில் 42 வயது நபர் கைது செய்யப்பட்டார். மாளிகாவத்தையில் 24 மற்றும் 41 வயதுடைய இருவர் முறையே 5.1 கிராம் மற்றும் 10.17 கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துருகிரியவில் 6.2 கிராம் மற்றும் 6.1 கிராம் ஹெரோயினுடன் 28 மற்றும் 41 வயதுடைய அத்துருகிரிய மற்றும் கடுவெல பகுதிகளைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொரகஹஹேன, தலகல என்ற இடத்தில் 6.3 கிராம் மற்றும் 7.6 கிராம் ஹெரோயினுடன் தலகல மற்றும் ஹன்வெல்ல பகுதிகளைச் சேர்ந்த 32 மற்றும் 43 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

லிஹினியாகமவில் 5.44 கிராம் ஹெரோயினுடன் 35 வயது நபரும், கல்கிசை, படோவிட்டவில் 5.2 கிராமுடன் 39 வயது நபரும், பாணந்து வடக்கில் 5.16 கிராமுடன் 41 வயது நபரும், மீரிஹானவில் 5.45 கிராம் ஹெரோயினுடன் புறக்கோட்டையைச் சேர்ந்த 26 வயது நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்கின்றன பொலிஸ் தகவல்கள்.



## தேர்தலில் போட்டியிடுவதற்காக

# சம்பளமற்ற விடுப்பு எடுத்த அரச ஊழியர்கள் தொடர்பில் அரசு ஒரு முடிவுக்கு வரவேண்டும்

### சன்ன ஜயசுமன நாடாளுமன்றில் வலியுறுத்து



உள்ளூட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக சம்பளமற்ற விடுமுறையை பெற்றுள்ள அரச ஊழியர்கள் தொடர்பில் அரசாங்கம் முடிவொன்றை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) உரையாற்றிய போதே நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

உள்ளூராட்சிசபைத்தேர்தல்நடக்கும் என்ற நம்பிக்கையில் 3 ஆயிரத்து 100 அரச ஊழியர்கள், வேட்பு மனுக்களைர் தாக்கல் செய்துள்ளனர்.

இதற்காக அவர்கள் சம்பளமற்ற விடுமுறையைப் பெற்றுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

எனினும், தேர்தல் நடக்காது என்ற தொனியில் ஜனாதிபதி கருத்து வெளியிட்டுள்ளார்.

அப்படியானால்அரசஊழியர்களின் நிலை என்ன? ஒன்று அவர்களுக்கு சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

இல்லையேல் தேர்தல் நடத்தப்பட வேண்டும்எனநாடாளுமன்றஉறுப்பினர் சன்ன ஜயசுமன குறிப்பிட்டுள்ளார்.

## பானாவெட்டி வைத்தியசாலையில் அபிவிருத்திப் பணிகள் தொடக்கம்

தொல்புரம் ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையம் (பானாவெட்டி வைத்தியசாலை) புதிய வைத்திய பொறுப்பு உத்தியோகத்த ராக வைத்தியர் குருபரன் நியமிக்கப்பட்டதன் பின்னர் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இது தொடர்பில் வைத்திய அத்தியட்சகரும் வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கமும் எடுத்த அயராத முயற்சியின் காரணமாக அந்தப் பிர தேசத்தில் உள்ள தனவந்தர்கள் ஊடாக வைத்தியசாலைக்கு நோயாளர்கள் தங்குமிடமும் வாகனத் தரிப்பிடம் ஒன்றும் அமைத் துத் தரும்படி விடுத்த கோரிக்கைக்கு அமைவாக அவர்களே அந்தப் பொறுப்பை ஏற்று நிதியுதவி வழங்கி இரண்டையும் அமைத்துத் தருவதற்கான அடிக்கல் வெள்ளிக்கிழமை நாட்டப்பட்டது.

இதற்கான நோயாளர் தங்குமிடத்தை சுழிபுரம் மேற்கைச்சேர்ந்தபிரான்ஸில்வசிக்கின்றசுப்பையா வரதராசா என்பவ ரும் வாகனத் தரிப்பிடத்தை பிரபல விற்பனையாளர் து.சிவகுமாரும் தமது நிதி உதவி மூலம் வழங்க உள்ளார்கள்.

## 85 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான மற்றைய திறைசேரி உண்டியலும் ஏலம்!

*85 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதி யான மற்றுமொரு திறைசேரி உண்டியல் ஏலம் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.*

*அவை 91 நாள்களில் 45,000 மில் லியனுக்கும், 182 நாள்களில் 20,000 மில்லியனுக்கும், 364 நாள்களில் 20,000 மில்லியனுக்கும் ஏலம் விடப்படும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள் ளது.*



## அரச அதிகாரிகள் மீது வியாழேந்திரன் பாய்ச்சல்

*மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு சில அரச அதிகாரிகள் போலியான ஆவனங்களைத் தயாரித்து அரசகாணிகளை அபகரிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர் என இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.*

*மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சவுக்கடி பகுதியில் மக்களால் முன்னெடுக்கப்பட்ட காணி கோரிக்கை தொடர்பான போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.*

*சவுக்கடி பகுதியில் காணியற்ற மக்கள் அரச காணிகளில் குடியேறமுற்பட்ட நிலையில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் அதிகாரிகளுக்கும்இடையேமுறுகல் நிலையேற்பட்டது.*

*சவுக்கடி பகுதியில் பெருமளவான மக்கள் காணியற்று உள்ள நிலையில் அங்குள்ள அரசகாணிகளைத்தனவந்தர்கள் பெருமளவில் அபகரித்துவரும் நிலையில் காணியற்ற மக்கள் தொடர்ந்து காணியற்ற மக்களாகவேஇருந்துவருகின்றனர் என அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.*

*இந்த நிலையில் அந்தப் பகுதி மக்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) மாலை அந்தப் பகுதியில் போராட்டம் நடத்திய நிலையில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் அந்தப் பகுதிக்கு சென்று மக்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.*

*மேற்படி பகுதியில் நீண்டகாலமாக காணி அபகரிப்புகள் பெருளமவில் நடைபெற்றுவரும் நிலையில் அதனைத் தடுக்க முனையாதவர்கள்தாங்கள் இருப்பதற்கு காணிகளை அடைக்கமுனையும்போது தங்களைக் கைதுசெய்யமுனைவதாக மக்கள் குற்றஞ்சாட்டினார்கள்.*

*எவ்வாறாயினும் தமக்கான காணிகளைப் பெற்றுத்தர அதிகாரிகள், அரசியல்வாதிகள் முயற்சிகளை செய்யவேண்டும் என இங்கு மக்கள் கோரிக்கை விடுத்தனர்.*

*ஆத்துடன்அரசகாணிகளைப் பாதுகாப்பதற்கு உயர் அதிகாரிகள் நட வடிக்கையெடுக்கவேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர்.*

*இதுதொடர்பில்மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் விசேட கூட்டம் ஒன்றைக் கூட்டி காணி மாபியாக்கல் தொடர்பான விவரங்களை வெளியிடப்போவதாகவும் காணிகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை யெடுப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் உறுதியளித்தார்.*

## யாழ்ப்பாணத்துக் கழிவுகளை வவுனியாவில் எரிக்கமுடியாது

### செல்வம் அடைக்கலநாதன் கடும் எதிர்ப்பு



யாழ். போதனா வைத்தியசாலையின் கழிவுகளை வவுனியாவில் எரிப்பதற்கு வட மாகாண சுகாதார அமைச்சுதீர்மானித்துள்ளதாக தனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் அதற்கு எந்த விதத்திலும் உடன்படமுடியாது என வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ். போதனா வைத்தியசாலையின் கழிவுகளை தெல்லிப்பழையில் எரிக்க முடியாது எனவும் வரும் காலங்களில் வவுனியாவில் எரிப்பது என வட மாகாண சுகாதார அமைச்சின் அதிகாரிகளின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறியக்கிடைக்கின்றது.

இவ்வாறான முடிவை எடுப்பதற்கு முன் வவுனியா மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும்மக்களுடன்கலந்துரையாடப்பட்டிருக்க வேண்டும். வெறுமனே அலுவகத்துக்குள் இருந்துகொண்டு எடுக்கும் முடிவுகள் சமூகங்களுக்கிடையில் பிரிவினையையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும். இதனை அதிகாரிகளும் உணர்ந்துகொள்ளவேண்டும்.

வவுனியா வைத்தியசாலையின்கழிவுகள்தற்போது ஓமந்தை வைத்தியசாலை எரியூட்டும் நிலையத்தில் எரியூட்டப்படுவதால் அருகில் உள்ள ஓமந்தை மத்திய கல்லூரி மாணவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறான சூழலில் யாழ். போதனா வைத்தியசாலையின் கழிவுகளையும் வவுனியாவில் எரிக்க முற்படுவதானது ஏற்றுக்கொள்ள முடியாத செயற்பாடாகும். எனவே, புதிய பொறிமுறைகளையும் திண்ம கழிவகற்றல் முகாமைத் துவத்தையும் புதிய செயற்றிட்டங்களையும் கையாண்டு யாழ். போதனா வைத்தியசாலை கழிவுகளை யாழ்ப்பாணத்திலேயே எரிப்பதற்கு வட மாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும். – எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வெடிக்காத ஷெல் மீட்பு



தென்மராட்சி, பெப் 25

நுணாவில் மத்திய பகுதியில் உள்ள தோட்டக்காணி ஒன்றில் இருந்து புதன்கிழமை பிற்பகல் வெடிக்காத நிலையில் மோட்டார் ஷெல் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

தோட்டக்காணியைத் துப்பரவு செய்த போதே வெடிக்காத நிலையில் மண்ணில் புதைந்த நிலையில் காணப்பட்ட ஷெல் அடையாளம் காணப்பட்டுள்ளது. இது தொடர்பாக காணி உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு வழங்கிய அடுத்து வெடிபொருளை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## இலங்கையுடன் நல்ல உறவுகளை முக்கிய நாடுகள் பேணவேண்டும்!

### தமது ஆட்சியில் நடக்கும் என்கிறார் எரான்

தமது ஆட்சி காலத்தில் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தவும், பாதுகாப்பு மற் றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்யவும் சீனா, இந்தியா மற்றும் பிராந்தியத்தில் உள்ள அனைத்து முக்கிய நாடுகளுடன் நல்ல உறவுகளைப் பேணுவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை தனது சுதந்திரத்தை வலுவாகப் பாதுகாப்பதாகவும், சுதந்திர நாடாக இருப்பதற்கு வெளியுறவுக் கொள்கை மிகவும் முக்கியமானது என்றும் ஆகவே ஐ.நாவுடன் நெருக்கமாக இணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கியநாடுகள்சபையின் அமைதிகாக்கும்படையினில் தற்போது இலங்கையின் பங்கு பிராந்தியநாடுகளைவிடமிகவும் குறைவாக இருப்பதாகவும், நல்லாட்சி அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் அது வீழ்ச்சியடைந்து வருவதாகவும் எரான் விக்கிரமரத்ன சுட்டிக்காட்டியுள்ளார். நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக பொறுப்புக்கூறல் நடவடிக்கையில் தீவிர கவனம் செலுத்த தற்போதைய அரசாங் கம் தவறுமானால் இலங்கையை முன்னேற்ற முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, உலக சந்தைகளில் பொருளாதாரம் தங்கியிருக்கும் நிலையில் இலங்கையர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, உள்ளூர் பொருள்கள் மற்றும் சேவைகள் உலக சந்தையில் விற்கப்பட வேண்டும் என்றும் எரான் விக்கிரமரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

# பொருளாதார நெருக்கடி பால் நிலைகளில் ஏற்படுத்திய தாக்கங்கள் ஓவிய கண்காட்சி!



இலங்கையின் பொருளாதார நெருக்கடி பால் நிலைகளில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் என்னும் தலைப்பிலான ஓவியக் கண்காட்சி யாழ். பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை ஆரம்பமாகியது.

இந்த ஓவியக் கண்காட்சி எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையம், ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்டத்துடன் இணைந்து 'இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது பால்நிலைகளில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள்' என்னும் தலைப்பில் ஓவியப்போட்டி ஒன்றைக் கடந்த வருடம் நடத்தியிருந்தது.

இதற்காக இலங்கை முழுவதும் உள்ள ஓவியர்களிடமிருந்து பொருளாதார நெருக்கடியின் போதான வன்முறைகள், உணவுப் பற்றாக்குறை, வறுமை, போக்குவரத்துச் சிரமங்கள், அதிகரித்த வேலையின்மை, கல்வி, ஆரோக்கியம், ஊட்டச்சத்து, பாலின ஒப்புரவு மற் றும் சமத்துவம், விவசாயம் மற்றும் வீட்டுத்தோட்டம், வெளிநாட்டு நாணயப் பற்றாக்குறை மற்றும் உள்ளூர் நிர்வாகம் போன்ற உப தலைப்புக்களில் வரையப்பட்ட சமார் 1925 ஓவியங்கள் சேகரிக்கப்பட்டிருந்தன.

அந்தஓவியங்கள்தற்போதுகாட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஓவியப் போட்டியில் வெற்றிபெற்ற ஓவியங்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் திங்கட்கிழமை மாலை 2 மணிக்கு வழங்கப்படவுள்ளன.

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



# ரி-20 உலகக் கோப்பை இறுதியில் முதல்முறையாக தென்னாபிரிக்கா



பெண்கள் ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது அரையிறுதியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க பெண்கள் கிரிக்கெட் அணி, வரலாற்றில் முதல்முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

கேப்டவுனில்நேற்றுநடைபெற்ற இந்தப்போட்டியில், தென்னாபிரிக்க அணியும் இங்கிலாந்து அணியும் ஒன்றையொன்று எதிர்கொண்டிருந்தன.

இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை இழந்து, 164 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. டஸ்மின் பிரிட்ஸ் 68 ஓட்டங்களையும் வொல்வார்ட் 53 ஓட்டங்களையும் எடுத்தனர். இங்கிலாந்து அணியின் எக்லெஸ்டோன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

அதனையடுத்து 165 என்ற வெற்றி இலக்கை நோக்கி பகளமிறங்கிய இங்கிலாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 158 ஓட்டங்களைப் பெற, தென்னாபிரிக்க அணி 6 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இங்கிலாந்து அணியின் நட்ஸ்கிவர்-பிரன்ட் 40 ஓட்டங்களையும் டேனியல்வயாட் 34 ஓட்டங்களையும் சேர்த்திருந்தனர். தென்னாபிரிக்க அணியின் அயபோங்கா ஹாக்கா 4 விக்கெட்டுகளையும் ஷ்னிம் இஸ்மயில் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இந்தப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக தென்னாபிரிக்க அணியின் டஸ்மின் பிரிட்ஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் பெண்கள் ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் முதல்முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறிய தென்னாபிரிக்கா, ஐ.சி.சி.யின் பிரதான தொடரொன்றின் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய முதல் சந்தர்ப்பமாகவும் தனது நாட்டின் பெயரைப் பதிவுசெய்துள்ளது.

நாளை கேப்டவுனில் நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் தென்னாபிரிக்க - ஆஸ்திரேலிய பெண்கள் அணிகள் ஒன்றையொன்று எதிர்கொள்ளவுள்ளன.




# இலங்கை கிரிக்கெட்டின் நிகர இலாபம் 2022இல் சாதனை அளவை எட்டியது!

கடந்த 2022ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிகர இலாபம் சாதனை அளவை எட்டியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு 6.3 பில்லியன் இலங்கை ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இதுவே இலங்கை கிரிக்கெட்டின் வரலாற்றில் ஈட்டப்பட்ட மிக உயர்ந்த வருட நிகர வருமானம் என தரவுகள் தெரிவிக்கின்றன.

இது 2021ஆம் ஆண்டு ஈட்டப்பட்ட 2.1 பில்லியன் இலங்கை ரூபாவை விட 3 மடங்கு அதிகமாகும்.

நிகர வருவாயில் ஏற்பட்டுள்ள இந்தச் சமீபத்திய வளர்ச்சியானது பிரதானமாக, சர்வதேச கிரிக்கெட், உள்நாட்டு கிரிக்கெட், அனுசரணையாளர்களுடனான ஒப்பந்தங்கள் மற்றும் ஐ.சி.சி.யின் வருடாந்திர உறுப்பினர் பங்களிப்பு ஆகிய நான்கு வருமானப் பிரிவுகளிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# நியூசிலாந்துடனான டெஸ்ட் தொடர் இலங்கை கிரிக்கெட் அணி அறிவிப்பு




மார்ச் 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 2 போட்டிகள் கொண்ட நியூஸிலாந்து கிரிக்கெட் அணியுடனான டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ள இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஓர் அங்கமாக இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரிலும், தலா மூன்று ஒருநாள் மற்றும் ரி-20 போட்டிகளிலும் விளையாடுவதற்காக இலங்கை கிரிக்கெட் அணி நியூஸிலாந்து செல்லவுள்ளது. இந்தத் தொடருக்கான திமுத் கருணாரத்ன தலைமையிலான 17 பேர் கொண்ட அணிப் பட்டியலை இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் அண்மைய முதல்தர கிரிக்கெட் போட்டிகளிலும் இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கெதிரான ஆட்டங்களிலும் சிறப்பாக துடுப்பெடுத்தாடியுள்ள 23 வயது விக்கெட் காப்பாளரான நிஷான் மதுஷ்கவுக்கும் 26 வயதான வேகப்பந்து வீச்சாளர் மிலன் ரத்நாயக்கவுக்கும் முதல் தடவையாக அணியில் இடம் வழங்கப்பட்டுள்ளது. சமிக்க கருணாரத்ன மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

திமுத் கருணாரத்ன தலைமையிலான இலங்கை டெஸ்ட் அணியில், அஞ்சலோ மத்யூஸ், தனஞ்சய டி சில்வா, டினேஷ் சந்திமால், ஓத பெர்னான்டோ, குசல் மெண்டிஸ், கமிந்து மெண்டிஸ், நிரோஷன் டிக்வெல்ல, நிஷான் மதுஷ்க, ரமேஷ் மெண்டிஸ், பிரபாத் ஜயசூரிய, சம்மிக கருணாரத்ன, கசுன் ராஜித, லஹிரு குமார, அஷித்த பெர்னான்டோ, விஷ்வ பெர்னான்டோ, மிலன் ரத்நாயக்க ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி மார்ச் 9 ஆம் திகதி கிறிஸ்ட்சேர்ச்சிலும் இரண்டாவது டெஸ்ட் போட்டி மார்ச் 17 ஆம் திகதி வெலிங்டனிலும் ஆரம்பமாகவுள்ளன.

# கோலி நெகிழ்ச்சி



இந்திய கிரிக்கெட் அணியின் மூன்று வடிவங்களுக்கும் தலைவராக இருந்த விராட் கோலி கடந்த ஆண்டு ரி20 போட்டிகளுக்கான தலைவர் பதவியில் இருந்து விலகினார். அதைத் தொடர்ந்து அவரை ஒருநாள் அணித் தலைவர் பதவியில் இருந்து விலகும்படி இந்திய கிரிக்கெட் சபை நிர்ப்பந்தித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் 2023 ஒருநாள் உலகக் கோப்பைப் போட்டியில் இந்திய அணியை வழிநடத்த வேண்டும் என்று ஆசைப்பட்ட கோலியின் கனவு தகர்ந்தது. இந்தச் சர்ச்சைகளால் கோலி மிகுந்த மனவருத்தத்தில் இருந்தார். அவரல சரியாக கிரிக்கெட் விளையாட முடியவில்லை. பின்னர் இடைவெளிக்குப் பிறகு சிறப்பாக விளையாடி வருகிறார்.

இந்தாண்டு ஐபிஎல் ஆட்டங்கள் மார்ச் 31ஆம் திகதி தொடங்குகிறது. இதனையொட்டி நடந்த ஒரு நிகழ்ச்சியில் தோனி குறித்து விராட் கோலி நெகிழ்ச்சியாகப் பேசி இருக்கிறார்.

நான் 2022இல் கடினமான நாள்களை அனுபவித்துக்கொண்டிருந்தபோது தோனி மட்டும்தான் என்னைத் தொடர்புகொண்டார். அவருடன் இருக்கும் இந்த தூய்மையான உறவுக்கு நான் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளேன்.

ஒருமுறை தோனி எனக்கு குறுஞ்செய்தி அனுப்பினார். திடகாத்திரமான மனிதர்களை பார்க்கும்போதும், அப்படி இருக்கும் நபரிடமும் மக்கள் அவர்களிடம் எப்படி இருக்கிறாய் என கேட்க மறந்துவிடுகிறார்கள் என்று தெரிவித்திருந்தார். இது எனக்கு அந்த நேரத்தில் மிகவும் உதவிகரமாக இருந்தது. அவர் மீது எனக்கு மிகப்பெரிய மரியாதை உள்ளது.

23 வயதில் இருந்து அவரிடம் துணைத் தலைவராக இருந்துள்ளேன். அவர் என்னைத்தேர்ந்தெடுத்த பிறகு அவர் மீது எனக்கு மிகப்பெரிய மரியாதை ஏற்பட்டது. நான் எப்போது வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் அவரிடம் சென்று கேட்க முடியும். எங்கள் இருவருக்கும் இந்த புரிதல் இருக்கிறது - என்றார்.

# நியூசிலாந்துடனான டெஸ்ட் போட்டியில் ஹரி புருக் 800 ஓட்டங்கள் கடந்து சாதனை

நியூசிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்சில் இங்கிலாந்து வீரர் ஹரி புருக் 169 பந்துகளில் 184 ஓட்டங்களை எடுத்தார்.

இந்த ஓட்டங்களின் உதவியோடு அவர் சாதனையொன்றையும் பதிவுசெய்துள்ளார்.

தனது முதல் 9 டெஸ்ட் இன்னிங்ஸ்களில் 800 ஓட்டங்களைப் அடித்த முதல் வீரர் என்ற சாதனையை ஹரி புருக் படைத்துள்ளார். இதற்கு முன்பு இந்தியாவின் வினோத் காம்ப்ளி 798 ஓட்டங்களை தனது முதல் 9 இன்னிங்ஸ்களில் அடித்திருந்தமையே சாதனையாக இருந்துவந்தது. 30 வருடமாக முறியடிக்கப்படாத அந்தச் சாதனையை 24 வயதேயான ஹரி புருக் தனதாக்கியிருக்கிறார். அவர் இந்தப் போட்டியில் எடுத்த 186 ஓட்டங்களோடு மொத்தமாக 9 இன்னிங்ஸ்களில் 809 ஓட்டங்களைச் சேர்த்திருக்கிறார்.

இரண்டு டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்து அணி நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது, இந்தத் தொடரின் முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி அபார வெற்றியைப் பெற்றது.

அதையடுத்து தற்போது நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட்டில் தனது முதல் இன்னிங்ஸில் விளையாடிய இங்கிலாந்து 8 விக்கெட்டுகளை இழந்து 435 ஓட்டங்களைப் பெற்ற வேளையில் தனது இன்னிங்சை நிறைவுசெய்தது. பதிலளித்துத் துடுப்பெடுத்தாடும் நியூசிலாந்து அணி, இரண்டாவது நாள் நிறைவில் 7 விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 138 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது.

